797

புதுமை

ஆசிரியர்: கோசல்ராம்



PUDUMAI பிப்ரவரி 1959. விலை 25 காசு

PURE !! சுத்தமானது !!

PAPPA *Coffee*

பாப்பா காபி.

K. V. DHANUSH KODI NADAR, (Sole proprietor)
PAPPA COFFEE, Madras & Virudhunagar
DEPOT :- Chengleput, Ponneri, Trivellore

23 FEB 1959



தயாரிப்பாளர் :—

அரசினர் தீப்பெட்டி தொழிற்சாலை,
பெரம்பூர், சென்னை.

கிடைக்குமிடம் :—

தொழில் இலாகா விற்பனை நிலையம்,
166-A, மவுண்ட் ரோட், சென்னை-2.

முதல் கட்டம்



1958 அக்டோபர் 1-ம் தேதி மெட்ரிக் முறை எடைகளும் அளவுகளும் அமுலுக்கு வந்துள்ளன. இந்தத் தேதியிலிருந்து, இராஜ்யங்களின் குறிப்பிட்ட சில பகுதிகளில் மெட்ரிக் எடைகள் கட்டப்படி புழக்கத்துக்கு வந்திருக்கின்றன.

அதேவிதமாக, அரசாங்க இலாக்காக்களிலும், தொழில்களிலும், குறிப்பாக—பருத்தி ஆலைகள், இரும்பு-உருக்கு ஆலைகள், எஞ்சினியரிங் தொழில்கள், கனரக கெமிகல் ஆலைகள், காகிதத் தொழில்கள், சிமெண்ட் தொழில்கள், சணல் தொழில்கள் ஆகியவற்றில் மெட்ரிக் முறை அமுலுக்கு வந்திருக்கிறது.

இந்தச் சீர்திருத்தம் சிறிது சிறிதாக நாடு முழுவதும் அமுலாக்கப்படும்.

மெட்ரிக் முறை

சுலபமானது

ஒரே சீரானது

இப்போதுள்ள எடைகளும் அவைகளுக்குச் சமமான மெட்ரிக் எடைகளும்

இந்திய அரசாங்கத்தால் வெளியிடப்பட்டது

மெட்ரிக் எடை மாற்றுப் பட்டியல்

உங்களுக்குத் தேவைப்படும் - வைத்திருங்கள்

பலம்	கிராம்
1	35
2	70
3	105
4	140
5	175
6	210
7	245
8	280
9	315
10	350
11	385
12	420
13	455
14	490
15	525
16	560
17	595
18	630
19	665
20	700
21	735
22	770
23	805
24	840
25	875
26	910
27	945
28	980
29	1015
30	1050
31	1085
32	1120
33	1155
34	1190
35	1225
36	1260
37	1295
38	1330
39	1365

வீசை	கிலோகிராம்	கிராம்
1	1	400
2	2	800
3	4	200
4	5	600
5	7	000
6	8	400
7	9	800

மணங்கு	கிலோகிராம்	கிராம்
1	11	200
2	22	400
3	33	600
4	44	800
5	56	000
6	67	200
7	78	300
8	89	500
9	100	700
10	111	900
11	123	100
12	134	300
13	145	500
14	156	700
15	167	900
16	179	100
17	190	200
18	201	400
19	212	600

கண்டி	கிலோகிராம்	கிராம் (100 கிராம் சுத்தமாக)
1	223	900
2	447	700
3	671	600
4	895	400
5	1119	300

1 கிலோகிராம் = 1,000 கிராம்

DA 58/247 (i) TNP



பார்ஸலை குழந்தை போல்
அணைத்துச் செல்வோம்

எந்த லாரியும் சாமான்களைச் சுமந்து செல்லும். ஆனால் டி. வி. எஸ். லாரி தான் குறிப்பிட்ட நேரத்திற்கும், பாதுகாப்பிற்கும் பெயர் போன்றது. பதினான்கு வருட முதிர்ந்த தேர்ச்சியில் பண்படைந்த 2750 (எமது) சிப்பந்திகள் உங்கள் சாமான்களை கவனித்து காப்பாற்றிச் செல்கிறார்கள். லாரி செல்லும் இடங்களில், இடவசதிக்கு ஏற்றாப்போல், நமது பண்டக சாலைகள் உங்கள் சாமான்களை பாதுகாக்கின்றன.

ஸதர்ன் ரோட்வேஸ்
ப்ரைவேட் லிமிடெட், மதுரை

TVS-SR (77)

சிறந்தோர் அணியும்

மாலு

பாத அணிகள்

- சௌகரியத்தன்மை
- இயற்கையான மிதி அடி
- அழகு
- நீடித்த உழைப்பு

ஆகிய காரணங்களுக்காக

அரசினர் பாத அணி நிலையம்,

பெரம்பூர், மதராஸ்

கிடைக்குமிடம்:—

தொழில் இலாகா விற்பனை நிலையம்,

166-A, மவுண்ட் ரோட்,

சென்னை-2.

Sista's MF-4

மோட்டார் சைக்கிளில் போகும் மனிதர்

ஆண்மையும் வெற்றியும் திகழ, மக்களின் மனத்தைக் கவருகிருர் எங்கு போனாலும் சரி இவர் மக்களின் கவனத்தைக் கவருகிருர். கம்பீரத்துடன் எல்லோரையும் தாண்டி முன்னேறுகிருர். இவர் போன்றவர்க்கே வெற்றி தயாராகக் காத்திருக்கிறது.

AE 372

ராயல் என்பீல்ட்

படிப்படியாக தயாரிப்பவர்கள்:
என்பீல்ட் இந்தியா லிமிடெட்,
மதருஸ்-19

பூரண விற்பனையாளர்கள்:
தி மதராஸ் மோட்டார்ஸ்
பிரைவேட் லிமிடெட்,
மதருஸ் - பெங்களூர் - டில்லி

பொருளடக்கம்

ஆசிரியர் : கோசல்ராம் M.L.C.,

"மாற்றி வையம் புதுமை யுறச்செய்து
மனிதர் தம்மை அமரர்க ளாக்குவோம்"

மணி 2 | பிப்ரவரி 1959 | ஓசை 7

அரசியல் : பக்கம்

தேவரின் காவடி! (கார்ட்டூன்) ... 8
ஆச்சாரியார், முதல் நம்பர் !... ... 9
வக்கில் தான்! ... 10
தலையால், தலைக்கு ஆபத்து! ... 11
உலகம் போகும் போக்கைப் பார்!
(கார்ட்டூன் கதம்பம்) ... 12

தொடர் கதைகள்:

காணுமல் போன காதலி! வல்லிக்கண்ணன் ... 33
பிறப்பும், வளர்ப்பும் ஆரெஸ்ஸஸ் ... 59

கதைகள்:

சிதையாத சித்திரம் ஜேயார்சி. தியாகன் ... 44
பஞ்சாமியின் போனஸ் பாண்டு ... 52
எற்றுக்கோ என்பிறப்பு ?
திருவிடைமருதூர் சேஷாத்ரி ... 65
தாரம் தந்த தாலி குமரி அனந்தன் எம்.ஏ.... 73
காம்பிலிதேவன் சீகம்பட்டி ராஜகோபாலன் ... 81
ஏழை அல்லி ... 89

கட்டுரைகள் :

போதுமென்ற மனமே பொன் செய்யும்
ஜெயன் ... 15
இவர்தான், எடின்பரோ கோமகனுர் ... 17
புவனேஸ்வரத்தில் 'பென்' விழா!
கன்னிக்கண்ணன் ... 19
காதல், காதல், காதல் ! புதுமைச்சித்தன் ... 23
விந்தை மனிதர்கள் கே. ரகுபதி ... 28

கவிதை :

வருவாளா, அவள்? புனலன் ... 79

கலைப்பகுதி :

கடன் வாங்கி(க்) கல்யாணம் ரசிகன் ... 14

'புதுமை'யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்களும், சம்பவங்களும் கற்பனையே.

தேவரின் காவடி!

[விடுதலை அடைந்த திரு. மு. ரா. தேவர் பல ஸ்தலங்களுக்குச் சென்று 'தரிசனம்' செய்து வருகிறார்!-செய்தி.]

புதுமை

ஆச்சாரியார், முதல் நம்பர்...!

சென்ற சில இதழ்களாக இந்தப் பகுதியில் சோஷலிஸத்தை எதிர்ப்பவர்களைக் கூண்டிலேற்றி விசாரித்து வந்தோம், அவர்களது வாதங்களுக்கு அறிவுப் பூர்வமான பதில்களை வழங்குவதன் வழியாக!

அதற்காகப் பெருமை கொண்டாலும், சில தலைவர்களின் (!) போக்கை எண்ணும் பொழுது, கண்ணீரும் வடிக்க வேண்டியதாக உள்ளது!

காரசாரமான எழுத்திற்கு இடம் ஏற்படுத்தும் வகையில் அவர்கள் நடந்து கொண்டு நமக்கு உதவினாலும் கூட, நாட்டிற்கு அவர்களால் ஏற்படும் தீமைகளை எண்ணுகையில், நெஞ்சம் உதிரக் கண்ணீரை வெள்ளமாக வடிக்கிறது!

மனிதன் ஏற்படுத்தியுள்ள ஆட்சி முறைகளில் இதுவரை, தலைசிறந்ததாகக் கருதப்படும் குடிஆட்சி முறையின் அடிப்படைகளுக்கெதிராகவே அவர்கள் நடத்தல் கண்டு கொதிப்பேற்படுகிறது.

'மக்களது, மக்களால், மக்களுக்காக' என்ற முழக்கத்திற்கெதிரே பிரசாரத் தம்பட்டம் அடித்து வருபவர்களை என்ன வென்றுவர்ணிப்பது என்றே நமக்குப் புரியவில்லை!

அண்மையிலே உள்ள சீனத்திலே 'கம்யூன் ஆட்சி' மலர்ந்துவிட்டது! தூரத்திலே உள்ள அமெரிக்காவிலோ செழிப்பான நாடு அமைந்து விட்டது! இடையிலே உள்ள நடுநிலைமை நாடுகளில் புதிதாக விழிப்புற்ற நாடுகளில்வறுமைபோக,ஏற்றம்பிறக்க என்ன வழி உண்டு, ஜனநாயக சோஷலிஸத்தைத் தவிர?

ஆளைக் கொல்லும் வழி அல்ல; இரத்தம் சிந்தும் முறை அல்ல; அமைதியான மாற்றம்—இது தான் காங்கிரஸின் இலட்சியம்!

நிலப்பிரச்னையோ, தொழில் மயமாக்குதலோ எதற்கும் இது பொருந்தும்!

தனி நபரை இயந்திரமாகச் செய்யும் கம்யூனும் வேண்டாம்; தனி நபர் அளவுக்கு மீறிக் குவித்து, தனி நபருலகம் அமைப்பதும் வேண்டாம்!

தனி நபரின் உரிமைகளில் கைவைப்பதில்லை; ஆனால் பொது நன்மையில் அவை குறுக்கிட அனுமதிப்பதும் இல்லை!

இதுவே புதிய பாரத, நேருஜிய சோஷலிஸம்; இதன் அடிப்படை காந்தீயம்!

இந்த இலட்சியத்தைக் கருத்தில் கொண்டு தான் 'நாஸிக்கிலிருந்து ஆவடி வழியாக நாகபுரி வரை' காங்கிரஸ் நாட்டை வழி நடத்தி

இருக்கிறது! நாடும் அதைப் பெருவாரியாக ஒப்புக் கொண்டு தேர்தல்களில் காங்கிரஸை ஆதரித்திருக்கிறது!

நாகபுரித் தீர்மானங்களில் குழப்பமெதுவுமில்லை! கராச்சியில் தீர்மானித்தவை தான், காந்திஜி ஒப்புக் கொண்டவை தான் செயலாக்கப்பட்டுள்ளன!

இதைப் புரிந்து கொண்டும், 'உலகத்தின் முதல் நம்பர் புத்திசாலி!' என்று சிலரால் போற்றப் படுபவரான ஸ்ரீமான் இராஜாஜி, நேருஜியை "பின் வாங்குக! இது வரை செய்த எல்லாக் காரியங்களையும் மாற்றுக!" என்று கூறுகிறார்!

'கொள்கைகளை மாற்றுக!' என்று கேட்டால் கூடப் புரிந்து கொள்ளலாம்! இது வரை 'கட்டிய அணைகளை யெல்லாம் இடித்துத் தள்ளுக! தொழிற்சாலைகளைத் தரை மட்டமாக்குக! சமுதாய மாற்றத்தை ஒழித்துக் கட்டுக! என்று சொல்லி, அதற்குப் 'புதிய தைரியம் வேண்டும்!' என்றும் போதிப்பவர் முதல் நம்பர் புத்திசாலியா? இல்லை... இல்லை! முதல் நம்பர் கஜனி முகமது!

பரிதாபப்படுகிறோம்'சட்டசபையிலே தீர்மானம் போடுவது கூட பலாத்கார வழி' என்று கூறுவது கண்டு!

தலைகளை எண்ணும் ஜனநாயக சகாப்தத்திலே வாழத் தகுதி இல்லாதவர்கள்! தலைகளை உடைத்த கொடுங்கோலர்கள் பரம்பரையினர்!

'சட்டசபைகள் மூலம் தீர்மானிப்பது பலாத்காரம்; இதுவரைசெய்த சோஷலிஸச் சட்டங்களையும் மாற்றுக!' என்று சொல்லும் நீரோ பரம்பரையினரை, 'சோஷலிஸத்தின் முதல் நம்பர் எதிரி!' என்று முடிவு கட்டுவதில் என்ன தவறு?

வக்கீல் தான்!

சென்ற மாதக் கேலிச் சித்திரத்தில் நாகபுரியை நோக்கிப் புறப்படும் நிதியமைச்சர் திரு. சி. சுப்பிரமணியம், பெரு நிலச்சுவான்தாரரின் சார்பிலே செல்வது போலவும், 'உங்களுக்காக நான் வாதாடுகிறேன்!' என்று கூறுவதாகவும், நாம் சித்தரித்திருந்தோம். ஆனால் நாகபுரியிலே நடைபெற்ற நிகழ்ச்சிகளின் வேகத்திலும், சூழ்நிலையின் பரபரப்பிலும் மதிப்பிற்குரிய நிதி அமைச்சர் தனது கட்சியை விட்டு எதிர்க் கட்சிக்கு வாதாடி விட்டார்! அறிந்தோ, அறியாமலோ செய்யப்பட்ட இம்மாற்றத்திற்காக நமது பாராட்டுகள்.

நமது நேயர்களில் சிலருக்குச் சந்தேகம், நாம் திரு. சுப்பிரமணியத்தை வக்கீலாகச் சித்தரித்தது சரிதானா? என்று! நேயர்களின் சில கடிதங்கள் இந்த ஐயத்தை வெளியிட்டுள்ளன!

ஐயமேதுமே வேண்டாம் — அவர் அசலான வக்கீல்தான், என்பதில்!

தொழிலால் வக்கில்! பிறகு அரசியலில் (1952க்குப் பின்!) முதலில் புதுக் கல்வி முறையின் — அவரது அரசியல் குரு புகுத்திய முறையின் 'சீனியர்' வக்கில்! அதன் பிறகு அக்கல்வி முறைக்கு எதிராகப் பொது மக்கள் தீர்ப்புச்சொன்னபொழுது வாய் திறக்க வாய்ப்பில்லாது போன வரட்சி வக்கீல்!

நிலச்சீர்திருத்தப் பிரச்னையில் ஹைதராபாத் கூட்டத்தில் நிலவுடைமை உச்சவரம்பிற்கு எதிரான வக்கீல்! அகில இந்திய காங்கிரஸின் சப் - கமிட்டியில் **யாமறிவோம்** பராபரமே!

தலைவர் நேருவின் தீவிரமும், சோஷலிஸ சக்திகளின் பலமும், நாகபுரியிலே வெள்ளமாகப் பெருகி ஓட அதிலே ஹைதராபாத்'கேஸ்' கட்டின் 'நோட்ஸை' எல்லாம் மிதக்க விட்டு விட்டார், இந்த வக்கீல்!

இவர் 'வக்கீல்' என்று அன்று சொன்னோம்! 'வக்கீல் தான்' என்று கூட ஒரு அழுத்தச் சொல் போட்டு இன்று சொல்கிறோம்!

ஹைதராபாத்தில் அவரது வாதங்களை வரப்பிரசாதமாக வர்ணித்துத் தலையங்கங்கள் எழுதியவர்களுக்குத் தான் நாகபுரியிலே அவர் நடந்தவிதம் திகைப்பைத் தருகிறது, நமக்கல்ல!

நமக்குத்தான் நன்றாக ஆட்களை 'அளக்க'த் தெரியுமே?

★

தலையால், தலைக்கு ஆபத்து!

தலைக்கு, தலையாலேயே ஆபத்து வந்திருக்கிறது! நாம் குறிப்பிடுவது தபால் தலையினால், பத்திரிகைகளின் தலைக்கு வந்துள்ள தலையாய ஆபத்தைத்தான்!

இதுவரை மாத, வாரப் பத்திரிகைகள், தபால் இலாகாவில் பதிவு செய்துகொண்டு ஒவ்வொரு பிரதிக்கும் 2 ந.பை. தபால் தலை ஒட்டித் தபாலில் அனுப்பிவந்தன!

சுமார் 20 ஆண்டுகளுக்கு மேலாக அனுபவிக்கப்பட்டுவந்த இந்த உரிமையின் தலையில் கை வைக்கத் தபால், தந்தி இலாகா முடிவு செய்துள்ளது!

பிரசுரிக்கப்படும் மொத்தப் பக்கங்களில் (விளம்பரங்களையும் சேர்த்து) பாதிப் பக்கங்களுக்குச் செய்திகள், கட்டுரைகள் பிரசுரம் செய்தாக வேண்டும் என்று இத்தனைநாள் சட்டத்திலே இருந்தும் அமுல் செய்யப்படாத விதியைக் கண்டிப்பாக அமுல் செய்து, இந்த விதிக்குப் புறம்பாக விஷயங்களைப் பிரசுரிக்கும் பத்திரிகைகளின் தபால் சலுகையை ரத்துச் செய்கிறார்கள்!

இதனால் தமிழகத்தின் எல்லா மாத, வாரப் பத்திரிகைகளும் நிச்சயம் பாதிக்கப்படும்.

தபால் தலையால், பத்திரிகைகளின் தலைக்கே ஆபத்து வரலாம்! ஆயிரக்கணக்கான சந்தாதாரர்களுக்குப் பிரதிகளை அனுப்புபவர்கள் ஒவ்வொரு பிரதிக்கும் 6 ந. பை. அதிகமாகச் செலவு செய்தாக வேண்டும்!

தபால் துறைத் தலைமை அதிகாரிகள் இந்நிலையைப் புனராலோசனை செய்து விதியை மாற்றிக்கொள்ள வேண்டிக் கொள்கிறோம்!

புதிய, இளம் பத்திரிக்கைகளின் மூடு விழாக்களை அரசாங்கம் விரும்பாது என்றே கருதுகிறோம்! அத்துடன் 'இதைத்தான் பிரசுரிக்க வேண்டும்!' என்று ஆசிரியரின் உரிமையில் கை வைக்கும் விந்தையை யாரும் ஒப்புக் கொள்ள முடியாது என்பதையும் உணர்வார்கள் என நம்புகிறோம்!

நாட்டின் இலட்சக் கணக்கான எல்லாப் பத்திரிக்கை நேயர்களும் இது பற்றிய கண்டனக் கடிதங்களையும், தந்திகளையும் 'போஸ்ட் மாஸ்டர் ஜெனரலுக்கு' அனுப்பித் தங்கள் கடமையைச் செய்ய வேண்டுகிறோம்!

கொள்கை வேற்றுமைகளைக் களைந்து எல்லாப் பத்திரிக்கைகளும் ஒரே குரலாக இக்கொடுமையை எதிர்த்துப் பேசவும் வேண்டுகிறோம்!

அறிவிப்பு.

1. 'புதுமை'க்குக் கதை, கட்டுரை அனுப்புபவர்களும், கடிதங்கள் எழுதுபவர்களும், 'ஆசிரியர்' என்றே முகவரியில் எழுத வேண்டும். அவரது பெயரைக் குறித்தல் கூடாது.

2. சந்தா, பில், விளம்பரத் தொகைகள் அனுப்புபவர்களும் அது குறித்துக் கடிதங்கள் எழுதுபவர்களும், 'நிர்வாகி' என்றே குறிப்பிடல் வேண்டும்.

3. ஆசிரியர், நிர்வாகி ஆகியோரின் பெயரைக் குறித்து எழுதுதல் கூடாது.

—நிர்வாகி.


பூ.. இது எம்மாத்திரம்
மூன்றாவது திட்டம்

உலகம் போகுது


விலவாசி
ஐயோ.. கனவுலே காடியா வருதே...
டல்லஸ்
எப்ரல் மாதம் முதல் டெல்லியில் டெலிவிஷன் காட்சி ஆரம்பமாகலாம்
கேஸ்கர் டெலிவிஷ
இன்ஸ்டிட்யூட்
டேய்.. தயவு செய்து கீழே இறங்குடா..

இந்தியாவுடன் ரஷ்யாவும்
பாக்.பெறும் ராணுவ உதவியை
எதிர்க்கின்றன
ரஷ்யா
அயூப்
இந்தியா
உழைப்பே வாழ்வின் ஆதாரம்
- ஸ்ரீ காமராஜ்
1959-ம் வருட ஆரம்பத்திலே
யே உலகை அழிக்கும்
அவுன்ஸ் கிருமிகள் போது
மென்று செய்தி வந்தி
ருக்கிறதே....
உன் கண்ணீரை
ஈ.வெ.ராவிற்கு புதிய புதிய
ஐடியாக்கள் பிறந்தபடியே
இருக்கின்றன..
!!!

கலைப்பகுதி

விஜயாவின்

கடன் வாங்கி(க்) கல்யாணம்!

'கட, கட' என்று உருண்டோடி வந்த ரூபாய் நாணயம் முகமன் வழங்க, 'கடன் வாங்கி (க்) கல்யாண சாதம் சாப்பிடடா, மனிதா!' என்ற இசை முழங்க, கதை 'சக்கரபாணி, சதாசிவப் பிரம்மம், பிரசாத்' தயாரித்தது என்ற அறிவிப்புத் தெரிந்ததும், 'சரிதான்! சாதாரண ரசிகனின் மனநிலைக்கு விருந்து படைப்பார்கள், கலைச்சிறப்பும், கருத்துச்சிறப்பும் இல்லாது போய்விட்டாலும் கூட' என்று எண்ணியது சிந்தனை!

'கல்யாணம் பண்ணிப்பார்,' 'மிஸ்ஸியம்மா' இவற்றின் தொடர்ச்சிதான் க. வா. கல்யாணம்.

'சஸ்பென்ஸும்,' 'கிளைமாக்ஸ் ஸீன்களும்' ஏராளம் உண்டு. நாற்காலியின் முனைக்கு நம்மைத் தள்ளும் அளவுக்கு இல்லாவிட்டாலும், நாற்காலியை விட்டு எழுந்திருக்க விடாத அளவு கவர்ச்சி உண்டு!

கடன் வாங்குவதைக் கலையாக வளர்த்து விட்ட தருமலிங்கத்தின் சூழ்ச்சிகளை எதிர்த்து மூன்று ஜோடிக் காதலர்கள் நடத்தும் மும் முனைப் போராட்டம் தான், கதையின் சாரம்!

இதிலே முதல் ஜோடி—அரசியல் தொண்டனாகவும், 'அளப்ஸ்' ராஜாவாகவும், அஜீர்ண விரோதிச் சாமியாராகவும் தோன்றும் ஜெமினி கணேசன்—அவரது காதலி சாவித்திரி இருவரும் கணேசனது வேடங்களில் வரிசையிலே கடைசியாக இருக்கும் வேடம், பொருத்தத்தில் முதலிடம் பெறுகிறது!

சாவித்திரி, வழக்கமான கவர்ச்சிப் புன்னகைகளைக் கொஞ்சம் அதிகமாகவே சிந்தி நடித்து இருக்கிறார்.

இரண்டாவது ஜோடியான தங்கவேலு, சரோஜாவைத் தான் 'கதாநாயகன், கதாநாயகி' என்று அழைக்க வேண்டும்! தங்கவேலு போடும் திட்டத்திற்குத் தானே கணேசன் வேடம் போடுகிறார்! 'ஆட்டோ...மயில்' என்று அழுத்திச் சொல்லும் பொழுதும், மொட்டைத் தலை என்று எல்லோரும் விழிக்கும் பொழுது 'டோப்பா'வைக் கழட்டுகையிலும் சிரித்துத் தான் ஆக வேண்டும்!

மூன்றாவது ஜோடி—ஜமுனா, ராமச்சந்திரன். ஊமையாக நடிக்கையில் காதலன் பாடும் பாட்டைக்கேட்டு உள்ளம் மகிழ்வதையும், அவன் பார்த்து விடாமல் உடனே முகபாவத்தை மாற்றிக் கொள்வதையும் சிறப்பாகச் செய்து விட்டார் ஜமுனா!

பிற நடிகர்கள்—தங்கள் பாணிகளை விடாது நடித்து இருக்கிறார்கள்!

பாடல்கள் இனிமையான மெட்டுக்களை வழங்குகின்றன. 'காலமில்லாத காலத்திலே!', 'தூத்துக்குடி சாத்துக்குடி' 'காசிக்குப் போனேனே'—'பிரபலமாகலாம். 'ராம ராம சரணம்' சிறந்த பாடல்.

கதைக்குள்ளே கதையாக இரண்டு நாடகங்கள்; வர்ணத்தில் எடுக்கப்பட்டுள்ள நாடகம் நெஞ்சையள்ளுகிறது! 'நளதமயந்தி' நாடகம் சுமார் ரகத்தைச் சார்ந்தது.

'கடன் வாங்கி வாழ்க்கையை நடத்து!' என்ற உபதேசம் பொருந்தாதது தான்! என்றாலும் கவலைகளை மறக்க கடன் வாங்கியாவது இக்நகைச் சுவைச் சித்திரத்தைப் பார்த்து விடுங்கள், என்று நான் பலமாகச் சிபாரிசு செய்கிறேன்!

—"ரசிகன்"

போதுமென்ற மனமே பொன் செய்யும்

ஜெயன்

ஆசையை வெறுக்க வேண்டுமென்ற உபதேச மொழிகளைக் கேட்கிறோம். அதன் அபாய விளைவுகளைப் பல நூல்களில் படிக்கிறோம். ஆனால் ஒவ்வொரு மனிதனும் பலவிதமான ஆசையினால் கட்டுண்டிருக்கிறான். மண்ணின் மேல், பெண்ணின் மேல், புகழின் மீது நாம் கொள்ளும் பெரும் ஆசையால் எத்தனையோ தீச்செயல்களையும், நற்செயல்களையும் புரிகிறோம். நற்செயல்கள் தீய ஆசையால் செய்யப்படும்போது பயனற்றவைகளாகின்றன. லோகாதய வாழ்வில் ஆசை இல்லாத மனிதனே இல்லையென்றுசொல்லிவிடலாம். பக்தி வழிபாட்டிற்கு இந்த ஆசை குறுக்கே நிற்கிறது. சில சமயங்களில் ஆசையினால் உந்தப்பட்டுச் செய்யும் காரியங்கள் விபரீத விளைவுகளில் கொண்டு விடுகின்றன.

ஓர் சிகை அலங்காரத் தொழிலாளி பக்கத்திலிருந்த காட்டிலுள்ள ஒரு மரத்தின் கீழ் போய்க்கொண்டிருக்கும் போது 'ஐந்து தவலை தங்கம் வேண்டுமா?' என்ற குரல் கேட்டுத் திரும்பி அங்குமிங்கும் பார்த்தும் ஆள் ஒருவரையும் காணாதவனாய், தங்கத்தின் மீது ஆசைப்பட்டு 'வேண்டும்' என்ற பதில் கூறிவைத்தான். 'தங்கம் உன் வீட்டிற்கு வரும், நீ அங்கே போ!' என்ற குரல் கேட்டதும் அம்பட்டன் வேகமாக விரைந்து வீட்டையடைந்தான். வீட்டுக்குள் ஐந்து தவலைகளில் தங்கம் இருப்பதைக் கண்டான். ஆசை மேலீட்டால் அவைகளைத் திறக்கையில் ஐந்தில் ஒரு தவலையில் பாதியளவே தங்கம் இருந்தது. அவன் மனம் வேகமாய் வேலை செய்யத் தொடங்கியது. குறைவாய் இருந்த தவலையையும் தங்கத்தினால் நிரப்பிவிட ஆசைப்பட்டான். ஆகவே அவன் தன்னிடமுள்ள பொன் வெள்ளி ஆபரணங்களை யெல்லாம்விற்றுத் தங்கமாக்கி அந்தத் தவலையில் போட்டான். ஆனால் தவலை அப்படியேதான் இருந்தது. தான் சேமிக்கும் பொருளை யெல்லாம் தங்கமாக்கி தவலையினுள் போட்டு வந்தான்.

சிக்கிரம் தவலையை நிரப்பிவிட வேண்டுமென்ற ஆசையால் குடும்பத்தையே பட்டினி போட்டும் சேமித்தான். தான் சேவை செய்த அரசனிடம் தன் வருமானம் குடும்ப சம்ரக்ஷணைக்குப் போதாதென்று விண்ணப்பிக்கவே அரசனும் அவன் சம்பளத்தை இரண்டுமடங்கு அதிகரித்தான். அதிகப் பணத்தைக் கண்ட தொழிலாளிக்கு ஆசை மீறவே

செலவுகளை மிகவும் கட்டுப்படுத்தி பணத்தைஅப்படியே தங்கமாக்கி தவலையினுள் போட்டு வந்தான். மாயத் தவலை நிரம்பியபாடில்லை. தவலையை நிரப்பும் ஆசையில், ஒழிந்த வேளையில் பிறரிடம் யாசிப்பான். வருவாய் நாளுக்கு நாள் அதிகரித்ததே ஒழிய இழி வாழ்வு வாழ்ந்த அவன் நிலைமையும் நாளுக்கு நாள் பரிதாபகரமாகிக் கொண்டு வந்ததைக் கண்ணுற்ற அரசன், 'இருமடங்கு சம்பளம் வாங்கிய பின்னரும் நீ திருப்தி யடைந்தாய் தெரியவில்லையே! முன்பிருந்த சந்தோஷக்களை உன் முகத்திலில்லை. வாட்டமுற்று வருகிற உனக்கு ஐந்து தவலை தங்கம் கிடைத்து விட்டதா ?' என்று கேட்டான். தொழிலாளி ஆச்சரியப்பட்டவனாய், அரசனுக்கு இவ்விஷயம் எப்படித் தெரியவந்தது என்று வினவினான். அரசன் தானும், 'முன்னொரு சமயம் அந்த மரத்தடியில் 'ஐந்து தவலை தங்கம் வேண்டுமா ?' என்ற குரல் கேட்டு 'அது புதைத்து வைக்க வேண்டிய பணமா, அல்லது செலவு செய்யக் கூடிய பணமா' என்று திருப்பிக் கேட்டதும், யாதொரு பதிலும் தனக்குக் கிடைக்கவில்லை என்றும் சொல்லி, தவலைத்தங்கம் பெறப் பெற்றவர்கள் யாரும் சந்தோஷமாயிருக்க முடியாது. அதை யாரும் செலவு செய்து அனுபவிக்க முடியாது' என்று மொழிந்தான். தொழிலாளி சிந்தனை செய்யத்தொடங்கி தவலைகளைத் திருப்பிக் கொடுத்துவிடத் தீர்மானித்தவனாய், மரத்தண்டை சென்று தவலைகளைத்திருப்பி எடுத்துக் கொள்ளும்படி கூவினான். 'அப்படியே' என்று பதில் வந்தது. வீடு திரும்பிய தொழிலர்ளி தன் வீட்டிலிருந்த தவலைகள் தான் நெடுநாளாய்க் கஷ்டப்பட்டுச் சம்பாதித்துச் சேமித்திருந்த செல்வத்துடன் மாயமாய் மறைந்து விட்டதைக் கண்டு பிரலாபித்தான்.

★

AN IDEAL HOME FOR

Delicious Dishes & Courteous Service

SWEETS ARE PREPARED IN

PURE GHEE

AT

SRI RAMA NIVAS

PYCROFTS ROAD, TRIPLICANE,

MADRAS-5.

S. R. ACHARYA,
Proprietor.

இவர்தான் எடின்பரோ கோமகனர்

இந்தியாவில் தற்பொழுது சுற்றுப் பிரயாணம் செய்துவரும் எடின்பரோ கோமகன் டென்மார்க் கிரீஸ் ராஜகுடும்பங்களைச் சேர்ந்தவர். இவருடைய தந்தை - கிரீஸ் இளவரசர் ஆண்ட்ரூ; அன்னை - இளவரசி அலைஸ் (இவர் விக்டோரியா மகாராணியின் பெண்வழிப் பேத்தியாகும்.)

எடின்பரோ கோமகன் 10-6-1921ல் பிறந்தார். சீயம், கார்டன்ஸ்டன் முதலிய இடங்களில் கல்வி கற்று ராயல் கடற்படைக் கல்லூரியில் சேர்ந்தார். போர்க் காலத்தில், கடற்படையில் பதவியேற்று, பல அரங்குகளில் சிறப்பாகப் பணியாற்றினார்.

1947 பிப்ரவரியில், இவர், கிரீஸ் டென்மார்க் அரசுரிமைகளைத் துறந்து மவுண்ட்பேட்டன் என்ற பெயருடன் பிரிட்டிஷ் பிரஜையானார். 1947 நவம்பர் 20-ம் தேதி எலிஸபெத் இளவரசியைத் திருமணம் செய்து கொண்டார்.

எடின்பரோ கோமகன் சிறந்த விளையாட்டு வீரர்-மாலுமி; விமான மோட்டுவதில் வல்லவர். மக்களிடம் அன்பும் இளைஞர் முன்னேற்றத்தில் அக்கரையுமுள்ளவர்; நாவன்மையுடையவர்; பொருளாதாரத்திலும் தொழிற்றுறையிலும் பற்றுள்ளவர்.

டெலிவிஷன் மூலம் மக்களுக்கு அடிக்கடி சமூகம் தருகிறார்.

21-2-1957 மா. த. அரசி அவர்கள் இவருக்கு பிரிட்டிஷ் இளவரசுப் பட்டம் வழங்கினார்கள். இளவரசர் பிலிப்-எடின்பரோ கோமகன் பலமுறை உலகப் பிரயாணம் செய்திருக்கிறார். 21-1-59 அன்று இவர் புது தில்லிக்கு விஜயம் செய்தார். இந்திய விஞ்ஞான காங்கிரஸில், பிரிட்டிஷ் விஞ்ஞான வளர்ச்சிச் சங்கத்தின் பிரதிநிதியாகப் பங்கு பெற்றார்.

இச் சமயத்தில் இந்தியாவுக்கு விஜயம் செய்த பிரிட்டிஷ் இளவரசர்களை நினைவு கூர்வது, பொருத்தமானதாகும்.

பாரதம் வந்த பிற இளவரசர்கள்!

90 ஆண்டுகளுக்கு முன்பு, இதே பெயருள்ள இளவரசர் ஆல்ப்பிரட் இந்தியாவுக்கு விஜயம் செய்தார். அப்போது அவர் எச். எம். எஸ். கலேடியா என்ற கப்பலில் பணியாற்றிக் கொண்டிருந்தார். அந்தக் கப்பல், தூரக் கிழக்கில் ஒத்திகைக்காகச் சென்ற போது, இந்தியாவுக்கு வந்தது. இளவரசர் ஆல்ப்பிரட், விக்டோரியா மகாராணியின் இரண்டாம் புதல்வர். எடின்பரோ கோமகனுக்குத் தாய்வழி மூதாதை.

ஐந்தாம் ஜார்ஜ் மன்னர் இளவரசாக இருந்த போதும், அரியணை ஏறிய பிறகும், இந்தியாவுக்கு விஜயம் செய்திருக்கிறார். 1905-நவம்பர் 9-ம் தேதி இளவரசர் ஜார்ஜும் அவருடைய மனைவியும் விஜயம் செய்தார்கள்.

1911-ம் ஆண்டில், முடிசூடிக் கொண்ட பிறகு, மன்னரும் ராணியும் இந்தியாவுக்கு விஜயம் செய்து, தில்லியில் தர்பார் (12-12-1911) நடத்தினார்கள்.

எட்வர்டு இளவரசர் (வின்ஸர் கோமகன்) 1921-ம் ஆண்டில் இந்தியாவுக்கு விஜயம் செய்து நான்கு மாதகாலம் சுற்றுப் பிரயாணம் செய்தார்.

1942-ல் அவருடைய சகோதரர் க்ளௌஸ்டர் கோமகன், இந்திய அரங்கில் பணியாற்றும் படைகளைப் பார்வையிட இந்தியாவுக்கு விஜயம் செய்தார்.

எடின்பரோ கோமகனாரின் வரவால், இந்திய—பிரிட்டிஷ் • நட்புறவு மேலும் ஓங்கும் என்று நம்புவோமாக!

(செய்தி உதவி: பிரிட்டிஷ் இன்பர்மேஷன் சர்வீஸ், சென்னை.)

த. பெ. நெ. 297

S. சந்தோச நாடார் லிமிடெட்

இறக்குமதியாளர்களும் மொத்த வியாபாரஸ்தர்களும்

83-85, குமாரவீதி :: கொழும்பு-11.

அலுமினிய பாத்திரங்கள், சமையல் பாத்திரங்கள், எனுமல் பாத்திரங்கள், பீங்கான் வகைகள், போத்தல்கள், கடிகார வகைகள், விளையாட்டுச் சாமான்கள், வாசனைத் திரவியங்கள், பவுன்டன் பேனு, சிலேட், பென்சில் வகைகள், ஷாப்பு சாமான்கள், மற்றும் உணவு சாமான்கள் மொத்தமாகவும் சில்லறையாகவும் விலை சகாயமாக எங்களிடம் பெற்றுக் கொள்ளலாம்.

பிராஞ்சு :

போன்: 333

19, கொட்மலே ரோடு,

நாவலப்பிட்டிய.

ஏஜன்ட்ஸ்:

போன்: 3262 த. பெ. நெ. 2345

S. சந்தோஷ நாடார் & சன்

1/4, ஈவனிங் பஜார் :: :: P. T. மதருஸ்.

&

37, ஹைரோடு,

திருநெல்வேலி ஜங்ஷன்.

புவனேசுவரம்! கேட்பதற்கு எவ்வளவு இனிமையாக இருக்கிறதோ, அதைப் போன்று பார்ப்பதற்கும் மிக அழகாக விளங்கும் "பூத்து மலரும்" ஒரு புதிய நகரே இது. இந்த நகர் ஓரிஸ்ஸா ராஜ்யத்தின் புதிய தலை நகராக விளங்குகிறது: புண்ணிய க்ஷேத்திரங்கள் நிறைந்துள்ள ஒரு புனிதமான நகரம் என்பது புவனேசுவரம் என்ற பெயரிலேயே பொதிந்திருக்கிறதல்லவா? உண்மையில் புவனேசுவரம் ஒரு "புண்ணியேசுவரம்" தான். கோயில்களும், குளங்களும், கலைகளும், வளங்களும் நிரம்பிய புவனேசுவரம்இன்று, நீர்வளமும், நிலவளமும், கலைவளமும், சிலைவளமும்நிறைந்த ஓரிஸ்ஸா ராஜ்ஜியத்தின் தலைநகராக காட்சியளிக்கிறது.

ஓரிஸ்ஸாவைப் பற்றி ஒரு சில வார்த்தைகள் சொல்லித்தான் ஆக வேண்டும். பண்டைக் காலத்தில் புகழ் பெற்று விளங்கியகலிங்கதேசமே இன்று ஓரிஸ்ஸாவாகத் திகழ்கிறது. ஓரிஸ்ஸாவின் பழம் பெருமையையும், புகழையும் பூரி, ஜகன்னாதம், புவனேசுவரம், கோனாரக் போன்ற இடங்களில் காட்சியளிக்கும் சிற்பங்களிலும், சிலைகளிலும் இன்றும் காணலாம். கோனாரக் சூரியாலயத்தில் (Sun Temple) காணப்படும் சிற்பமும், சிலைகளும் கற்களில் காணப்படும் கைவண்ண வேலைப்பாடுகளும், பாரதத்தின் பண்டைய சிற்பக்கலையின் பெருமையை பிரதிபலித்துக் காட்டிக் கொண்டிருக்கின்றன. நீர்வளமும், நிலவளமும் பெருகிய இந்த ராஜ்ஜியத்தின் மத்திய பாகத்தில் ஓடும் மகாநதி இந்தியாவின் மிகப் பெரிய நதிகளில் ஒன்று. இதை இந்த ராஜ்ஜியத்தின் முதுகெலும்பு என்று சொல்லுவதில் தவறேதுவுமில்லை. காடுகளும், பல்வித கனிப் பொருட்களும், நிறைந்திருக்கும் இந்தப் பிரதேசத்தில் எதிர் காலத்தில் தொழில் வளம் நிறைந்த ஒரு ராஜ்ஜியமாக திகழ்வதற்கான அறிகுறிகள் காணப்படுகின்றன.

பல சின்னஞ்சிறு சுதேசிமன்னர்களிடமும், வங்காளம், பீஹார், ஆந்திரம், மத்தியப் பிரதேசம், போன்ற ராஜ்யங்களிலுமாகச் சிதறிக்கிடந்த ஓரியர்கள் வாழ்ந்த பகுதிகள்தான் இன்று ஒன்று சேர்ந்த ஓரிஸ்ஸா ராஜ்ஜியமாக

விளங்குகிறது. ஹிராகுட் அணைக்கட்டும், ரூர்க்கலா எஃகுத் தொழிற் சாலையும் இந்த ராஜ்ஜியத்தின் எதிர்கால சுபிட்சத்தின் திறவுகோலாகத் திகழ்கிறது என்றால் அதில் வியப்பொன்றுமில்லை. கட்டாக் என்ற நகரம்தான் இந்த ராஜ்ஜியத்தின் பெரிய நகரம். சமீப காலம் வரை தலைநகராகவும் விளங்கிய நகரம். இதன் ஜனத்தொகை ஒரு லட்சத்திற்கு சற்று அதிகமானது. புவனேசுவரம் பூத்து மலரும் ஒரு புதிய நகரம். இது இப்போது ஒரிஸ்ஸாவின் புதிய தலைநகரமாக திகழ்கிறது என்று மேலே குறிப்பிட்டுள்ளேன். இந்த நகரம் இன்னும் ஓரிரண்டு ஆண்டுகளில் இந்தியாவின் சிறந்த நகரங்களில் ஒன்றாக விளங்கும் என்பதற்கு அதன் அழகான அமைப்பும், நகரத் திட்டமும் சான்றாக விளங்குகின்றன. அவ்வளவு அழகாகவும், அற்புதமாகவும் திட்டமிடப்பட்டுள்ளன. இந்தத் தலைநகரில்தான் "பென்" (PEN) ஸ்தாபனத்தின் ஆதரவில் ஐந்தாவது அகில இந்திய எழுத்தாளர் மகாநாடு நடைபெற்றது. இதை ஒரு மகாநாடு என்று சொல்வதைவிட ஒரு மாபெரும் "பென்" விழா என்று சொல்லுவதுதான் பொருந்தும். இந்த விழாவில் கலந்து கொள்ளுமாறு அழைக்கப்பட்டதின் பேரில் தமிழ்எழுத்தாளர் சங்கத்தின் ஒரே பிரதிநிதியாக சென்று வரும் சந்தர்ப்பம் எனக்கு கிடைத்ததை ஒரு அரிய வாய்ப்பாகக் கருதுகிறேன். ஒரு எழுத்தாளன் பல வருடங்கள் புத்தகங்கள் மூலம் படித்துத் தெரிந்து கொள்ளும் விஷயங்களை ஓரிரு தினங்களிலேயே தெரிந்து கொள்ள முடிந்ததே அதற்குக் காரணம். எனவே தான் இதை ஒரு அரிய வாய்ப்பு என்று குறிப்பிட்டேன்.

அநேகமாக சென்ற மூன்று வருடங்களாக தொடர்ந்தாற்போல் சர்வதேச, அகில இந்திய எழுத்தாளர் மகாநாடுகள் சிலவற்றில் கலந்துகொள்ளும் ஒரு பாக்கியம் எனக்குக் கிடைத்தது. 1956 டிசம்பர் மாதம் புது டில்லியில் நடைபெற்ற முதல் ஆசிய எழுத்தாளர் மகாநாடு, 1957 டிசம்பர் மாதக் கடைசியில் கல்கத்தாவில் நடைபெற்ற அகில இந்திய எழுத்தாளர் மகாநாடு ஆகியவை குறிப்பிடத்தக்கவை. சென்ற வருடம் அதாவது 1958 டிசம்பர் மாதம் இறுதியில் சென்னையிலிருந்து புறப்பட்டு இவ்வருட ஆரம்பத்தில் ஒரிஸ்ஸா சென்று சேர்ந்தேன். புவனேசுவ்ரம் ஒரு ராஜ்ஜியத்தின் புதிய தலைநகரமாக திகழ்ந்தாலும், அங்குள்ள ரயில் நிலையம் ஒரு பழைய, சிறிய நிலையமாகவே தான் இன்றும் காட்சியளித்து வருகிறது. "புவனேசுவரம் வந்தாய் விட்டது. இறங்குங்கள்" என்று ஒரு ஆந்திர நாட்டு சகோதரர் சொன்னபோது என்னால் நம்பவே முடியவில்லை. அவ்வளவு சிறிய நிலையமாக இருந்தது அந்த ரயில் நிலையம். இந்தச் சிற்றூர் ரயில் நிலையம் புவனேசுவர ரயில் நிலையமாக இருக்குமா என்ற ஒரு வினாக்குறி எழுந்துவிட்டதால் எனக்கு வண்டியை விட்டு இறங்க மனமில்லை. எனவே வண்டிக்குள் இருந்துகொண்டே, நடுங்கும்குளிரில் தலையை வெளியே நீட்டி எட்டிப் பார்த்ததுதான் தாமதம், மகாநாட்டுத் தொண்டர்கள் சிலர் வந்து "பென்" மகாநாட்டு பிரதிநிதிகள் இருந்தால் தயவு செய்து இறங்குவீர்களாக" என்று மிக இதமாகச் சொன்னார்கள். அப்போது தான் என் வினாக்குறி வியப்புக் குறியாக மாறி, மகிழ்ச்சிக் குறியாக உருப்பெற்றது. இந்த சிறிய ரயில் நிலையத்திலேயே மகாநாட்டு விசாரணைக் காரியாலயம் ஒன்றை அமைத்து மிக அருமையாக ஏற்பாடுகளைச் செய்திருந்தது என்னைப் போன்ற "முன் பின்" தெரியாத பிரதிநிதிகளுக்கு மிக மிக உதவியாக இருந்தது.

ரயில் நிலையத்திலிருந்தே பிரதிநிதிகளைக் காரிலே அழைத்துச்சென்று அவரவர்களுக்கென நிர்ணயிக்கப்பட்ட விடுதிகளில் கொண்டு சேர்த்தார்கள். எல்லாம் மின்னல் வேகத்தில் ஒரு நொடிப் பொழுதில் நடந்தன.

1959ம் ஆண்டு ஜனவரித் திங்கள் பூத்து மலர்ந்து கொண்டிருந்தது. அந்தப் புனிதமான தினத்தன்று அதிகாலையில் பூரி ஜகன்னாதரும், கோனார்க் அக்கினி தேவனும், மற்றும் பல ஆலயங்களும் புடைசூழ இருக்கும் புவனேசுவரத்தில் இருக்கும் ஒரு வாய்ப்பு கிடைத்ததென்றால் உண்மையில் அது பெருமைக்குரிய விஷயமல்லவா ?

நிகழ்ச்சி நிரல்படி காலை 9 மணிக்கு "பென்" விழாவுக்காக விசேஷமாக நிர்மாணிக்கப்பட்ட அலங்கார மேடைக்கு அழைத்துச் செல்ல கார் வந்தது.

நானும், ஒரு ஆந்திர நண்பர், ஒரு உத்தரப் பிரதேச நண்பர், மற்றொரு வங்காள நண்பர் ஆகிய நால்வரும் மிகக் குதூகலமாக புறப்பட்டோம். மகாநாட்டுப் பந்தலுக்கு அழைத்துச் செல்லும் வழியில் "பென்" விழாவைத் துவக்கி வைக்க வந்த நேருஜி அவர்கள் தங்கியிருந்த இடத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டு அறிமுகம் செய்து வைக்கப்பட்டோம். அங்கு நேருஜி அவர்கள் ஒவ்வொரு எழுத்தாளரையும் தனித்தனியே சந்தித்துக் கை குலுக்கி, "குசலம்" விசாரித்த காட்சி கண் கொள்ளாக் காட்சியாக இருந்தது.

"நான் பாரதப் பிரதமராக இங்கு வரவில்லை. உங்கள் சகோதர எழுத்தாளனாகத்தான் இங்கு வந்திருக்கிறேன். நீங்கள் மனம் விட்டுப் பேசலாம், நெருங்கிப் பழகலாம்" என்று புன்முறுவல் பூத்த முகத்தோடு, இளநகை காட்டி அன்புடன் கூறியது இன்னும் என் நெஞ்சை விட்டு அகலவில்லை. அறிமுகம் முடிந்ததும் பேனா மன்னர்கள் புடை சூழ டாக்டர் அரிகிருஷ்ண மேதாப் ஒரு புறமும் டாக்டர் ராதாகிருஷ்ணன் மறுபுறமும் நின்று கை கோர்க்க நேருஜி பந்தலுக்கு பவனியாக அழைத்து வரப்பட்டார். அலங்கார மேடைக்கு நேருஜியும் எழுத்தாளர்களும் வந்து சேர்ந்ததும் கூடியிருந்த மக்களிடையே ஆனந்த ஆரவாரம் ஆர்த்தெழுந்தது. கரகோஷமும் ஜெயகோஷமும் வானைப் பிளந்தன.

மகாநாட்டுப் பந்தல் உண்மையில் ஒரு பெருவிழா; இல்லை இல்லை, திருவிழா பந்தலாகவே காணப்பட்டது. நம்மூரில் தேர்த் திருவிழா நடைபெறும் காலத்தில் தேரை அலங்கரித்தால் எப்படி இருக்குமோ அப்படி இருந்தது பந்தலின் அமைப்பும், அலங்காரமும்.

மகாநாட்டையொட்டி பெரிய கண்காட்சியொன்றும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இந்தக் கண்காட்சியில் ஒரியா மொழியிலுள்ள தொன்மையான புத்தகங்களும், கையெழுத்து பிரதிகளும் காட்சிக்கு வைக்கப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது. இக்கண்காட்சியை ஒரிஸ்ஸாவின் கல்வி மந்திரி திரு. லிங்கராஜ பாணிகிரஹி அவர்கள் திறந்துவைத்து அரிய சொற்பொழிவொன்றை நிகழ்த்தினார்.

நேருஜி, மகாநாட்டுத் தலைவரான டாக்டர் ராதாகிருஷ்ணன், வரவேற்புக் கமிட்டித் தலைவர் டாக்டர் ஹரிகிருஷ்ண மேத்தாப், பென் ஸ்தாபனத்தின் ஸ்தாபக அமைப்பாளர் திருமதி சோபியாலாடியா ஆகியோர்கள் மேடைக்கு வந்ததும், பிரார்த்தனை கீதம் பாடப்பட்டது. இதை தொடர்ந்து மகாநாடு ஆரம்பமாயிற்று. தூய வெள்ளை ஆடைகள் அணிந்த மங்கையர் சிலர் அணிவகுத்து வந்து நேருஜிக்கும், மற்றுமுள்ள எழுத்தாளர்களுக்கும், மாலை அணிவித்து, திலகம் இட்டனர். திலகம் இட்ட முறையைப் பற்றி இங்கு ஒன்றை குறிப்பிடாமல் இருக்கமுடியாது. இடது கைவிரல்களை

மடித்து சிறு விரலை நீட்டி அவ்விரலின் நுனியைக்கொண்டு அனைவருக்கும் அம்மங்கையர்கள் திலகம் இட்டது உண்மையில் எனக்கும், என் போன்ற பலருக்கும் புதுமையாக இருந்தது. இதைப்பற்றி விசாரித்தபோது, இந்த முறை பெரிய மரியாதையைக் குறிக்கும் ஒரு பழக்கம் என்று தெரிய வந்தது.

ஒரிஸ்ஸாவின் முதல் மந்திரியும், மகாநாட்டின் வரவேற்புக் கமிட்டித் தலைவருமான டாக்டர் ஹரி கிருஷ்ண மேத்தாப் அகம் மகிழ எல்லோரையும் வரவேற்று அரியதொரு சொற்பொழி வாற்றினார். அவர் பேசுகையில் 'புவனேசுவரம் கடந்த ஓராயிர வருடங்களாக சரித்திர முக்கியத்வம் வாய்ந்த சம்பவங்கள் நிகழ்ந்த ஒரு சங்கமமாகத் திகழ்கிறது' என்று குறிப்பிட்டார். 'அசோகச்சக்கரவர்த்தி புத்த மார்க்கத்தில் சேர்ந்து தர்மத்தையும், அஹிம்சையையும் உலகில் போதிப்பதே தமது கொள்கை என்பதை முதன் முதலில் பறைசாற்றிய இடமும் இந்த 'புவனேசுவரம்தான்' என்று கூறி, 'எனவே இந்தப் பெரு மன்னர்களின் பெருவிழா இங்கு நடை பெறுவதும் பெரிதும் பொருத்தமானது' என்று குறிப்பிட்டார்.

அவர் மேலும் பேசுகையில் 'காலத்தை உருவாக்குவது மாமன்னர்கள் தான் என்று கூறப்பட்டு வந்த காலம் ஒன்று இருந்தது. ஆனால் அது தான் சரி என்று நான் சொல்லத் தயாராக இல்லை. உண்மையில் எப்பொழுதுமே காலத்தையும் அதன் போக்கையும் உருவாக்கியவர்கள்-உருவாக்குபவர்கள் அத்தனை பேரும்பேனா மன்னர்கள்தான் என்பதை துணிந்து சொல்லுவேன்' என்று குறிப்பிட்டதும் கரகோஷத்தின் ஒலி விண்ணைப் பிளந்தது என்று சொல்வதை விட காதைத் துளைத்தது என்று சொல்லுவதுதான் பொருந்தும்.

"பாடகனே மறக்காதே! உன்னுடைய உதட்டிலிருந்து உதிர்கின்ற ஒவ்வொரு வார்த்தையும் பிற்காலத்தில் எதிரொலித்துக் கொண்டேயிருக்கும்" என்று ரிக் வேதத்தில் ஒரு கவித் தன்மை வாய்ந்த முனிவர் குறிப்பிட்டதை எழுத்தாளர்களுக்கு எடுத்துக் காட்டி இது இன்றைய நவீன காலத்திற்கும் பொருத்தமானது என்று கூறி எல்லோரையும் இன்சொல் கூறி அன்போடு வரவேற்றது இன்றும் என் காதுகளில் ரீங்காரமிட்டுக் கொண்டு தான் இருக்கின்றது.

டாக்டர் ஹரிகிருஷ்ண மேத்தாபின் இந்த வரவேற்பு சொற்பொழிவு எழுத்தாளப் பெருமக்களுக்குக்கிடைத்தஒரு பேருரை, இலக்கிய வாசகம் என்று சொன்னால் அது மிகையாகாது. இப்படி மிகரசனையோடும், குதூகலமாகவும் மகாநாடு ஆரம்பமானதே மகாநாட்டின் வெற்றிக்கு முதற்படி யென்று தான் சொல்லவேண்டும்.

—**கன்னிக்கண்ணன்.**

(அடுத்த இதழில் முடியும்.)



காதல், காதல், காதல்!

தொகுத்தவர்: புதுமைச்சித்தன்

ஹிமயமலை கடலில் மிதந்த போதி லும், காதல் பொய்த்துப் போகாது!

—மஹாகவி பாரதியார்.

காதல் என்பதும் மற்ற பிரகிருதி சக்திகளைப் போல் ஆண்டவனுடைய சொரூபமேயாகும். காதல் என்பது ஜுரமாகவும் விவாகமென்பது அதற்கு ஒரு மருந்தாகவும் எண்ணக் கூடாது. அவ்வாறு கொண்டால் விவாகம் முடிந்ததும் ஜுரம் தணிந்து போகும். மருந்தும் ஜுரமும் கணக்குத் தீர்ந்து போகும்!

—ராஜாஜி.

எப்படிப்பட்ட காதலும் ஒரு சுய லக்ஷியத்தை—அதாவது தனதிஷ்டத் தை—திருப்தியைக் கோரிதான் ஏற்படு கின்றதே தவிர வேறில்லை!

—ஈ. வெ. ரா.

காதல் என்பது வெறும் விளையாட் டன்று; காதல் தன்னலம் நாடாது பிறர் நலன் நாடி உழைக்க எத்தகைத் தியா கத்திற்கும் உட்படத் துணிவூட்டும்.

—திரு. வி. க.

காதல் என்ற மெல்லிய கயிறு, வாழ்க்கை என்ற கனமான ஒன்றை எவ்வளவு காலம் தாங்க முடியும்!

—பேராசிரியர். வ. ரா.

ஆணில் உள்ள சிவம், பெண்ணில் உள்ள சக்தியை விரும்புவதே காதல்!

—யோகி. சுத்தானந்தர்.

பணத்தின் எல்லை, சட்டம் செய்வ தும் சாட்சி தேடுவதும்; காதலின் எல்லை, சேர்ந்து வாழ்வதும் பிரிந்து சாவதும் தவிர வேறுண்டோ!

—டாக்டர் மு. வ.

காதல் என்னும் கொள்கை, ஓர் அழகிய கனவு; லட்சியம்!

—அமரர். கு. ப. ரா.

காதல் என்பது ஒரு 'மைக்ராஸ் கோப்'; ஒரு கணத்தை ஒரு யுகமாய் பெருக்கிக் காட்ட!

—கி. வா. ஜ.

காதல், வெறும் மிருக இச்சை; பூர்த்தியாகாத மனப் பிராந்தியில் ஏற் பட்ட போதை!

—புதுமைப்பித்தன்.

காதல், எல்லாம் வல்ல எங்குமாய்ப் பரவி நிற்கின்ற ஒரு பேராற்றல் ஆகும். நீக்கமற நிறைந்திருக்கின்ற இந்தக் காதல்தான் இயற்கையின் கருவிகள் எல்லாவற்றிலும் ஆற்றல் மிக்கது!

—ம. ரா. போ. குருசாமி.

காதல் என்பது கடவுள் தன்மை; காலம் முழுதும் கடவுளைக் கருதும் பக்தியைப் போன்றது காதலின் பண்பு!

— நாமக்கல் கவிஞர்.

காதல் என்றால் என்ன? அது என்ன ஒரு பண்டமா? விலைக்குக் கிடைக் குமா? இல்லை; விலை மதிக்க முடியாத அற்புதப் பொருளா? இந்தக் கேள்வி களுக்கெல்லாம் விடை எளிதாகக் கூறி விட முடியுமா, என்ன?

—தொ. மு. பாஸ்கரத் தொண்டமான்.

காதல்! அது பணக்காரர்களின் பங்களாக்குள் ஒளிந்திருக்கும் மாய மோகினி; ஏழைகளின் எட்டாப்பழம்; அது வெறுங்கனவு; கானல் நீர்; நெஞ் சுக்குப் போதை தரும் போலலாத கள்!

"அகிலன்".

காதல் என்பது காளானைப் போன்றது; அது எங்கும் முளைக்கும்; வளரும்; அதற்கு விதை தேவையில்லை; மண் தேவையில்லை; தண்ணீர் தேவையில்லை!

—"மாயாவி"

காமத்தை இயற்கை படைத்தது; காதலைக் கவிகள் படைத்தனர்!

—"சுந்தர்"

காதலையே பெரிதென்று மனதில் கொள்வீர்: கட்டெல்லாம் தாமாகத் தகர்ந்து போகும்; சாதல் எனில் காதலர்க்குத் துச்சமாகும்: மேதினியின் அரசாக்ஷி கிடைத்திட்டாலும் மிடி மரணம் வெல்லு மொரு நிலைபெற்றாலும் யாதுக்கோ அவையெல் லாம்? காதல் தன்னை அடையாத வாழ்வுக்கோர் எல்லையுண்டோ!

—கவிஞர் தமிழ் ஒளி.

காதல் என்ற ஒன்று இல்லையேல் மனிதனும் மற்ற மிருகங்களைப் போலத்தான் வாழ்ந்திருப் பான். ஏடு இல்லை; எழுத்து இல்லை; பாடு இல்லை; பலன் இல்லை, காதல் இல்லையேல்! மனித குலத் தின் உயர்வுக்குத் தெய்வம் அளித்த வரப்பிரசாதம் காதல்!

—"கலைமணி"

நிலா ஒளியில் பளபளப்பான காரின் கதவு மேல் சாய்ந்துகொண்டு, "பெண்ணே, உன்னைக் காதலிக்கிறேன்" என்று சுலபமாகக் கூறி விட முடியும்! அது காதல் அல்ல! விளக்கேற்றக் கூட எண்ணெய் வாங்கப் பணமின்றி வறுமையில் அவ திப்பட்டுக்கொண்டு நாலைந்து குழந்தைகள் 'பசி...பசி' என்று அலறும்பொழுது அதை சகித்துக் கொண்டு, நோயுற்று நலிந்த மனைவியிடம் 'அன்பே...கவலைப் படாதே; நமக்கு நல்ல காலம் வரும்,' என்று உறுதி சொல்லத் துணிவு ஒருவ னுக்கு ஏற்படுமானால், அது தான் காதல்!

—"லக்ஷ்மி"

[illegible] தகுதிக்குப் பொருந்தாத ஒரு மனோவிகாரத் திற்குக் காதல் என்ற வடிவைக் கொடுத்து "காதல் வாழ்வே கனிரஸம் கொண்டது" என்ற தத்து வத்தை ஆண்-பெண் மயக்கத்தோடு பிணைத்துப் பலபேர் தடுமாறுகிறார்கள்: அது காதல் இல்லை; மன்மத தாபம்; இளமைத் தவிப்பு; பருவத் துடிப்பு; ஊன் ஊனை விரும்புகிற நப்பாசை!

—"சிரஞ்சீவி"

காதல் என்பது சிரிப்பும் அழுகையும் மாறி மாறிக் கலவையிடும் ஒரு உணர்ச்சிக் கலப்படம்!

—டி. கே. ஷண்முகம்.

மனிதன் காதலிக்காவிட்டாலோ — காதலை இழந்துவிட்டாலோ, வாழ்க்கையில் ஒரு பெரிய இன்பத்தை இழந்து விடுகிறான். காதல் மணம் செய்து கொண்டவர்கள் அந்த இன்பத்தை இழப்பதில்லை!

—கே. ஆர். ராமசாமி.

காதல் என்பதற்குப் பொருள் என்ன? சிரிப்பை உண்டு பண்ணாத ஒரு கேலிக் கூத்து!

—எஸ். எஸ். மாரிசாமி.

காதல் ஓர் பாலைவனம்; காதல் ஓர் மலர் வனம்; காதல் வளர் பிறைச் சந்திரன்; காதல் கானல் நீர்; காதல் ஒரு காட்டாறு; காதல் ஒரு ஜீவ நதி!

—தில்லை வில்லாளன்.

காதல் என்பது கள்ள நோட்டு: அது செலவாணியாவதில்லை!

—பரதேசி.

காதலாவது, கத்தரிக்காயாவது! எல்லாம் பணத்திற்குப் பின் தான்!

—ஐ. ரா. சுந்தரேசன்.

காதல்-புலிக்குப் பசுத்தோல் போர்த்துவது போல, காமத்திற்குத் தீட்டப்படும் வர்ணம் காதல்!

—மு. கருணாநிதி.

சொல்லப் புகுந்தால் நிலத்தைவிட காதல் அகலத்தால் பெரியது; நினைக்கப் போனால் வானைவிட உயரத்தால் உயர்ந்தது; காணப் புகுந்தால் கடலைவிட ஆழத்தால் அரிய அளவினையுடையது!

—புலவர் அழகுவேலன்.

காதலாம் காதல்; பொல்லாக் கயவர்கள் கட்டுகின்ற வேதனைக் கோட்டை; ஆங்கே விதியதன் காவற்காரன்; மேதகு கவிஞர் ஏற்றிமினிக்கிடும் குப்பைத் தொட்டி!

—பெரி. சிவனடியான்.

காதல் என்பது தெளிந்த நீர்க்குளத்தைப் போன்றது. அதில் நீராடி குளுமையைப் பெறச் செல்லும் பெண்கள் பெரும்பாலும் திரும்புவதில்லை; காரணம், அந்த நீர் நிலையின் ஆழத்தில் உயிர் பறிக்கும் முதலைகள்-ஆண்கள் பதுங்கிக் கிடப்பது தான்!

—சித்தார்த்தன்.

உடலின் துடிப்புக்கு மூச்சு எப்படியோ அப்படித்தான் ஆத்மாவின் இயக்கத்திற்குக் காதல்!

—ஜெகப்பிரியன்.

கண்ணில் தெரியாது; சொன்னால் புரியாது; பண்ணில் விளக்கடையும்; இந்த மண்ணைச் சிறப்பிக்கும் பெண் மைக்குயர்வீந்து!

—மாயாண்டித்தேவன்.

காதல் என்பது வெறும் நாடகம்; நாடகத்தில் ஆரம்பித்து நாடகத்தில் முடிவுதான் காதல்!

—க. பிரணதார்த்தி.

காதல் ரம்மியமானது; பயங்கர மானது; ஆத்ம மலர்ச்சிக்கு மிகவும் அத்யாவசியமானது; காதல் இருண்ட பாதைகளை ஒளி மயமாக்குகிறது. வெறுங்கற்களை ரத்னங்களாக மாற்று கிறது. இருவர் ஆத்மாக்களை மிகவும் நெருங்கிப் பிணைக்கும் சக்திவாய்ந்தது!

—ரதிப்பிரியா.

'உனக்குக் ாகதலிக்கத் தெரியுமா?' 'ஓ! தெரியும்!' 'என்னையா? பணத் தையா?'

—புஷ்பாவாசன்.

காதல் வானவில்லைப் போன்றது; ஆணுக்கு சூரிய ஒளியைப் போன்று பணத்தின் ஜொலிப்பும் பெண்ணுக்கு மழைத் தூற்றலைப் போன்று சாகஸத் தூற்றலும் இருந்தால்தான் அங்கே காதல் என்ற வானவில் தோன்று கிறது.

—சாளுக்யன்

பணத்தைத் துச்சமாக எண்ணும் தூய காதல் உலகிலிருந்தால், அதுவே ஸ்வர்க்கம்!

—பாபு தாஸன்.

உண்மையான காதல் புது மதுவைப் போன்றது; பைத்திய நிலையை உண்டு பண்ணுவது!

—''ஜெகதா''

காதல் என்ற குதிரைக்குத் தாவி என்ற கடிவாளமில்லாவிட்டால் அது மிதமிஞ்சிய வேகத்துடன் சென்று வழி மாறி சவாரி செய்யும்; ஆண் பெண் என்ற இருவரையும் ஏமாற்றப் படு குழியில் தள்ளிவிடலாம்: ஆனால், அதிலும் ஓரவஞ்சனை: ஆண் விழும் குழியில் நல்ல மணல் இருக்கும்; பெண் விழும் இடத்தில் ஆழமான சகதிதான் இருக்கும்!

—எஸ். என். பழனிசாமி.

காதல் என்பது விலை மதிப்பற்றது என்று நான் கருதினேன்; அது குறைந்த விலையில் எங்கும் கிடைக்கும் சர்வசாதாரணமான பலசரக்கு!

—பாபு

ஒரு ஆணுக்கும் பெண்ணுக்குப் ஏற் படும் காதல் ஒரு மணல் வீடென்றால் மிகையன்று; இந்தக் காதல் லக்ஷியப் பாதைக்கு ஒரு முட்டுக் கட்டை!

—ல. சேதுராமன்.

ஏ...காதலே! நீ ஒரே ஒரு பொருள் தான் தற்கொலைக்கு வழியின்றித்தவிக் கின்றாய்!

—சுப்பு. ஆறுமுகம்

காதலும் பைத்தியமும் ஒரு தாயின் இரட்டைக் குழந்தைகள் என்பார்கள்; அது கூடத்தவறு! அதில் கூட தாரதம்ய மிருக்கிறது. காதலும் பைத்தியமும் ஒரு தராசின் சம எடை கொண்ட இரு தட்டுகள்.

—''புதுமைச் சித்தன்''

காதல்—லட்சியவாதிகளுக்கு ஒரு தத்துவம்! அனுபவசாலிகளுக்கு ஒரு கலை! அறிவாளிகளுக்கு ஒரு வியா பாரம்!

—''காதல்'' கேள்வி-பதில்

உண்மைக் காதல் என்ற ஒன்று சினிமாவில் மட்டுமல்ல; இன்றைய நாகரீக உலகிலேயே இருக்கிறதா என்று கேட்கிறார் இருபதாம் நூற்றாண் டின் மஜ்னு!

—''தினத்தந்தி'' கேள்வி-பதில்.

கலிங்கா டியூப்ஸ்

தண்ணீர், காஸ், எஃகு, கலாய்
குழாய்கள் அரை அங்குலம்
முதல் இரண்டு அங்குலம் வரை
(B. S. S. 1387/1947 - Class A & B)

கலிங்கா டியூப்ஸ் லிமிடெட்

33, சித்தரஞ்சன் அவின்யூ, கல்கத்தா-12
(பாக்டரி : சௌத்வார், கட்டாக்)

★

கேரளம், சென்னை, பாண்டிச்சேரி, மைசூர், ஆந்திர ராஜ்யங்
களுக்குப் பிரத்தியேக வினியோகஸ்தர்கள் :

சௌத் இந்தியா கார்ப்பரேஷன் (ஏஜன்ஸீஸ்) பிரைவேட் லிட்.
2, அர்மீனியன் தெரு - சென்னை-1.

எம். சி. சுந்தரராஜன் & கம்பெனி
290, லிங்கி செட்டித் தெரு, த. பெ. நெ. 182 - சென்னை-1.

★

தென் பிராந்தியத்திற்கு ஸோல் ஏஜண்டுகள் :

டியூப் ஸப்ளையர்ஸ் (பிரைவேட்) லிமிடெட்
2, அர்மீனியன் தெரு — சென்னை-1.

விந்தை மனிதர்கள்!

கே. ரகுபதி

அன்றாட வாழ்க்கையில் நாம் சந்திக்க நேரும் பலதரப்பட்ட மனிதர்களில் சில ரகத்தினரை மறக்கவே முடிவதில்லை. காரணம், அவர்கள் செய்யும் காரியங்கள் நம் மனதில் என்றும் நிலைத்து நின்றுவிடும் படியானவைகளாக இருந்து விடுவதுதான்.

அந்த மாதிரி சாதாரண மனிதனின் செய்கைகளினின்றும் மாறுபட்ட செயலை சாதிப்பவர்களை நாம் தனிப் பிரதிருதியாகவே மதிக்க நேரிடுகிறது. நல்லதோ, கெட்டதோ, அவர்களின் செயல்களோ, பேச்சுக்களோ நமக்கு இன்பத்தையும் அளிக்கும்; அல்லது இக்கட்டில் மாட்டிவிட்டாலும் விடும். அது, அந்த மாதிரி ஆசாமிகளிடம் அகப்பட்டுக் கொள்பவர்களின் அதிருஷ்டத்தைப் பொறுத்தது.

உதாரணமாகச் சிலரை சந்தித்தோமேயானால் உண்மை 'உள்ளங்கை நெல்லிக்கனி'யாக விளங்கும்.

அதோ வருகிறாரே, அவர்தான் **ஆபத்சகாயம்.** பெயருக்கேற்றபடி ஆபத்துக் காலத்தில் சகாயம் செய்வதில் அவருக்கு இணை அவரேதான். தனக்குத் துளியேனும் சம்பந்தமிராத காரியமாக இருந்தாலும், தானே தலையில் அட்சதையைப் போட்டுக் கொண்டு ஓடியாடிய வண்ணம் இருப்பார். அருகில் வந்துவிட்டார், பேச்சுக் கொடுத்துப் பார்க்கலாம்.

"என்ன ஸார்? சௌக்கியமா?" சௌக்யமா? நானா? யாரைப் பார்த்து ஸார் இப்படிக் கேட்டீர்கள்? சோறு தண்ணியைக் கண்டு பத்து நாளாயிற்று ஸார். மனுஷன் படற கஷ்டம் உங்களுக்கு என்ன தெரியும்? என்ன அலைச்சல், என்ன அலைச்சல், அப்பப்பா! உங்க மாதிரி எல்லாம் 'பேனு'க்கு அடியிலே உட்கார்ந்து வெள்ளைப் பேப்பரைக் கருப்பாக்கி விட்டு, நாற்காலியைத் தேய்த்து நாளை எண்ணிக் கொண்டே சம்பளம் வாங்கறவன் என்று நினைத்தீர்களா? உம்... நாங்கள் உழைக்கிறவர்கள் ஸார்! நெற்றி வியர்வை நிலத்தில் விழப் பாடுபடறோம்...தெரியுமா?"

"ஸார்! கொஞ்சம் மெதுவாகப் பேசுங்கள். மூச்சு விடாமல் பேசுகிறீர்களே?"

"மூச்சு விடறதா? அதற்கு எது ஸார் நேரம்? ஒவ்வொரு நிமிஷமும் எனக்கு உழைப்பு,உழைப்பு, உழைப்புதான் தெரியுமா? உங்க மாதிரி சாயங்காலங்களில் பீச்சுக்கு போறதும், சினிமாவுக்குப் போறதும், இந்த ஜாதகனுக்குக் கிடையவே கிடையாது. நீங்களெல்லாம் சுகவாசிகள். உங்களுக்கு என்ன கஷ்டம்" வாய்புளிச்சுதோ, மாங்காய் புளிச்சதோ' என்று பேசிவிட்டுப் போய் விடுவீர்கள்"

"அப்படி என்ன ஸார் தலைபோகிற காரியம்?"

"காரியமா? நன்றாகக் கேட்டீர்கள்! நான் இல்லை என்றால் என்ன நடக்கும்? ராவ்பகதூர் ராமசாமி எலுமிச்சம் பழம் கேட்டுவிட்டார். கிடைக்கக் கூடியதா அது? எலுமிச்சம் பழத்துக்கு என்ன என்று நீங்கள் சுலபமாக நினைத்துவிடலாம். அவருக்கு இங்கெல்லாம் வாங்கினால் பிடிக்காது. அதற்காக இப்போது ஐயம்பேட்டைக்கு போய்க்கொண்டிருக்கிறேன்"

"எலுமிச்சம் பழத்திற்காக ஐயம்பேட்டை வரைக்குமா போகப் போகி

நீர்கள்? இங்கேயே வாங்கினால் என்ன ?''

"அது எப்படி ஸார் முடியும்? அவருக்குத்தான் அது பிடிக்காதே! செலவு எவ்வளவு ஆனாலும் பரவாயில்லை. சரக்கு நன்றாக இருந்தாக வேண்டும் அவருக்கு. அதோடு......என் பெண்ணுக்கு அந்த ஊரில் ஒரு வரன் 'ஸெட்டில்' பண்ண வேண்டும்...இந்த செலவிலேயே...இல்லையென்றால் நாமாக செலவு செய்து கொண்டு போய் வருவதென்றால் முடியுமா ஸார்? நீங்களே சொல்லுங்கள்.''

விஷயம் நமக்கு விளங்கி விடுகிறது. ராவ்பகதூர் ராமசாமி கேட்ட எலுமிச்சம் பழத்திற்கு ஆபத்சகாயம் அய்யம்பேட்டை போகிறார் என்றால், காரணம் இல்லாமலா போகும்?

அதோ, புத்தம் புதிய 'ப்யூக்' காரிலே வருகிறார் பாருங்கள், அவர் தான் **பரமசிவம்**. அவர் நடந்து வந்ததை நான் பார்த்ததில்லை. ஒரு நாளைக்கு ஒரு காரில் வருவார்.

"என்ன ஸார் வருகிறீர்களா, மெட்றாஸ் வரைக்கும்? மணி பதினொன்றுதான் ஆகிறது. சாப்பிட்டு விட்டுக்கிளம்பினால் சாயந்திரம் காப்பி மெட்றாஸ்லே. அங்கே ஒரு 'செவர்லே' இருக்கு. 'எக்ஸ்சேஞ்ச்' செய்து கொண்டு, காலையிலே ஊருக்கு வந்து விடலாம்''

காலணா, முதல் கிடையாது. சதா கார் சவாரிதான். ஊர் ஊராகச் சுற்றுப் பிரயாணம் செய்த வண்ணமே இருப்பார். ஆசாமிக்கேற்றபடி பேசுவார். ஓட்டைக் காரை எல்லாம் ஒண்ணாம் நம்பர் எனத்தன் பேச்சுத் திறமையால் செய்வார். வாங்கப் போகிறவரிடம் நபர் பேசுகிற விதம் எப்படித் தெரியுமா?

"இந்த வண்டி இருக்கிறதே, இது உங்களுக்கு ரொம்ப அமைந்திருக்கிறது ஸார். இதனுடைய ராசியே அலாதி சினிமா ஸ்டோர் சிங்கார வேலுக்கெஞ்சிக் கேட்டாரே, நான் முடியாது என்று தீர்மானமாகச் சொல்லி விட்டேன். பார்க்க என்னமோ இருக்கிறதே தவிர, இந்த மாதிரி 'என்ஜின்' கிடைக்கவே கிடைக்காது. 'ஜெர்மன் மேக்' ஸார்! அந்த 'டாப்'பை மாற்றி விட்டு, கிளீனா 'பெயின்ட்' வைச்சு, 'ஸீட்' எல்லாம் புதிதாகப் போட்டு, நாலு டயரை மாற்றி விட்டு விட்டால் அப்புறம் உங்களுக்குப் பைசா செலவு இல்லை......''

அதே காரை விற்கப்போகிறவரிடம் பேசுகிற விதத்தைப் பாருங்கள்...

"இது தரித்திரம் ஸார்! வந்ததிலிருந்து உங்களுக்கு ஏதாவது உருப்பட்டிருக்கிறதோ? இந்த 'என்ஜின் டைப்' ரொம்ப 'டேஞ்சர்' ஸார்! சமயத்தில் கவிழ்த்து விடும். காயலான் கடைக்குத்தான் அனுப்பலாம். ஏதோ என்னால் முடிந்தது தள்ளிவிடப் பார்க்கிறேன். நல்ல விலைக்கு போவதும், போகாததும் உங்க அதிருஷ்டத்தைப் பொறுத்தது''

இந்த விதமான பேச்சுக்குக் கண்டிப்பாய் எதிராளி கட்டுப்பட்டுத் தானே ஆகவேண்டும்? விற்கிறவருக்கு அதிக நஷ்டம் இராமலும், வாங்குகிறவருக்கு அதிக விலை கொடுத்து விட்டோமே என்று தோன்றாமலும் பேச்சிலேயே சமாளிக்கும் திறமை அலாதிதானே?

பஞ்சாமி இருக்கிறாரே, அவருடைய போக்கே அலாதியானது. எதிலும் குறை கண்டு கொண்டே இருப்பார். தனக்குத்தான் சாமார்த்தியம் அதிகம்; பாக்கி ஜனங்களெல்லாம் இன்னும் அறிவிலிகளாகவே இருக்கிறார்கள் என்ற மனோபாவத்துடனேயே வளைய வருகிறவர்.

"என்ன ஸார், புதிதாக சைக்கிள் வாங்கினீர்களா?'' என்று கேட்டுக் கொண்டே வருகிறார்.

"ஆமாம் ஸார். நூற்றிப் பத்து ரூபாய் 'செகண்ட் ஹாண்ட்' தான்"

"அடாடா, ஏமாந்து விட்டீர்களே! அறுபது ரூபாய்க்கு இதே வண்டியை நான் கேட்டு விட்டேனே? உங்களை நல்லா ஏமாத்தியிருக்கிறான்"

"என்ன ஸார் இப்படிச் சொல்கிறீர்கள்? பார்க்கப் புதிசா இருக்கு. மதிப்பு எல்லாரும் நூற்றம்பது வரைக்கும் போடுகிறார்களே"

"அதுதான் ஏமாந்து விடுகிறீர்கள்! உண்மையான மதிப்பு அறுபது ரூபாய் தான். வெறும் 'பாலீஷை'க் கண்டு நீங்கள் ஏமாந்து விடுகிறீர்கள். எனக்கு அதன் உண்மையான 'தரம்' புரியும்"

"அப்படியானால் இது..."

"அவ்வளவுதான். ஏமாந்தது ஏமாந்தாகி விட்டது. நஷ்டமோ கஷ்டமோ விற்றுத் தொலைத்துத்தலை முழுகிவிட்டு வேறு வாங்குங்கள்"

எனக்கு எப்படி இருக்கும்? அன்றிலிருந்து சைக்கிளைப்பார்க்கும்போதெல்லாம் அதிக விலை கொடுத்து விட்டோமே என்ற உறுத்தல் ஏற்பட்டுக் கொண்டே இருந்தது. அப்புறம் சில தினங்கள் கழித்து நூறு ரூபாய்க்கு அதை விற்றுத் தொலைத்தேன்.

இரண்டு நாட்களுக்கெல்லாம் கடைத்தெருவில் பஞ்சாமியை சந்தித்தேன். சைக்கிளில் வந்தார்.

"பார்த்தீர்களா? நான் வாங்கி இருக்கிற சைக்கிளை. பெறுமானம் இருக்க வேண்டும் ஸார். என்ன ஜோராகப் போகிறதுதெரியுமா? இறங்கவே மனசில்லை. 'சான்ஸாக' வந்தது. வாங்கினேன்"

"என்ன விலை? நூறு ரூபாய் இருக்குமா?"

"நூறு ரூபாயா? உங்களுக்கு மதிப்புப்போடவே தெரியலையே?. நூற்றைம்பது ரூபாய் சார்! சும்மா இல்லை. எப்படிப்பட்ட வண்டி? ம்.....ரொம்ப சாதாரணமாக நூறு ரூபாய் என்று கேட்டு விட்டீர்களே"

"சரிதான், சரிதான். நியாயமாகத் தான் வாங்கி இருக்கிறீர்கள். எனக்குத்தான் மதிப்பு போடத் தெரியவில்லை" என்று தலையாட்டிவிட்டு விடை பெற்றுக் கொண்டேன். ஒருவிதமாக இல்லா விட்டால் விட்டு விடுவாரா?

இதில் முக்கியமான ஒரு வேடிக்கை என்ன தெரியுமா? எந்த சைக்கிளை நான் நூற்றிப் பத்துக்கு வாங்கி, நூறு ரூபாய்க்கு விற்றேனே, அதே சைக்கிளை நூற்றி ஐம்பதுக்கு வாங்கி இருக்கிறார், கெட்டிக்கார நண்பர்!

இந்த உண்மையைச் சுட்டிக் காட்டி இருந்தால் அவருக்கு மூக்கு உடைபட்டிருக்கும். ஆனால் அவரிடம் பேசி மீண்டு வருவதற்கு நம்மால் இயலுமா?

இந்த மாதிரியே பிறர் வாங்கும் பொருளை எல்லாம் விலை அதிகம் என்றோ, இன்னும் நல்லதாக வாங்கி இருக்கலாம் என்றோ, ஏதாவது குறை கண்டு பிடித்துச் சொல்லி தன் சமர்த்தைத்தானே வியந்து கொள்ளும் நபர்கள்பலரை நாம்தினசரி சந்தித்துத் தான் வருகிறோம்.

பிறரை விமர்சனம் செய்யும் இந்த ரகப் பிரகிருதிகள் மாதிரி, தற்புகழ்ச்சி அன்பர்களும் உண்டு. அந்த ரக ஆசாமி ஒருவரைச்சந்திக்கலாம், வாருங்கள்.

இதோ, இவர்தான் **தாமோதரன்**. சதா தன் புகழ் பாடும் பிரகிருதி. பேசிப் பார்ப்போம்.

"என்ன ஸார்! எங்கே இப்படி...?"

"என்ன பண்றது ஸார்? எல்லாம் டாக்டர் தண்டபாணியைப் பார்க்கத் தான். ஒரு நாள் பீஸ் பத்து ரூபாய். ஏழைகளுக்குக்கட்டாது. நமக்கு அவர் தான் 'பேமிலி டாக்டர்'. செலவைப் பார்த்தால் முடியுமா? வைத்தியச் செலவே மாதம் இருநூறு, முன்னூறு ஆகிறது. சுவரை வைத்துத்தானே சித்திரம் எழுதலாம்? நம்ம மாதிரி பிரபலமாக இருக்கிறவங்க உடம்பு நன்றாக இருந்தால்தானே முடியும்? ஒரேநாளிலேநாலு 'எங்கேஜ்மெண்ட்'. ஒரு வாசகசாலையை காலையிலே திறந்து வைக்கணும். மத்தியானம் ஒரு பள்ளிக்கூட ஆண்டு விழாவுக்கு நான் தலைமை வகிச்சாகணும். வந்து கெஞ்சினான், முடியாது என்று எப்படி முகம் முறித்துச் சொல்ல முடியும்? சாயந்திரம் 'சபா பர்பாமென்ஸ்' வேறே இருக்கு, நான்தானே செகரட்டரி..."

"அப்போ, உங்களுக்குப் பொறுப்பு அதிகம் என்று சொல்லுங்கள்..."

"என்ன அப்படிக் கேட்டு விட்டீர்கள்? நான் இல்லாவிட்டால் எது

நடக்கும்? வீட்டிலே எல்லாம் அவங் தரை. ஒருத்தருக்கும் ஒண்ணும் தெரியாது. சின்ன விஷயம் பாருங்க, காலையிலே வெள்ளி டம்ளரிலே 'ஓவல்' கொண்டு வந்து கொடுத்தாள். சாப்பிட்டு விட்டு நான் அவசரமாக கிளம்பி விட்டேன். கடைக் குட்டி கமலா இருக்கே, அது டம்பளரை எடுத்து விளையாடிக் கொண்டே ரோடிலே போட்டு விட்டது. நல்ல காலம்! நான் திரும்பி வந்த போது வாசலிலேயே கிடந்தது. வெள்ளி டம்ளர் ஸார்! ஐம்பது ரூபாய் பெறும். அதோடே குழந்தை கழுத்திலே வைர நெக்லேஸை வேறே போட்டிருக்கா. இந்த நாளிலே சின்னக் குழந்தைகளுக்கு நகை போடறதே தப்பு? வாட் டு யூ ஸே?''

''ஆமாம்...ஆமாம் ரொம்ப கரெக்ட்''

''அது சரி, நீர் ஏதோ கதை எழுதறீராமே? வீட்டிலே சொன்னாள். நமக்கு எங்கே படிக்கிறதற்கு நேரம்? கிழிச்சுவை, சேர்த்துவைத்துப் படிச்சுக்கலாம் என்று சொல்லி விட்டேன். நான்கூட எவ்வளவோ 'ஆர்டிகல்ஸ்' எழுதி இருக்கேன். உயர்ந்த விஷயம். அதற்குத் தகுந்த பத்திரிகை நம்ம மாட்டிலே இல்லை. அதனாலே அனுப்பாமே வெச்சுட்டேன்''

இந்த ரக ஆசாமிகள் எப்போதும் தன் புகழ் பாடிக் கொண்டே இருப்பார்கள். எந்த விஷயமும் தனக்கு 'தண்ணீர் பட்டபாடு' என்று பேசிக் கொள்வதில் இவர்களுக்கு ஒரு மகிழ்ச்சி.

கடைசியாக ஒரு முக்கியமான ஆசாமியை சந்தித்துவிடுவோம். இவர் காரியங்களால் நல்லது எதுவும் நடந்து விடாது. வெளியூர் ஆசாமி யாராவது வழி கேட்டால் தவறான வழி சொல்லி தவிக்க விடுவதில் திருப்தியடையும் ரகத்தினர் இவர். பெயர் நமக்கு அவசியமில்லை. சினிமா ரஸிகரான அவருடைய குணுதிசயத்தை மட்டும் பார்ப்போம்.

''என்ன ஸார்! புதுப்படம் வந்திருக்கே? பார்த்து விட்டீர்களா?''

''என்ன இப்படிக் கேட்கிறீர்கள்? நான்தான் 'பஸ்டே, பஸ்ட் டிக்கட்' வாங்குகிறவன் ஆயிற்றே? எல்லாம் பார்த்தாகி விட்டது''

''எப்படி இருக்கிறது படம்? ஊரே புகழுகிறது அதை. உங்கள் கருத்து என்ன?''

''ஊர் கிடக்கு ஸார் ஊர். மட்டமான படம். இதைவிட மோசமாக எடுக்க முடியாது என்பதற்கு ஒரு உதாரணம். நான் 'ஸென்ஸார்' போர்டிலே இருந்திருந்தால் இதை 'ரிலீஸ்' பண்ணுவதற்கே விட்டிருக்கமாட்டேன்''

''என்ன ஸார் இது? எல்லாரும் ரொம்ப நன்ருக இருக்கிறது என்கிருர்கள். இரண்டு மூன்று தடவை பார்க்கிருர்கள்...''

''ஜனங்களுக்கு என்ன ஸார்? ஆட்டு மந்தைக் கூட்டம். ஒருத்தன் நன்ருக இருக்கிறது என்று சொல்லி விட்டால் நாமும் சொல்ல வேண்டும் போல் இருக்கிறது என்று நினைத்து நடக்கிறவர்கள்தானே? படுமட்டமான படம். பாதியிலேயே நான் எழுந்து வந்து விட்டேன்.''

நண்பரின் பேச்சைக் கேட்டு நான் அந்தப் படத்தைப் பார்க்கவே இல்லை. நாளுக்கு நாள் கூட்டம் அதிகரித்து 'நூருவது நாள்' விழா கொண்டாடினுர்கள். நன்ருக இல்லாத படமா நூருவதுநாள் கொண்டாடும்? பார்த்தே விடுவோம் என்று, அன்று படம் பார்க்கப் போனேன்.

முன் வரிசையில் ஒருவர் படத்தைப் பற்றி ரொம்பப் புகழ்ந்து கொண்டே இருந்தார் இன்னொருவரிடம். தான் இருபத்தைந்து தடவை பார்த்து விட்டதாகப் பெருமை யடித்துக்கொண்டிருந்தார். இருட்டில் முகம் தெரியவில்லை. ஆனுல் குரல் மட்டும் தெரிந்ததாக இருந்தது.

'இருபத்தைந்து தடவை' பார்த்த சிறந்த ரஸிகரை இடைவேளை வந்து விளக்குகள் போட்டதும் பாத்தேன். நம் பழைய கருப்பன்தான்!

எனக்கு வந்த கோபத்திற்கு அளவில்லை. அதே சமயம் அவரும் என்னைப் பார்த்து விட்டார். அசடு வழிந்த அந்த முகத்தைப் பார்த்ததும் என் கோபமெல்லாம் பறந்து போய், சிரிப்புத்தான் வந்தது.

''என்ன, இருபத்தி ஆருவது தடவையா?''

"ஹி...ஹி....அதெல்லாம் ஒண்ணுமில்லே. நண்பர் ஒருத்தர் பிடிவாதமாக இழுத்துக் கொண்டு வந்துவிட்டார். இல்லேன்னு வரமாட்டேன்...."

தன் தவறை உணர்ந்தபின் அவரை மேலும் கேட்பதில் என்ன பிரயோசனம் என்று விட்டுவிட்டேன்.

எல்லோரையும் போலத் தானும் சொல்லி விட்டால் அது அகௌரவம் என்றெண்ணி இம்மாதிரி தவருன அபிப்ராயம் சொல்லி விட்டு மாட்டிக் கொள்ளும் பிரகிருதிகள் எவ்வளவோ உண்டு.

இந்த மாதிரி 'அனுபவங்கள்' எல்லோருக்குமே சகஜமாக ஏற்படக்கூடியதுதான். 'பிரகிருதி'களிடம் தான் நாம் பழக வேண்டியிருக்கிறது.

இன்னும் எவ்வளவோ சம்பவங்களைக் குறிப்பிடலாம். ஆனல் ஒரு கருத்தை திரும்பத் திரும்பச் சொல்லிக் கொண்டே போனல், என்னையும் நீங்கள் இந்தப்'பிரகிருதி' ரகத்தில்சேர்த்து விடக் கூடும் அல்லவா?

★ ★

"விலை விவரப் பட்டியலை போன வாரம் கீழே வச்சிருந்தீங்க, இப்போ மேலே மாட்டியிருக்கீங்களே! ஏன்?"

"விலை எல்லாம் ஏறிப் போச்சே!"

மக்கள் ஆதரவு பெற்று வளர்ந்து வரும்
எமது கம்பெனி தயாரிப்புகள்!

பூஜைக்குச் சிறந்தது

மணி, விசிறி, தேவி, பசு

மார்க் சூடன்கள்.

★

சத்துள்ள உணவு

ஜூபிடர் & ஆனஸ்ட் சேமியா

தயாரிப்பவர்கள்:

ஆனஸ்ட் கார்ப்பரேஷன்,

(Regd. No. 1462)

126, சித்திரக்காரத் தெரு, மதுரை.

உரிமையாளர்: K. லெட்சுமணன்.

9. எதிர்பாராதவை

சிவபுரம் பங்களாவில் சுகமாகத் தூங்கிக் கொண்டிருந்த சவடால் சண்முகம் சொப்பனத்தில் கூட எண்ணவில்லை, பண்ணையார் அந்நேரத்திலே அங்கு வருவார் என்று. அதனால்தான் அவர் பூவுலிங்கம் பிள்ளையைக் கண்டதும் திடுக்கிட்டுத் திண்டாடினார்.

'தமது அந்தரங்கக் கோட்டைக்குள்ளே இப்படி ஒரு கோட்டான் நுழைந்து கொள்ளும்; இருள் மயமான செயல்கள் சிலவற்றைக் கண்டுவிடும்', என்று பண்ணையாரும் எண்ணியவர் அல்லர்.

பண்ணையார் கூட வந்து, அவர் அருகில் நின்று, பிறகு அவருக்குப் பின்னால் பதுங்க முயன்ற யுவதி அவருடைய மகள் அல்ல என்பது சண்முகம் பிள்ளைக்கு முதல் பார்வையிலேயே விளங்கிவிட்டது. பண்ணையாருக்கும் அவளுக்கும் மிக நெருங்கிய தொடர்பு இருக்கிறது என்பதையும் அவருடைய பார்வை எடை போட்டுக் காட்டியது.

அந்நிய மனிதர் ஒருவரைச் சந்திக்க நேர்ந்ததால் அவளும் குழப்பமே அடைந்திருந்தாள். அவள் பெரிய இடத்தைச் சேர்ந்தவள் அல்ல. பரம்பரைச் சொத்தோ, புதுப்பணமோ அவள் மேனிக்கு மினுமினுப்போ, பகட்டோ சேர்க்கவில்லை. உடல் உழைப்பு அவளுக்குத் தனி வலிமையும் வனப்பும் அளித்திருந்தது. வைரம் பாய்ந்த கருங்காலிக் கட்டையில் செதுக்கி எடுத்த பொம்மை மாதிரிக் காட்சி தந்தாள் அவள்.

'இவளிடம் பண்ணையார் மயங்கி விட்டது அதிசயமல்ல. சூழ்நிலையும் சந்தர்ப்பமும் சரியாக அமையுமானால் நான்கூட இவளிடம் மோகம் கொண்டுவிடுவேன்' என்று எண்ணினார் சண்முகம்.

இருண்ட மூலையில் அல்லது பொந்தினுள் அல்லது கல்லின் கீழே பதுங்கிக் கிடக்கும் பூச்சிகள் திடீரென ஒளிவீச்சு ஏற்க நேர்ந்தால் திணறித் தவித்து, எப்படிச் செயல் புரிவது என்று புரியாது குழம்பும் அல்லவா? அதே நிலையிலிருந்தார்கள் மூன்று பேரும்.

வல்லிக்கண்ணன்

பண்ணையார் தான் முதலில் சுதாரித்துக் கொண்டார். திடீ

ரென்று இருமல் ஏற்பட்டதுபோல் செயலாற்றினர். பிறகு தொண்டையைக் கனைத்து விட்டு, என்னய்யா இது அக்கிரமம்? பட்டப் பகலிலே இப்படித் திருட்டுத் தனமாக...' என்று மிரட்ட ஆரம்பித்தார்.

தனது தலையைத் தடவியவாறு நின்ற சண்முகம் தொடர்ந்து செவி மடலை விரல்களால் பிடித்துஇழுக்கலானர். அசட்டுத் தனமாகச் சிரித்தார். 'முதல்லே உள்ளே வந்து உட்காருங்க அண்ணச்சி. விசாரணை விளக்கம் எல்லாம் அப்புறமா வச்சுக்கிடலாம்' என்ருர்.

பூவுலிங்கம் பிள்ளை மிடுக்காக உள்ளே புகுந்தார். நாற்காலியில் உட்கார்ந்து கால்மேல் கால் போட்டுக் கொண்டு விறைப்பாக சண்முகத்தின் பக்கம் பார்வை எறிந்தார். 'ஊங்?' என்ற கேள்விக் குறிப்பு உறுமலாக உதிர்ந்தது, அவரிடமிருந்து.

சவடால் பிள்ளையின் கண்கள் வாசல் ஓரத்தில் மறைந்தும் மறையாமலும் நின்ற மங்கையைச் சுற்றி வட்டமிடுவதில் இன்பம் காண்கின்றன என்று கண்டு கொண்டதும் பண்ணையார் செருமினர். 'செல்லம், நீ ஏன் அங்கேயே நிற்கிறே? உள்ளே அறைக்குப் போயேன்' என்ருர்.

அவள் நடந்து செல்வதை, அப்பொழுது ஏற்பட்ட அங்க அசைவுகளை, மகிழ்வுடன் ரசித்தன சண்முகம் பிள்ளையின் விழிகள். அவர் செயலைப் பொறுக்க முடியாதவர் போல் சிடுசிடுத்தார் பண்ணையார்.

'என்னய்யா, என்ன கதை அளக்கப் போகிறீர்?'

சண்முகம் பிள்ளை ஏதாவது புளுகு முட்டையை உதறி விடலாம் என்று தான் எண்ணினர் முதலில். 'விறகு வண்டிக்குச் சொல்லி விட்டுப் போகலாமென்று வந்தேன்', 'கால் கை முறிந்து போனல் மட்டை வச்சுக் கட்டி பண்டுவம் பார்ப்பாரே சிவலிங்கம் அவரைப் பார்த்துப் பேச வந்தேன்' என்று ஏதாவது கயிறு, திரிக்க ஆசைப்பட்டது அவர் மனம். எனினும், முடிவில் உள்ளதை உள்ளபடி சொல்லிவிடுவதே நல்லது என்று துணிந்தார் அவர்.

'உங்கள் மகள் வசந்தாவைக் கொஞ்ச நாட்களாகக் காணேமே; அவள் இங்கே கண்டா வந்திருப்பாளோ என்று ஒரு சந்தேகம் ஏற்பட்டது...'

வார்த்தைகளை மென்று சுவைத்து அசை போடுவது போல் உச்சரித்த சண்முகத்தின் பேச்சைக் கேட்டதும், பண்ணையார் அட்டகாசமாகச் சிரித்தார். 'அருமையான தமாஷ்! அப்புறம்?' என்ருர்.

'அந்தப் பெண் தானகவே இந்தப் பட்டிக்காட்டுக்கு வந்திராது. நீங்களே அவளை உருட்டி, மிரட்டி இங்கே கொண்டு வந்து அடைத்திருக்க வேண்டும் என்று தோன்றியதனலே...'

'யாருக்குத் தோணிச்சு?'

'எனக்குத் தான்'

'உமக்கு ஏன்'யா இப்படி ஒரு எண்ணம் தோணிச்சு?' என்று குறுக்குக் கேள்வி போட்டார் பூவுலிங்கம்

தனது எண்ணத்துக்கு ஆதாரமாக அமைந்த காரணங்களை எடுத்துச் சொன்னர் சவடால். தனக்குச் சாவி கிடைத்தவிதத்தையும், பங்களாவில் பிரவேசித்து ஆராய்ந்ததன் பலனகத் தான் கண்டு பிடித்த உண்மைகளைப் பற்றியும் அவர் அறிவித்தார்.

'அப்போ நீர் ஊர் திரும்பியதும் இதை எல்லாம் சிவகாமியிடம் சொல்லத் திட்டமிட்டிருக்கிறீர்.

இல்லையா?' என்று கேட்டார் பண்ணையார். அவர் குரல் தணிந்து விட்டது.

ஆகவே சண்முகம் பிள்ளை கொஞ்சம் தெம்புடன் பேசத் தொடங்கினார். 'பின்னே? மதினி கிட்டே எல்லாத்தையும் சொல்லாம இருக்க முடியுமா?'' என்றார்.

பண்ணையார் நெடுமூச்சு உயிர்த்தார். 'சம்முகம் பிள்ளே, உமக்கு ஏன்'யா இந்த அக்கப்போரெல்லாம்?' என்று கேட்டார்.

'என்ன அண்ணாச்சி! இப்படிச் சொல்லிட்டீக? வசந்தாவைக் காணுமின்னு மதினி சோறு தண்ணி இல்லாம, அழுதுக் கிட்டே இடக்கிரு. நீங்களோ இதிலே அக்கறை காட்டுவதாயில்லை. நான் வந்து...'

'அதெல்லாம் சரிதான் வேய்!' என்று எரிச்சலுடன் கையை வீசினார் பூவுலிங்கம். 'நம்ம வீட்டிலே நிலவுகிற அமைதியைக் குலைக்கணும்கிற ஆசை உமக்கு உண்டா? எனக்கும் சிவகாமிக்கும் ஆகவிடாமல் பண்ணி, எங்க ரெண்டு பேரையும் பூனையும் நாயும் மாதிரி வாழவிட்டு வேடிக்கை பார்க்கணும் என்பதுதான் உம்ம விருப்பமா?'

'அதெல்லாம் ஒண்ணுமில்லே அண்ணாச்சி' என்று சண்முகம் இழுத்தார்.

'பின்னே உம்ம அபிப்பிராயம் தான் என்ன? இது மாதிரி விஷயம்னு நீர் போய் சொன்ன உடனேயே அவள் பிசாசாக மாறிவிடுவாளே! இது உமக்குத் தெரியாதா?' என்று பண்ணையார் கேட்டார்.

'மகளைக் காணுமின்னு மதினி படுகிற வருத்தம் சகிக்க முடியலியே அண்ணாச்சி!'

'அதுக்காக, எரிகிற தீயிலே பெட்ரோலைக் கொண்டு போய் கொட்டலாம்னு ஆசைப்படுகிறீராக்கும்? என்ன தம்பியா பிள்ளேய், அது தானு விஷயம்?'

'வசந்தா எங்கே? அதைச் சொல்லி விடுங்களேன். அப்புறம் ஒரு தொல்லையும் இராது' என்றார் சண்முகம் பிள்ளை.

பண்ணையாருக்கு எரிச்சல்தான் அதிகமாயிற்று. 'என்னய்யா நீரு ஒண்ணு! அது எனக்குத் தெரியாது, தெரியாதுன்னு ஆயிரம் தடவை மாரடிச்சாச்சு. இன்னும் நீரு வந்து...'

'அப்போ அவள் காணமல் போன மர்மம்தான் என்ன?' என்று தலையைத் தடவினார் சவடால் பிள்ளை.

'அது எனக்கு எப்படித் தெரியும்!'

'நீங்க ஏன் அவளைத் தேடுவதற்கு முயற்சி எதுவும் செய்யவில்லை?'

'என்ன முயற்சியைச் செய்ய முடியும், நீரே சொல்லும். சிவகாமியும் நீரும் எடுத்த முயற்சிகள் எல்லாம் பலன் கொடுத்து விட்டதா? நான் சோம்பலோடு இருந்ததனால் எதுவும் பலனளிக்கவில்லை என்பதற்கு!' என்று சொல்லிச் சிரித்தார் பண்ணையார்.

'நீங்கள் வீணாக ராஜாகிருஷ்ணன் என்கிற பையன் பேரிலே கோபமும் சந்தேகமும் கொண்டு ......'

பூவுலிங்கம் பிள்ளை இந்த விவகாரத்துக்குச் சீக்கிரமே ஒருமுடிவு காண ஆசைப்பட்டவர் போல், அவசரமாகக் குறுக்கிட்டார்: 'அந்தப் பையன் வசந்தாவைக் கண்டு பிடித்து அழைத்து வந்துவிட்டால், அவனே அவளைக் கல்யாணம் செய்து கொள்ளட்டும் ஐயா. எனக்கு எவ்விதமான ஆட்சேபமும் கிடையாது'

சண்முகம் இப்படி ஒரு அறிவிப்பை எதிர்பார்க்கவில்லை. பண்

ணையாரின் மனம் இந்த ஏற்பாட்டுக்கு எளிதில் இசையாது என்றே அவர் எண்ணியிருந்தார். அதனால் அவர் மீண்டும் ஆச்சர்யமும் அதிர்ச்சியும் கொண்டார்.

'நிசந்தானு, அண்ணுச்சி? நீங்க சொல்றபடி நிச்சயமாக நடப்பீர்களா?' என்று ஆர்வத்தோடு கேட்டார் அவர்.

'சத்தியமாக...இதைவிட வேறு என்னய்யா சொல்லணும்?' என்ற பண்ணையார் சிறிது நேரம் தரையையே பார்த்துக் கொண்டிருந்தார். பிறகு சொன்னுர்: 'வசந்தாவைப் பற்றி ஊர் நெடுக மோசமான பேச்சு அடிபடுது. அவள் தவறு எதுவுமே செய்யவில்லை என்ருலும், ஊர் வாயை மூட நமக்குச் சக்தி ஏது? இனிமேல் அவளை வேறே இடத்திலே கட்டிக் கொடுக்க முயற்சி பண்ணுவது வீண் வேலைதான். அவள் இஷ்டப்படி அவளுடைய காதலனோடு தான் வாழட்டுமே? நாம் குறுக்கே நிற்பானேன்?'

'அண்ணுச்சி, உண்மையில் உங்களுக்குத் தங்கமான மனசுதான். வசந்தாவும் ராஜாவும் உங்களை வாழ்த்துவாங்க. மதினியும் சந்தோஷப்படுவாங்க' என்று மகிழ்ச்சிப் பெருக்கோடு பேசினுர் சண்முகம். 'இதைத் தவிர வேறு விஷயம் எதுவும் மதினி காதை எட்டாது. என்னை நீங்கள் நம்பலாம். இப்பவே நான் கிளம்புகிறேன். முதலில் ராஜாகிருஷ்ணனைச் சந்தித்து அவனுக்கு உற்சாகம் அளிக்க வேண்டும். வசந்தா எங்கேயிருந்தாலும் சரி, அவளை எப்படியாவது கண்டு பிடித்து மதினியிடம் கொண்டு வந்து சேர்க்க வேண்டும். அப்புறம்தான் இதர காரியங்கள் எல்லாம்' என்று சொல்லி விட்டு, அவர் அங்கிருந்து வேகமாகப் புறப்பட்டார்.

சண்முகம் பிள்ளை பரபரப்போடுதான் வந்தார் ராஜாகிருஷ்ணனைக் கண்டு பேசுவதற்காக. அங்கும் அவர் எதிர்பாராத செய்தியே கிடைத்தது. இரண்டு நாட்களாக அவன் வீட்டுக்கே வரவில்லை என்ற தகவல் அவருக்கு வியப்பே தந்தது. 'எங்கே போயிருப்பான்? யாரிடமும் சொல்லிக் கொள்ளாமல் அவன் எங்கு தான் போயிருப்பான்?' என்று குழம்பியது அவர் உள்ளம். தலையைத் தடவி நிற்பது தவிர வேறென்றும் செய்யத் தோன்றவில்லை அவருக்கு.

10. விளையாட்டுப் பிள்ளை!

வசந்தாவைக் காணேம் என்று அறிந்தது முதல் ராஜாகிருஷ்ணனுக்கு ஒரே குழப்பமாகத்தானிருந்தது. என்ன செய்வது அல்லது என்ன நினைப்பது என்றே ஓடாமல், திணறினுன் அவன். வசந்தாவின் தந்தை அடித்த அடிகூட அவனுக்கு வேதனை அளிக்கவில்லை. அவள் தன்னிடம் அறிவிக்காமலே எங்கேயோ போய் விட்டாளே என்ற நினைப்புதான் அவனுக்கு உள்ளத்தில் நோவு உண்டாக்கியது. அந்நினைப்பு எழுப்பிய சந்தேகம் அவனைக் குழப்பத்தில் ஆழ்த்தியது.

அவளுக்கு அவனிடம் ஏற்பட்டிருந்த காதல் குறைந்திருக்குமோ? அவள் உள்ளத்தைக் கவரும் சிறப்புகள் அதிகமாகக் கொண்ட ஆணழகன் எவனுவது அவளுடைய வாழ்விலே குறுக்கிட்டிருப்பானே? அவன் பேரில் அவளுக்குக் கோபமோ, வெறுப்போ ஏற்பட்டிருக்கக்கூடுமோ?—அவனது

மனச்சிலந்தி இஷ்டம்போல் எண்ண இழைகளைப் பின்னிக் கொண்டிருந்தது.

ஒவ்வொருவர் ஒவ்வொன்றைச் சொன்னார்கள். எதை ஏற்றுக் கொள்வது, எதைத் தவறு என்று தள்ளுவது என்பதைத் தீர்மானிக்க முடியாமல் திகைத்தான் அவன். எல்லாவற்றுக்கும் மேலாக சண்முகம்பிள்ளை விளக்கமாக எடுத்துச் சொன்ன சந்தேகங்களும், சந்தர் உறுதியாக அறிவித்த யூகங்களும் சம வலுவுடன் முட்டி மோதி நின்றன, அவன் உள்ளத்திலே. சவடால் பிள்ளை அடித்துப் பேசியது சரியாக இருக்கும் என்று தோன்றியது சில சமயங்களில். சந்தர் சொல்வதுதான் சரியாக இருக்கும் என்ற எண்ணம் எழுந்தது சில வேளைகளில். வேறு வித நினைவுகளும் ஓடும். ஆயினும், வசந்தாவுக்கு எவ்வித ஆபத்தும் ஏற்பட்டிருக்காது, அவள் சுகமாகத் தானிருப்பாள் என்று அவன் மனக்குறளி சொல்லிக் கொண்டே இருந்தது.

ஒவ்வொரு நாளும் ராஜா கிருஷ்ணனுக்கு மிகுந்த சோதனை நாளாகவே ஊர்ந்தது. அவன் பித்துப் பிடித்தவன் போல் அலைந்தான். காரணம் எதுவுமில்லாமலே நெடுகிலும் சுற்றித் திரிந்தான். வேளா வேளைக்குச் சாப்பிடாமலும், குளிக்காமலும், உறக்கம் கொள்ளாமலும் அவதிப்பட்டான் அவன். அவனை அறிந்தவர்கள் பலரும், 'ஏன் ஒரு மாதிரி இருக்கிறே? உடம்புக்கு என்ன?' என்று விசாரித்தார்கள்.

'என் உடம்புக்கு ஒன்றுமில்லை. உள்ளத்தினுள் தான் கோளாறு புகுந்து கொண்டு என்னைப் பாடாய்ப்படுத்துகிறது' என்று பதில் சொல்ல வேண்டும் போலிருக்கும். ஆனால் அவன் ஒன்றும் பேசமாட்டான். அசட்டுச் சிரிப்பு சிரித்து வைப்பான்.

'வசந்தா காணமல் போய் இரண்டு நாட்களாகி விட்டன... இன்று மூன்று நாளாகிறது' என்று கணக்குப் பண்ணி வந்த அவனுக்கு, மேலும் அங்கேயே இருந்தால் பைத்தியம் பிடித்து விடும் என்றே தோன்றியது. மனசுக்கு உற்சாகம் பிறக்க சூழ்நிலையில் ஒரு மாறுதல் தேவை என்று நினைத்தான். எனவே திடீரென்று கிளம்பிவிட்டான் அவன்.

மதுரைக்குப் போகலாமா, பழனிக்குச் செல்வோமா என்றெல்லாம் சஞ்சலப்பட்ட மனம் முடிவில் குளுமையான ஒரு யோசனையைக் கூறியது: 'குற்றாலம் போகலாம்; அது தான் நல்லது!'

அதற்குப் பிறகும் அவன் தயக்கமோ தாமதமோ காட்டவில்லை. நேரே குற்றாலத்துக்குத் தான் போனான். அதற்காக அவன் வருத்தம் கொள்ள நேரிடவில்லை. அப்படி ஒரு யோசனையைத் திடீரென்று தெரிவித்தற்காகத் தன் மனசை வாழ்த்தத் தவறவுமில்லை; அந்த எண்ணத்தை உடனடியாக செயலாற்றியதற்காகத் தன்னைப் பாராட்டிக் கொள்ளவும் தயங்கவில்லை அவன்.

காரணம் இல்லாமல் போகுமா இதற்கு?

மன அமைதியை நாடி வந்த ராஜாகிருஷ்ணன் குற்றாலத்தின் காட்சி இனிமையை ரசித்தபடி ஒரு பாறை மீது அமர்ந்திருந்தான். இயற்கை வனப்புகளினூடே நாகரிக அசைவு தென்பட்டு அவன் கண்களைக் கவர்ந்தது. அந்த இடத்தில் மூன்று யுவதிகள் சிரித்துப் பேசியபடி மெதுவாக நடந்து கொண்டிருந்தார்கள். அம் மூவரில் ஒருத்தி—

அவன் கூர்ந்து நோக்கினான். அது யார்? நிஜமாகவே அவள் தானா? அவன் கண்கள் அவனை ஏமாற்றவில்லையே?

அவன் எழுந்து அருகே சென்று கவனித்தான். அப்பொழுது தான் அவள் ஏதோ சொல்லி முடித்து விட்டுக் 'கலகல'வெனச் சிரித்துக் கொண்டிருந்தாள். மற்ற இரு ரும் சேர்ந்து சிரித்தார்கள்-

அருவி ஓசையோடு கலக்க முயன்றது போல் குதூகலத் தோடு பொங்கி ஆர்த்த அந்தச் சிரிப்பொலி ராஜாகிருஷ்ணனைப் பரவசப்படுத்தியது. அவன் உள் ளத்தில் ஆனந்தம் குமிழியிட்டது. 'வசந்தா! நீ இங்கேயா இருக் கிறே வசந்தா?' என்று, உணர்ச்சி யால் உந்தப்பட்டு, உரக்கக் கூவி னன்; சிரித்தான்.

மூன்று யுவதிகளும் திடுக்கிட் டுத் திரும்பினர்கள். அவர்களு டைய சிரிப்பு பாதியிலே ஒடுங்கி விட்டது. 'எவனே பைத்தியக் காரன் வந்து விட்டான்' என்று பதறினர்கள் அவர்கள். ஆனல், கூர்ந்து நோக்கிய வசந்தாவின் முகம் கல வரத்தை நீக்கிவிட்டு மகிழ்ச்சியைக் காட் டியது. இதழ்கள் நன்கு சிரித்தன. விழி கள் மினுமினுத்தன. 'நீங்களா! ஏது எதிர்பாராமல் இப்படி?' என்ருள்.

மற்ற இரு பெண்களும் ஆச்சர்யத் தோடு வசந்தாவைப் பார்த்தனர். 'யாருடீ இது? உனக்குத் தெரிந்தவரா?' என்ருள் ஒருத்தி. 'பிரண்டு போலிருக்கு!' என்று குறும்பாகச் சொன்னுள் இன்னெருத்தி.

வசந்தா புன்னகை தவழ அவர்களிடம் தெரிவித்தாள்: 'நான் முன்பே சொல்லி யிருக்கிறேனே, ஞாபகமில்லே? இவர்தான் ராஜா கிருஷ்ணன்...'

'ஓகோ!' என்று ஒரே குரலில் பேசினர் கள் மற்றவர்கள்.

'இவள் கார்த்தியாயினி. இவள் பெயர் தேவகி' என்று அவர்களை ராஜாவுக்கு அறிமுகப்படுத்தினுள் வசந்தா.

'அப்படியா! சந்தோஷம்' என்று சம்பிர தாயமாகச் சொல்லிவிட்டு, 'என்ன வசந்தா திடீர்னு இப்படிச் செய்து ஊர் பூராவும் ரகளேப்படும்படி பண்ணி விட் டாயே! ஏன்?' எனக் கேட்டான்.

அவள் சும்மா சிரித்தாள்.

'உன் அப்பாவே உன்னே இருட்டறை யில் அடைத்து வைத்திருப்பார்; எப்படி யாவது தேடிப்பிடிக்க வேண்டும் என்று ஒருவர் மும்முரமாக உழைக்கிருர். உன் தந்தை உன்னே ஒளித்து வைக்கவில்லே, ஒழித்துக்கட்டி விட்டார் என்று சொல்லி ஒருவன் துப்பறியக் கிளம்பியிருக்கின் ருன்...'

வசந்தா குலுங்கிக் குலுங்கிச் சிரித்தாள். அவள் தோழிகளேயும் அது தொத்திக் கொண்டது.

'உம்....நல்ல வேடிக்கை தான். அப்புறம்?' என்றாள் வசந்தா.

'நீ யாரோடோ எங்கோ ஓடிப் போய் விட்டதாக ஊர் பூராவும் பேச்சு அடிபடுது. நான் தான் உன்னைக் கூட்டிக் கொண்டு போய் மறைத்து வைத்திருப்பதாக உன் அப்பா என்னோடு சண்டை பிடித்தார்...'

'ஐயோ. ஐயோ!' என்று உற்சாகத்தோடு கூவினாள் வசந்தா.

'இவ்வளவு நடந்து விட்டதா ஊரிலே?' என்று கார்த்தியாயினி சொன்னாள்.

'ஒரு பரபரப்பும் ஏற்படாதுன்னு சொன்னியே?' என்றாள் தேவகி.

'அப்புறம்? நான் இங்கே இருப்பது உங்களுக்கு எப்படித் தெரிந்தது?' என்று ஆர்வமாகக் கேட்டாள் வசந்தா.

'காதலின் சக்தி' என்றோ, 'அன்பெனும் அற்புதம் செய்த மின்வேலே' என்றோ, 'உன் காந்தம் என்னை இழுத்தது' என்றோ சொல்லியிருக்கலாம் தான். ஆனால் அப்பாவி ராஜாகிருஷ்ணன் அவ்வாறு பிதற்றத் துணிந்தானில்லை!

'இப்போ கண்ணாலே பார்த்துத் தான் தெரிந்தது. இல்லையென்றால் எனக்கு எப்படித் தெரியப் போகிறது! தெரிந்திருந்தால், அன்றைக்கே வந்திருக்க மாட்டேனா?' என்றான் அவன்.

* * *

வசந்தாவின் தோழிகள் சிறிது பெருமையோடு அவளைப் பார்த்தார்கள். அவளோ குறும்புத்தனமாகச் சிரித்துக் கொண்டு நின்றாள்.

'வசந்தா! நீ என்னிடமாவது சொல்லிவிட்டு வந்திருக்கலாம்... திடீரென்று ஏன் இப்படிச் செய்தாய்?' என்று ராஜா விசாரித்தான்.

'அதெல்லாம் ஊருக்குப் போன பிறகு தான் சொல்ல முடியும். இப்பவே நாம் கிளம்ப வேண்டியது தான்' எனத் தீர்மானமாக அறிவித்தாள் வசந்தா.

'ஆனால் வசந்தா...'

ராஜாவின் தயக்கத்தைக் கண்டு 'என்ன...என்ன விஷயம்?' என்றாள் அவள்.

'நாம் இருவரும் சேர்ந்து போனால், உன் தந்தை என்ன சொல்ல மாட்டார்? தான் சந்தேகப் பட்டது சரி என்று சாதிப்பாரே அவர்!'

வசந்தா சிரிக்கத்தான் செய்தாள். 'நினைத்தால் நினைக்கட்டுமே. நமக்கு என்ன நஷ்டம்? இப்பவே எல்லாரும் தான் என்னென்னவோ நினைத்து விட்டார்கள். நமக்குப் பாதகம் ஏற்பட்டுள்ளதா என்ன?' என்றாள். 'மேலும், நாம் ரெண்டு பேர் மட்டும் போகப் போவதில்லையே? நமக்கு சாட்சிகளாக இவர்களும் வருவார்கள்' என்றும் கூறினாள்.

தோழிகள் இருவரும் அவள் பேச்சுக்கு மறுப்புக் கூறவில்லை. ராஜா மட்டும் ஏன் வீணாக எதிர்த்துக்கொண்டு நிற்கப் போகிறான்!

வசந்தா வீட்டை விட்டுப் போய் ஐந்து நாட்கள் ஆகியிருந்தன. பண்ணையார் பூவுலிங்கம் பிள்ளை தமது வீட்டுத்திண்ணையில் கட்டில் மீது அமர்ந்து வெற்றிலை போட்டுக் கொண்டிருந்தார். சவடால் சண்முகம் வந்திருந்தார்.

பண்ணையாரின் பார்வை தெருவின் பக்கமாக ஆச்சரியத்தோடு நிலைத்து விட்டதைக் கண்ட சண்முகம் தன் விழிகளையும் அங்கு ஏவினார். 'அடட்டே!' என்ற வியப்புச் சொல் உதிர்ந்தது அவரிடமிருந்து.

'சிவகாமி! ஏ சிவகாமி! சீக்கிரம் வாயேன்' என்று அலறினார் பூவுலிங்கம்.

அவர் மனைவி 'என்னவோ ஏதோ' என்று பதறியடித்து அங்கே வந்து சேர்ந்தாள். வரும் பொழுதே அவள் பார்வை தெரு வாசல் பக்கம் பாய்ந்ததனுல், அவள் முகம் முழுவதும் சிரிப்பி ைல் மலர்ந்தது.

வசந்தாவும் அவள் தோழிகளும் ராஜா கிருஷ்ணனுடன் வந்து கொண்டிருந்ததுதான் இதற்கெல் லாம் காரணம். பண்ணையார் திண்ணையிலேயே இருப்பதைப் பார்த்ததும், ராஜா தன் கால்களைப் பின்னுக்கு இழுத்தான். 'வாங்க வாங்க, சும்மா வாங்க' என்று தைரியம் கூறினுள் வசந்தா.

'வா தம்பி. தயக்கமில்லாமல் வா!' என உற்சாகத்தோடு கத்தி ஞர் சண்முகம்பிள்ளை.

'அம்மா!' என்று உவகை பொங்க அழைத்தவாறு முன் வந் தாள் வசந்தா.

மகளைக் கண்ட தாயின் கண் களில் நீர் பெருகியது. உணர்ச்சி மிகுதியால் தொண்டை கம்மியது. 'எங்கே போயிருந்தே இத்தனை நாளாக?' என்ருள்.

வசந்தா குறும்புச் சிரிப்பு உகுத் தாள். தோழிகளைப் பார்த்தாள்.

'நாங்கள் குற்ருலத்துக்குப் போயிருந்தோம்' என்று கார்த்தி யாயினி சொன்னுள்.

'குற்ருலத்துக்கா?' என்ருர் பண் ணையார்.

'இப்ப அங்கே என்ன?' என்று சண்முகம் கேட்டார்.

'குற்ருலத்துக்குப் போகணும்னு எங்களுக்கு ரொம்ப நாளாக ஆசை' என்று அறிவித்தாள் தேவகி.

'வீட்டிலே சொல்லிவிட்டுப் போனுல் என்னவாம்? சொல்லிக் கொள்ளாமலே போகனும் என்றும் ஆசை இருந்ததோ?' என்ற பண்ணையாரின் குரல் கர கரத்தது.

'அதுதானே! நீ பாட்டிலே போய் விட்டால் என்ன அர்த்தம்? இங்கே நாங்க எவ்வளவு தவியாய் தவித்தோம்; என்னவெல்லாம் எண்ணிவிட்டோம்...' சிவகாமி யின் பேச்சு மேலும் வளர்ந்திருக் கும். ஆனுல் அவளுடைய அருமை மகள் 'அம்மா, உனக்கு என் பேரிலே கோபமா?' என்று கூறி, அவளைச் சேர்த்துக் கட்டிக் கொண்டாள்.

'நீ ஏன் இப்படிச் செய்தே?' என்று கேட்டாள் தாய்.

'வாழ்க்கை "போர்" அடித்தது. விசேஷமும் இல்லாமல், சிறு விபத்துகூட இல்லாமல், வறண்டு போய்...' என்று ஆரம்பித்தாள் கார்த்தியாயினி.

'சாரமற்று விளங்கிய வாழ்க்கை யில் ரசமாக ஏதாவது செய்ய வேண்டும் போலிருந்தது. தேக்க மாகிவிட்ட நிலைமையில் ஒரு மாறு தல் உண்டாக்க அதிர்ச்சி வைத்தி யம் செய்யலாம்னு எண்ணினேம்' என்ருள் தேவகி.

'அதனுலே ஒருவருக்கும் தெரி யாமல் எங்காவது போய் விடு வது, எல்லோரும் பரபரப்பு அடையும்படி செய்வது என்று திட்டமிட்டோம்' என்று முடித் தாள் வசந்தா.

'நல்லாத்தான் திட்டமிட்டீங்க போங்க!' என்று பண்ணையார் அலுத்துக்கொண்டார்.

'இதுக்குத்தான் பொண்ணு களுக்கு காலாகாலத்திலே கலியா ணத்தைப் பண்ணி வைக்கணும் என்கிறது!' என்ருள் சிவகாமி.

'நீ எப்படி, எங்கே இவங்களைக் கண்டு பிடித்தாய்?' என்று சண் முகம் ராஜாவிடம் கேட்டார்.

'எனக்கு 'மைண்டு' சரியில்லாமப் போச்சு. உடனே நான் குற்ருலத் துக்குப் போனேன். அங்கே தற் செயலாக இவர்களைக் காண

முடிந்தது' என்று அவன் விளக்கினன்.

'உன் 'மைண்டு' சரியாவதற்கு வேண்டிய ஏற்பாடுகளை சீக்கிரமாகவே செய்து போடலாம். பண்ணையார்வாள் வசந்தாவுக்கும் உனக்கும் திருமணம் செய்து வைக்கச் சம்மதிச்சுட்டாங்க. நல்ல நாள் பார்க்க வேண்டியது தான் பாக்கி' என்று சண்முகம் பிள்ளை பெருமையாகப் பேசினர்.

வசந்தாவின் கண்கள் ராஜாவின் நயனங்களைத் தேடின. மகிழ்வுடன் உறவாடின. நாணத்துடன் திரும்பித் தாழ்ந்து தரை நோக்கின. அவள் முகம் காலைப் புதுமலர் போல் பொலிவுற்றுப் பிரகாசித்தது. சிவகாமி அவளை அன்புடன் தழுவிக்கொண்டு சிரித்தாள். அவள தோழியர் இருவரும் காரணமில்லாமலே சிரிக்கக் கூடிய பெண்கள் ஆயிற்றே! இப்பொழுது மௌனமாகவா நிற்பார்கள்? 'கலகல' சிரிப்பொலியைக் கஞ்சத்தனமின்றி வாரி வழங்கினர்கள்!

'நல்ல வேளைக்கு நாங்களும் வந்து விட்டோம்' என்று கூவிக்கொண்டு வந்தான் சந்தர். அவனேடு மாதவியும் வந்தாள்.

'அட நாடகம்—சினிமா இதுக மாதிரியல்லவா இருக்குது! கடைசிக் கட்டத்திலே எல்லாரும் ஆஜர் ஆவார்களே, அதைச் சொல்கிறேன்' என்று முணுமுணுத்தான் அவன்.

'மிஸ்டர் சந்தர், உம்ம துப்பு விஷயம் எப்படி முடிந்தது?' என்று ராஜாகிருஷ்ணன் அவனிடம் ரகசியமாய் விசாரிக்கவும், 'உஸ்ஸ். சத்தம் போடாதே! அங்கே எதுவோ எருமை மாடு செத்துக் கிடந்திருக்கு. அந்தப் பேச்சு இப்ப என்னத்துக்கு?' என்று மெதுவாகச் சொன்னன்.

'என்ன சொல்கிருய் சந்தர்?' என மாதவி கேட்க, 'பூலோகத்துப் பெண்கள் எல்லாம் புது தினுசாய் போய் விட்டார்கள்!' என்று ராகம் இழுத்தான் அவன்.

தோழிகளோடு வசந்தாவும் சேர்ந்து சிரித்தாள் இப்போது!

(முற்றியது)

ASP

சிக்கரி கலந்த

காப்பித் தூள்

தயாரிப்பாளர்:

A.S.P. அய்யம்பெருமாள் நாடார்,

விருதுநகர்.

போன்: 88 தந்தி: VEEVEEYES

வே. வ.

சண்முக நாடார் & சன்ஸ்

விருதுநகர்.

எங்களிடம் தயாராகிற

நயம் நல்லெண்ணை,

நயம் உளுந்து, துவரம் பருப்புகளை

வாங்கி உபயோகியுங்கள்.

A. T. N.

Thammanna Chettiar & Co.,

Brass, Copper & Stainless Steel Wares,

RAJA STREET,

COIMBATORE.

H. O. TIRUPUR

★

அ. த. ந. தம்மண்ண செட்டியார் அண் கோ.,

பித்தளை, செம்பு, எவர்சில்வர் பாத்திரங்கள்
உத்திரவாதத்துடன் கிடைக்கும்.

ராஜா தெரு,

கோயம்புத்தூர்.

தலைமை ஆபீஸ் : திருப்பூர்.

அந்தமீன் கொண்ட கொடியானை, வேல் கொண்ட கரத்தானை, மீனும் வேலும் கண்டு நாணும் விழிகொண்ட பாவையவள் தான் கொண்ட காதலினால் கணவனைப் பெற்றிருந்தும் தவித்தாள், தளர்ந்தாள், தளிருடம்பு குலுங்க விம்மினாள், வெம்பினாள். "ஒல்லையூர் தந்த" என்னும் வெற்றி விருதைப் பெயருக்கு முன்னால் பெற்ற கொற்றவன் பூதப்பாண்டியனின் மனைவியான பெருங் கோப்பெண்டு எல்லையில்லாச் சோகத்தால் ஏங்கினாள்.

நான்மாடக் கூடல் அரண்மனையின் மேன் மாடக்கூடத்தில் அமர்ந்திருந்த அவள் விழிகளில் அச்சமும், ஆவலும் பின்னிப்படர்ந்தது. வெண்ணுரை கக்கிய வண்ணம் இரதத்தை இழுத்து வந்து நிறுத்தும் புரவிகளின் கனைப்பும், காலடி ஓசையும் காதில் படாதா என்ற நினைப்பு மட்டுமே அவள் நெஞ்சில் நிறைந்து நின்றது. போருக்குச் சென்ற பூதப் பாண்டியன் இன்னும்திரும்பவில்லை. இந்தக் கவலையால் தான் பெருங்கோப் பெண்டு குமுறினாள். 'மாற்றானின் எரிவேல்களைத் தாங்கி, வீரவடுக்கள் பெற்ற அவனது அழகுத் திருமார்பை, வருடித் தடவி மருவிக் கொஞ்சும் வாய்ப்பு இனி தனக்கு வாய்க்குமா?' என்ற சந்தேகமே அவளுக்கு ஏற்பட்டது.

தென்றல் உப்பரிகையிலே வந்து நின்ற பெருங்கோப்பெண்டின் பார்வை கோட்டை வாயிற்பக்கம் சென்றதும் நின்று நிலைத்துவிட்டது. அந்த இடம்தான் அவள் உள்ளத்தை அறுத்த காட்சி நிகழ்ந்த இடம். அவள் அருமைக்கணவன் பூதப்பாண்டியனைக் கடைசியாக கண்ட இடம். ஆகவே இறக்கும் வரை அவளால் மறக்கமுடியாத இடம் அது. அந்த இடத்திலே அவள் கடைசியாகக் கண்ட காட்சி, அவள் இதயத்தே சித்திரம் போல் பதிந்து அவளைச் சித்திரவதை செய்தது.

வெள்ளையும்கருப்பும் புள்ளிகளாகப் படர்ந்த புரவிகளைப் பூட்டிய இரதமது. எதிரிகளின் இரத்தத்தைச் சுவைக்கத் துடிப்பது போல, ஈட்டியும், எரிவேலும் அதன் முன் முகப்பு மூலையிலே பளபளத்துக் கொண்டிருந்தன. வீரக் கழல் காலிலே ஒலியெழுப்ப, வெற்றித் திலகம் நெற்றியிலே பளபளக்க, போர்க் கோலத் தலைக்கவசம் மின்னிச் சுடரெழுப்ப, புலியெனச் சீறி, எரிமலையெனக் குமுறிப் பாய்ந்து வந்து தேரிலேறிய பூதப் பாண்டியன், புறப்படத் துடிதுடித்த புரவிகளை அடக்கியவண்ணம் ஆற்றிய வெஞ்சினக் காட்சி அவள் அஞ்சனக் கண்களில் அப்படியே பதிந்திருந்தது.

"சிங்கமெனச் சினந்தாங்கி, பொங்கு கடல் படைதாங்கி, சேர்ந்து சினந்து பாய்ந்துவரும்பகை

படைத்தவர்.

வர்கள் என்னைப் போர்க்களத்திலே சந்திக்கட்டும். போர்ப்பறை தட்டி ஆர்ப்பரித்து வந்துவிட்ட பகைவரை, தேரோடு உடைபட்டுப் புறமுதுகு காட்டி ஓட விரட்டி, வேரோடு வீழ்த்தி யழிக்காவிட்டால் அஞ்சன மை தோய்ந்த என் அழகு மனையாட்டியின் பார்வையில் மீண்டும், நான் படாத வாறு அழிவது உறுதி. வையை சூழ் மையலிலே பிறந்த நண்பன் மாவ னுடன், ஆந்தை, ஆதன் அழிசிபோன்ற கண்ணொத்த நண்பர்களுடன் கலந்துற வாட முடியாதது உறுதி.

பூதப்பாண்டியனின் வாயிலிருந்து பொறி பறக்கக் கிளம்பிய வஞ்சினம் முடிவடைதற்குள்ளாவே, பூட்டப் பட்டிருக்கும் ரதமே பொடிந்து தூளாகி விடுமோ? என அஞ்சுமள வுக்கு அதிலே மாட்டப்பட்டிருந்த புரவிகள், புழுதிமண்டலத்தைக் கிளப்பிய வண்ணம் புயலெனச் சீறிப் பறக்க ஆரம்பித்தன. நீட்டிய ஈட் டிகளை நிமிர்த்திப் பிடித்த மறவர்படை கள் அவனைப் பின்பற்றின.

போருக்குப் புறப்பட்ட பூதப்பாண் டியனை பெருங்கோப்பெண்டு கடைசி யாகக் கண்ட காட்சி அதுதான்; ஆனல் அவள் அவனை முதன் முறை யாகச் சந்தித்த பொழுதுகூட பூதப் பாண்டியன் அதே புரவிபூட்டிய அதே ரதத்தில்தான் வந்துகொண்டிருந்தான். முதன் முறையாக அவள் அவனைச் சந்தித்தபோதே சாவு அவனைக் காவு கொள்ளத் துடித்தது. ஆனல் அன்று அவள் காப்பாற்றினுள். இன்று? நினைத்ததுமே இடிந்து உட்கார்ந்தாள் அவள்.

* * *

வல்லநாடு ஒருமலைநாடு. மாற்று ரால் வெல்ல முடியா மலையரண்களைக் கொண்ட சிறுநாடு. அதன் மன்னன் வீரகேரளப் பெருவழுதி,நாற்பதாண்டு அரசியல் பாரத்தால் நலிந்து தளர்ந் தான். அவனுக்கு ஆண் வாரிசு இல்லை. ஆகவே அவன் அரசபாரத் திலிருந்து ஓய்வு பெறமுடியவில்லை. வீரகேரளப் பெரு வழுதியின் ஒரே மகள்தான் பெருங்கோப்பெண்டு.

அவள் ஒரு அழகி; இல்லை பேரழகி, இல்லையில்லை...அழகிகளேகண்டு அதி சயிக்குமளவுக்கு அழகியிலும் அழகி அம்பளவு எவ்வளவோ அவ்வளவே விழி! கோவைச் செம்பவளம் எவ்வள வோ அவ்வளவே இதழ்! வஞ்சிக் கொம்பளவு எவ்வளவோ அவ்வளவே இடை! கைச்சொம்பளவு எவ்வளவோ அவ்வளவே தனம்! இவ்வளவும் அவ்வழகி பெற்ற சீதனம்!

ஒடிந்து துவளும் அவளின் இடை கண்டுதென்றலும் மின்னலும் நாணும், இழைந்து குழையும்; அவள் குரல் கண்டு கிளியும் குயிலும் ஓடும். அவள் ஒரு நல்லிசை பயின்ற மெல்லியற் பாவை. வல்லநாட்டு இசைப்பெரும் புலவர் பல்கண்ணனரிடம் இசை பயின்று தேர்ந்த இன்னிசைச் சிட்டு. ஆகவே அவளின் எண்ணமும் எழுச் சியும், உயிரும் உடலும் எந்நேரமும் இசையின்பத்தையே நாடித் திரிந்தது.

தன் பெண்ணுக்குக்கிடைக்கும் பெரு வாழ்வால்தான், தான் பிறந்த மண் ணுக்குக் கிடைக்கும் நல்வாழ்வு அமை யப் போகிறதென்பதை உணர்ந்த வீரகேரளன், தன் மகளின் எண்ணத் தை அறிந்தபின், அவளின் விருப்பத் திற்கு குறுக்கே நிற்க விரும்பவில்லை. தன் மகளின் கணவன் ஒரு மாவீரனுக இருக்கவேண்டுமென நினைத்தான் அவன். தன் கணவன் ஒரு மாபெரும் இசைவாணனுக இருக்க வேண்டு மென எண்ணினுள் அவள். பெருங் கோப்பெண்டின் திருமண விருப்பத் திற்கிணங்க மணமாகாத அண்டை நாட்டு மன்னர்களுக்கு மட்டும் ஓலை அனுப்பி வைத்தான் வீரகேரளப் பெருவழுதி.

அதில் தன்நாட்டில் நடைபெறப் போகும் இசைவிழாவிலே அவர்களைப் பங்கெடுத்துக்கொள்ள அழைத்திருந் தது மட்டுமின்றி, தன் மகளின் மனதைத் தொடும்படி இசை விருந் தளிக்கும் மன்னனுக்குத் தன் பெண்ணையும் தந்து, மலையரண்களைக் கொண்ட தான் ஆளும் மண்ணையும் தந்து, சுடரொளி பரப்பி மின்னும் தன் மணிமுடியையும் தந்து ஏற்றுக்கொள் வதாக எழுதியிருந்தான்.

பெருங்கோப்பெண்டின் அழகைப் பற்றிக் கேள்விப்பட்டிருந்த மன்னர் களின் உள்ளத்தில் சற்று 'ஊறல்' எடுக்கத்தான் செய்தது. ஆனல் எடுத்த ஊறல் அடுத்த நிமிடமே

அடங்கிவிட்டது. பொதிகை மலை அடிவாரச் சிற்றரசனை திதியன் அவ்விழாவிலே கலந்துகொள்ளப் போவதை அவர்கள் அறிந்துவிட்ட காரணமே அவர் தம் ஆசையை அடக்கியது. இன்னிசையிலே தன்னிகரில்லாத் திறமை கொண்டவன் திதியன். அவனின் இசையின்பத்தில் மயங்கித்தான் ஒல்லையூர் தந்த பூதப்பாண்டியன் அவனிடம் உயிர்தோழமை பூண்டிருந்தான்.

வல்லநாடு திருவிழாக்கோலம் பூண்டது. தெருவீதிகளிலிருந்து மன்னவன் வாழும் திருக்கோயில் வரை கண்ணைப் பறிக்கும் வண்ணத் தோரணங்கள் காட்சியளித்தன. இசையரங்கு பிரத்தியேக அலங்காரத்தோடு இலங்கியது. விருந்தினர் மாளிகை நிரம்ப ஆரம்பித்தது.

'விடிந்தால் இசைவிழா, தனக்கும் மணவிழா, தன்னை தேனுண்ட வண்டாகத், தான் பாடும் தேனிசையால் சொக்கவைக்கப் போகும் சுந்தரன் யாரோ? 'எல்லோரும் சொல்வதைப் பார்த்தால் திதியன்தான் நான் பெறப் போகும் நிதியனாக வருவார் போல' ஆயிரமாயிரம் ஆனந்த எண்ணங்கள் பெருங்கோப்பெண்டுவின் உள்ளத்தில் புகுந்து விளையாடின.

நகரப்புறத்தை அடுத்திருந்தது அந்தக் குன்று சூழ் பூம்பொழில். அங்கே வழக்கமாகப் பொழுது போக்க வரும் பெருங்கோப்பெண்டு, என்றும் போல அன்றும் தன் தோழி செங்கீரையுடன்

வந்திருந்தாள். [illegible]பொழிலின் நடுவே அமைந்த ஒரு சிறு குன்றின் மேல் ஏறி நின்றதும் பெருங்கோப்பெண்டின் ஆனந்த வெள்ளம், இசை வெள்ளமாகப் பெருக்கெடுக்க ஆரம்பித்தது. வானத்தைப் பார்த்தவண்ணம் குன்றின் உச்சியில் சாய்ந்து படுத்த அவள் தேனிசையைத் தென்றலோடு கலக்க விட்டாள். வெயில் பட்டால் வாடி விடுவோமோ என்றஞ்சிய செங்கீரை பக்கத்திலிருந்த நாவல் மரத்தடி நிழலுக்குச் சென்று பழவேட்டையில் இறங்கினாள்.

அச்சமயம் வேகமாக வரும் தேர் ஒலியும், குதிரைகளின் குளம்படிச் சத்தமும் காதில் விழ, படுத்திருந்த பெருங்கோப்பெண்டு பாட்டை நிறுத்தாமலேயே நிமிர்ந்து உட்கார்ந்து ஒலி வந்த திசையை உற்று நோக்கினாள். அதே நேரம் தென்றலிலே கலந்து வந்த தீங்கனி இசை, காற்றோடு போட்டியிட்டவண்ணம், புரவிகளை முடுக்கித் தேரில்வந்து கொண்டிருந்த பூதப்பாண்டியன் செவிகளில் விழுந்தது. அவனை அறியாமலேயே அவன் கரங்கள் புரவியின் ஓட்டத்தைக் கட்டுப்படுத்தின.

இசை வந்த திசையில் நோக்கினான்

அவன். குன்றின் மேலிருந்து பாடிய குமரியின் உருவம் லேசாகப்பட்டது அவன் கண்களில். சென்றுகொண்டிருந்த சாலையை விட்டுக் குன்றை நோக்கிச் செல்லுமாறு திருப்பினன் குதிரைகளை. குதிரைகள் இப்பொழுது குன்றை நோக்கிப் பறந்தன. இசையைக் கேட்டமாத்திரத்திலேயே தானிருக்கும் திசையை நோக்கி வருவதென்றால் நிச்சயம் அவன் இன்னிசை ரசிகன் திதியனாகத்தான் இருக்க வேண்டுமென எண்ணிய பெருங்கோப்பெண்டு பாடலை நிறுத்தாமலேலே தேரின்மீது வந்து கொண்டிருந்த ஆணழகன் மீது பதிய விட்டாள் தன் பார்வையை. கேட்டுக்கொண்டிருந்த இசை உள்ளத்தை உண்ண, பார்த்துக்கொண்டிருந்த விழி, பாவையின் பேரழகை உண்ண, வந்து கொண்டிருந்த பூதப்பாண்டியன் குன்றை நெருங்கிவிட்டான். அவன் அவளை நோக்கினான், அவளும் சளைக்கவில்லை, நோக்கினாள் நாணம் நீக்கினாள்! அச்சம் போக்கினாள்; விழியால் தாக்கினாள்; கண்ணோடு கண்கள் கவ்வி, உண்ணவும் முடியாது விடுக்கவும் முடியாது தவித்தன.

உருண்டு வந்துகொண்டிருந்த தேர் திடீரென மருண்டு நடுங்குமளவுக்கு ஓசையெழுப்பி நின்றது. முன்கால்களை உயரத்தூக்கிய புரவிகள் கனைத்துக் கொண்டு பின்னுக்கு வந்தன. குதிரைகள் எம்பிய வேகத்தில் தேர் பின்னால் குடை சாய்ந்தது, எதிர்பாராத இவ்வதிர்ச்சியைத் தாங்க முடியாத பூதப்பாண்டியன் தட்டுண்டு தடுமாறித் தேரிலிருந்து கீழே சாய்ந்தான். ஆனால் அவன் உடல் தரையில் இல்லை, தளிரினும் மெல்லிய தையல் ஒருவளின் பூங்கர அணைப்பிலே புதைந்திருந்தது. தடுமாறிய பாண்டியனை அவள் இன்னும் இறுகஅணைத்துச் சேர்த்துப் பிடித்துக் கொண்டாள். பக்கத்திலிருந்த குழியின் பயங்கரம் அவளுக்குத்தானே தெரியும்!

“ஆகா! மாதரை மலருக்கு உவமை சொன்ன தீரனின் வாய்க்கு மணங்குச் சர்க்கரையை அள்ளிப் போட்டாலும் காணாது, மலரினும் மெல்லிய ஸ்பரிசம் மதுவினும் கொடிய போதை” பெருங்கோப்பெண்டுவின் கரம் பட்டதும் பூதப்பாண்டியனின் உள்ளம் இது போல ஆயிரம் கற்பனைகளை அடுக்கடுக்காக எண்ணிப்பார்த்தது. தளிருடம்புத் தையலரின் குளிருடம்பு பட்டால் ஏற்படும் மையலை அப்போதுதான் அவன் முதன் முறையாகக் கண்டான்.

அவள் மட்டுமென்ன, அநுபவப் பாட்டியா? ஆக அவளுந்தான் மெய் மறந்து, பற்றிய கைமறந்து தன் நிலை மறந்து நின்றாள். எக்கச்சக்கமான இவ்வேளையில் எங்கிருந்துதான் வந்தாளோ அந்தச் செங்கீரை. நாவற்பழ வேட்டையாடியதால் அவள் நாவும் பல்லும் பேய்வாய் போலக் கோரமாகக் காட்சியளித்தன. “என்னம்மா இது?” செங்கீரை படபடத்தாள். இணைந்து நின்றவர் பிரிந்து சரிந்து பிரஞ்ஞை பெற்றனர். வாய்பிளந்து நின்ற செங்கீரையின் பல்லைக் கண்டதும், பூதப்பாண்டியனும் பெருங்கோப்பெண்டுவும், வெடிச்சிரிப்பை உதிர்த்தனர்.

“ஏஞ்சிரிக்கிறீங்க?” செங்கீரை கேட்டாள். பதிலில்லை. “யார் இவள்?” பெருங்கோப்பெண்டைச் சுட்டிக் காட்டிச் செங்கீரையிடம் கேட்டான், பூதப்பாண்டியன். அந்தத் தொனியிலே ஒல்லையூர் தந்த பூதப்பாண்டிக்குக்கும் தான் என்ற எடுப்பும், மிடுக்கும் காணப்பட்டன.

“ஆங், இந்தநாட்டு இளவரசி பெருங்கோப்பெண்டு இவங்கதான். புரியுதா? இதென்னம்மா! வந்த இடத்தில் வம்புந்தும்புமா இருக்கு. வாங்க போகலாம்” இளவரசியின் செங்காந்தள் விரல்களைப் பற்றி இழுத்தாள் செங்கீரை. அவளுடன்செல்ல அடியெடுத்து வைத்த பெருங்கோப்பெண்டு, “பொதிகைமலைக் கடிவார அரசன் திதியன்தானே தாங்கள்?” என்று கேட்டாள். பதிலை அவள் விழிகள் ஆவலோடு நோக்கின. பெருங்கோப்பெண்டுவின் கேள்விக்குப் பூதப்பாண்டியன் மௌனியானான். அவன் தலை தரையை நோக்கியது. வாய் திறக்கவில்லை, சிந்தனை சிறகடித்துப் பறந்தது.

தேரிலிருந்து அவிழ்ந்து நின்ற குதிரைகள், பூதப்பாண்டியனின் திண் தோள்களை நக்கிக் கொண்டு நின்றன.

செங்கிரை இழுப்பிலே சென்றுகொண்டிருந்த பெருங்கோப்பெண்டுவின் விழிகள் அப்புரவிகளை நன்றியறிதலோடு நோக்கின. அறிவுள்ள அப்புரவிகள் மட்டும் ஒரு கணம் தாமதித்திருந்தால், குன்றின் அடிவாரக்குழியில் விழுந்தல்லவா அந்தக் குன்றெடுக்கும் நெடுந்தோளன் மடிந்திருப்பான்! "பெருங்கோப்பெண்டு," "திதியன்" இப்பெயர்களைச் சொல்லி முணுமுணுத்தது கொண்டது பூதப்பாண்டியனின் வாய்.

வல்லநாட்டு விருந்தினர் மாளிகையை நோக்கி வந்துகொண்டிருந்தான், பூதப்பாண்டியன். அவன் உள்ளமும் உடலும் சேர்ந்திருப்பதைப் போலத்தான் அவன் புரவிகளும் தளர் நடைபோட்டன. அவனுக்கு முன்னாலேயே அங்கு வந்து தங்கியிருந்த திதியனுக்கு விருந்து மருந்தாகப் பட்டது. ஆமாம் அவனுக்கு அவன் அருமை நண்பன் பூதப்பாண்டியனைக் காணவில்லையே என்ற கவலை. பூதப்பாண்டியனும் வந்தான். திதியனின் கவலை பறந்தது.

ஆனால் கலகலப்பாக உலவி, சலசலப்பையும் சர்ச்சைகளையும் கிளப்பி, ஆரவாரப் படுத்தும் பூதப்பாண்டியன், அன்று கவலை கொண்ட முகத்தோடு காணப்பட்டமைக்குரிய காரணத்தை துளைத்துத் துளைத்துக் கேட்டான் திதியன். பாண்டியனிடமிருந்து சரியான பதில் அவனுக்குக் கிடைக்கவில்லை. ஆருயிர்த் தோழர்கள் இருவரும் ஒரே கட்டிலில் ஒண்டிப் படுத்தனர். பூதப்பாண்டியனின் மனம் பேதலிக்க ஆரம்பித்தது. தன் நண்பன் திதியன் இசைவிழாவிலே வெல்வான், பெருங்கோப்பெண்டை மனைவியாகக் கொள்வான், அவர்கள் இருவரும் மாலையணிந்து மணமக்களாக நிற்கும், கோலாகலக் காட்சியைக் கண்டு வாழ்த்த வேண்டுமென்றுதான் பூதப்பாண்டியன் புறப்பட்டு வந்திருந்தான். ஆனால் பெருங்கோப்பெண்டு இவ்வளவு பேரழகி என்பதையும், இசையிலே இந்த அளவு வல்லவள் என்பதையும் இடைவழியிலே நடந்த சந்திப்பால் உணர்ந்தபின் அவள் மனம் அவளை மறக்க மறுத்தது.

மணமோ போட்டியில் நடைபெறப் போகிறது; போட்டியில் வெல்லப் போவதோ திதியன்; இது உறுதி. ஆக நடைபெற முடியாத ஒரு காரியத்தைத் தன் நண்பனிடம் கூறி, ஆசை கொண்ட அவன் உள்ளத்தில் மாசு பரவச் செய்வது முறையல்ல என்பதாலேயே பூதப்பாண்டியன் தன் உள நிலையை மறைத்தான். ஆனால் அவன் எதை மறக்க வேண்டுமென்று எண்ணி மறைத்தானோ, அதை அவன் நண்பன் திதியன் கண்டு கொண்டான். ஒரே சிந்தனையாகப் படுக்கையில் புரண்ட பாண்டியன் தூக்கக் கலக்கத்தில் "பெருங்கோப்பெண்டு, "பெருங்கோப்பெண்டு" என்று பிதற்றிய வண்ணம் எழுந்தான்.

விழித்துக் கொண்ட திதியனிடன் அகப்பட்டுக் கொண்ட பாண்டியனால் அதற்குமேலும் விஷயத்தை மறைக்க வழியில்லை. சொல்லிவிட்டான். கண்ணுறைத்த நண்பனின் கவலை தீரும் பொருட்டு, இசைவிழாவிலே தான் பாடப்போவதில்லை எனக் கூறிய திதியனைத் தடுத்து "கூடாது,நீ பாடியே தீரவேண்டு'மென வற்புறுத்தினான் பாண்டியன்.

'பாண்டியா! அதிர்ஷ்டம் யாருக்கு எப்படி அடிக்குமென்று திட்டவட்டமாகக் கூறமுடியாது! ஆகவே இருவருமே பாடுவோம், அடிப்பதுபோல் அடிக்கட்டும்". இது திதியனின் ஆலோசனை. பாண்டியனும் ஏற்றான். மறுநாள் காலை இசையரங்கு பொங்கி வழிந்தது. எல்லாநாட்டு மன்னர்களும் வேடிக்கை பார்க்கத்தான் வந்திருந்தனர். ஆனால் அத்தனை பேர் விழிகளும் திதியன் மேல்தான் பதிந்திருந்தன. போட்டியிலே கலந்து கொள்பவர் மூன்றே, மூன்று பேர் தான். பூதப்பாண்டியன், திதியனைத் தவிர கடுகன் என்னும் ஒரு சேர அரசனும் கலந்துகொண்டான்.

இசை ஆரம்பமானது. கடுகன் வாய் திறந்தான். காதுகளைப் பொத்திக் கொண்டாள் பெருங்கோப்பெண்டு. அடுத்து திதியன் ஆரம்பித்தான். ஆவலோடு அவள் விழியும் செவியும் வேலை செய்தன. ஆனால் அத்தனை பேரும் ஏமாந்தனர்! 'இப்பித்தனையா இத்தனை அளவு புகழ்ந்தனர்? சே, சே! எத்தனை பெரிய ஏமாற்றம்?' பெருங்கோப்பெண்டின்

முகத்தில் சற்று நேரம் ஈயாடவில்லை. அடுத்து அவள் பார்த்தாள், அங்கு ஒல்லையூர் தந்த பூதப்பாண்டியன் பாடுவதற்குத் தயாராகத் தொண்டையைச் சரிப் படுத்திக்கொண்டு எழுந்து நின்றான். கூம்பிய பெருங்கோப் பெண்டுவின் முகம் குளிர்ந்து மலர்ந்தது. பூதப்பாண்டியனைப் பார்த்தவுடனேயே பெருங்கோப்பெண்டு ஒரு முடிந்த முடிவுக்கு வந்துவிட்டாள். அவன் எப்படிப் பாடினாலும் சரி, அவனுக்கே மாலையைச் சூட்டித் தன் மணாளனாகப் பெற அவள் முடிவு பண்ணினாள்.

ஆமாம்! நேற்றே அவள் இதயத்தில், பூதப்பாண்டியனும், அவன் ஏறிவந்த புரவிபூட்டிய அழகுச் சிறு தேரும் சித்திரமாகப் பதிந்துவிட்டது! அவள் அதை சிதைக்க விரும்பவில்லை. பூதப் பாண்டியன் பாடினான், என்னதான் இருந்தாலும் அவன் இசைப் பெருஞ் செல்வன் திதியனின் நண்பனாயிற்றே, அந்தவாடை அடிக்காதாபோய்விடும்?

பூபாளமும், நீலாம்புரியும் இணைத்து அவன் பின்னிய ஆலாபனம், "ஆகா! அற்புதம், அருமை, ஆனந்தம்" என்று அத்தனை பேரும் மெச்ச அமைந்திருந்தது. பெருங்கோப்பெண்டின் உள்ளத்தில் தென்றலும், தெளிதேனும் சேர்ந்து பாய்ந்தது. அவள் முகம் மலர்ந்தது. ஆனால் அடுத்த விநாடியே கனிந்தசக்காளியெனச் சிவந்துகவிழ்ந்தது. செங்கீரையின் கையிலே தொங்கிய மலர்மாலையை, அவள் செங்காந்தள் விரல்பற்றி எடுத்தாள், எழுந்தாள், எழுந்தவுடன், சேலை அசைய, சேல் விழியசைய, திரள் செவ்வாழைத்தண்டுத்தொடையசைய, கைமாலை அசைய, ஒளிவளையசைய, ரசமாம்பழக் கன்னத்தின் மேடசைய, ஒயிலென அசைந்து, மயிலெனநடந்து அந்த "ஒல்லையூர் தந்தானை" நோக்கி வந்தாள்.

பூதப்பாண்டியனின் மனம் அதற்குள் பொறுக்கவில்லை. தானே நாலெட்டு நடந்து சென்று நீட்டினான் தலையை, அவள் போட்டாள் மாலையை. கேட்ட ஆரவாரம் அத்தனையையும் அழுத்தி எழுந்தது ஒரு பாட்டு. "வாழ்க மணமக்கள்" என்று ஆரம்பமான அப்பாட்டு திதியனின் வாயிலிருந்து வந்து கொண்டிருந்தது. நின்றவர் திகைத்தனர், ஆனால் மறுகணமே வாய்விட்டு நகைத்தனர்.

தன் நண்பனின் பொருட்டு திதியன் நாடகமாடிவிட்டதை பெருங்கோப் பெண்டு உட்பட அத்தனை பேரும் அறிந்தனர். ஆனால் அறிந்த விஷயத்திற்காகப் பெருங்கோப்பெண்டு வருந்தவில்லை. அவள் ஆனந்தம் இன்னும் பன்மடங்கு அதிகரித்தது. 'அண்ணா' என்று அவள் திதியனை அன்பு சொட்ட அழைத்தாள். "அன்புத் தங்கையே வளர்க நீ நீடு! வாழ்க பல்லாண்டு!!" திதியன் பெருங்கோப்பெண்டை உளமார வாழ்த்தினான். அடுத்த கணம் "அத்தான்" எனத் தொத்தினாள் பூதப் பாண்டியனின் தோள்களில். நங்கையை அணைத்த பூதப்பாண்டியனின் விழிகள் தன் நண்பனை நன்றியுணர்வோடு நோக்கின. "நண்பா! நீ எனக்கு வாழ்வளித்த வள்ளல், வளமளித்த அருவி, குளிரளித்த தென்றல், உணர்வளித்த மேதை, உயிரளித்த கடவுள்" இத்தனை பொருளையும் மொத்தத்தில் அப்பார்வை சொல்லாது சொல்லியது.

வானிலத்தேவரும் வாறுயுமளவுக்கு தேனிலவுண்டு திளைத்தனர், பூதப் பாண்டியனும் அவன் காதல் மனைவி பெருங்கோப்பெண்டும். மல்லிகை சூடிய அவள் நறுமலர்க்காடு பரப்பும் வெறி மிகு போதையால் கிறுக்கனாகி வண்டாகச் சுழன்றான் பூதப்பாண்டியன். விடிவெள்ளி முளைத்துவிட்டால் அவனுக்கு விசனந்தாளாது. — மறு இரவு வர இன்னும் ஒரு பகல் கழிய வேண்டுமே? என்ற கவலை அவனுக் கல்லவா தெரியும்?

இசையரங்கிலிருந்து, கரிபூசிய முகத்தோடு திரும்பி சேரன் கடுகனின் உள்ளத்தில் ஆத்திரம் அனலெனப் பற்றி எரிய ஆரம்பித்தது இப்போது. தன் தங்கை மங்கையர்க்கரசியை அவன் பூதப்பாண்டியனுக்கு மண முடித்துக் கொடுப்பதற்காக முன்னால் எடுத்துக் கொண்ட பிரயத்தனம் அவன் பெருங்கோப்பெண்டை மணம் முடித்ததினால் தடைப்பட்டதுடன், தான் மணமுடித்துக்கொள்ள துடி துடித்த அவளையுமல்லவா, தட்டிக் கொண்டுபோய்விட்டான் என்ற ஆத்திரம் அவனை அலக்கழித்தது.

197699

ஆகவே அவன் பூதப்பாண்டியனைப் பகைவனாக மதித்தான். பகை பு... ததே தவிர அது பற்றி எரிய வ... யில்லை. கடுகன் தனியாக நின்ற பூதப்பாண்டியனை எதிர்ப்பதென்பது பிள்ளைத்தவளை பெரும்பாம்பை மோதுதல் போலாகுமென்பதை அவன் அறிந்துதான் வைத்திருந்தான். ஆகவே தன் குள்ளநரிச் செய்கைக்குக் கூட்டுச் சேர்க்கும் முயர்ச்சியில் மும்மரமாக இறங்கினான். நயவஞ்சக நரிக்குச் சுயநலப்புலியான சோழன் ஒருவன் உதவி தந்தான். மண்ணாசை பிடித்த சோழனும், பெண்ணாசையால் ஏமாந்த சேரனும், மாபெரும் வீரன் பாண்டியர் கோமானைச் சாய்க்கப் போர் தொடுத்தனர். போர் முறைககுப் புறம்பாக வெஞ்சினங் கொண்டு, தன்மீது போர் தொடுத்துவிட்ட அவர்களை, போர்க்களத்திலே சந்திக்கச் செல்லுமுன், பூதப்பாண்டியன் கக்கிய வெஞ்சினக் காட்சிதான் பெருங்கோப் பெண்டுவின் இதயத்தே சிதையாத சித்திரம் போல் பதிந்து, அவளைச் சிதைக்காது சிதைத்து, வதைககாது வதைத்து துவைக்காது துவைத்தது. ஆர்ப்பரிக்கும் கடலாகக் குமுறிக் கொந்தளித்துக் கொண்டிருந்த பெருங்கோப் பெண்டிற்கு போர்க்களச் செய்தி தாங்கிவந்தான் குருதி தோய்ந்த குத்தீட்டியைக் கொண்ட பாண்டிய மாவீரன் ஒருவன். வீரனின் தலை தாழ்ந்தது. "அரசியாரே! பாண்டியர் குலக்கொழுந்து அணைந்தது, மாற்றாரின் எரிவேல்களை மார்பிலே தாங்கி போரிலே வீரமரணம் அடைந்து விட்டார் மன்னர்!"

களச் செய்தி காதில் விழுந்ததும், சுயநினைவிழந்தாள் பெருங்கோப் பெண்டு. யுத்தகளத்திலே பாய்ந்தெடுத்தோடிய ரத்தப் பிரவாகத்தில் குத்திய ஈட்டிகள் நெஞ்சின் மேல் குத்தியபடியே நிற்க பிணமாகச் சாய்ந்து கிடந்தான் பூதப்பாண்டியன். சேரனும் சோழனும் சேரவந்து கண்டனர் அக்கோரக் காட்சியை. பூதப்பாண்டியன் அன்றையப்போரிலே காட்டிய வீரத்தை நினைத்ததும் புல்லரிப்பு எடுத்தது அவர்கள் உடலுக்கு. அன்றையப் போரிலே பூதப் பாண்டியன் காட்டியது அவன் சக்திக்கு மிஞ்சிய வீரம்! எந்த ஒரு தனி மனிதனிடமும் இருக்க முடியாத தீரம்! பூதப்பாண்டியனின் மார்பிலே இரத்தத்தில் தோய்ந்து துவண்ட முத்து மாலையை எடுத்தான் சேரன். முத்து மாலையின் முன் முகப்பில் குத்தப்பட்ட புதை வழியாகச் சென்று, பூதப் பாண்டியனின் இதயத்திக்குள் பின்னிக் கிடந்தது. அதை வலியப்பற்றி இழுத்த சேரன் திடுக்கிட்டான். அந்த முத்து மாலையின் முன் முகப்பில் பூதப்பாண்டியனின் ஆருயிர் மனைவி பெருங்கோப் பெண்டின் திருவுருவம் சித்திரமாகப் பொறிக்கப் பட்டிருந்தது. பூதப்பாண்டியன் சிதைக்கப் பட்டான். இருந்தும் அந்தச் சித்திரம் அவன் இதயத்தை விட்டு அகலவில்லை!

ஆமாம்! பூதப்பாண்டியனின் இதயத்தில் சிதைபாத சித்திரமாகப் பதிந்துவிட்ட சித்திரமது! சித்திரத்திலிருந்து சிரித்த அச்சித்தராங்கியின் மீதுள்ள காதலால்தான், பூதப்பாண்டியன் அன்று அவ்வளவு வீறு கொண்டு போராடியிருக்கிறான்!

சேரன் கண்கள் கலங்கின. ஆனால் அவன் கையில், அவனால் சிதைக்கப்பட முடியாத அச்சித்திரம் அவனை நோக்கிச் சிரித்தது.

பாண்டியர் கோமான் ஒல்லையூர் தந்த பூதப்பாண்டியனை இழந்த பெருங்கோப் பெண்டு "கணவனை இழந்தோர்க்கு காட்டுவதுஇல்" எனக் கூறி நெருப்பிறங்கினாள். அவளின் செக்கச் சிவந்த திருமேனியைச் செந்தீச் சுவாலைகள் சுவைத்தன.

ஆனால் அவள் முதன் முறையாகவும் கடைசி முறைவாகவும் கண்ட அக்காட்சி, இருபுரவி பூட்டிய சிறு தேரிலே அமர்ந்திருந்த இன்மாறனின் தரிசனம், அது தான் அவள் இதயத்தில் சித்திரமாக நின்று சித்திரவதை செய்தது! அதைச் செந்தீச் சுவாலைகளால் அழிக்க முடியவில்லை! ஆமாம் அது அழிக்கப்பட முடியாத சித்திரம்!

முகப்பு மொழியும் கதை

அழகான சித்திரம்; சிதைக்கப்பட முடியாதசித்திரம்; "சிதையாத சித்திரம்!" ★

பஞ்சாமியின்

போனஸ்

—“ பாண்டு ”—

வில்லிலிருந்து புறப் பட்ட அம்பு போல் மின் சார ரயில் வேகமாகப் பாய்ந்து கொண்டிருந் தது. வண்டியில் கூட்டம் ‘ஜிகு ஜிகு’ வென்று நெரித்துக்கொண்டிருந்தது.

அன்று சனிக்கிழமை. ‘அரை நாள் விடுமுறை’. காரியாலய சிப்பந்திகள் எல்லோரும் கிண்டியில் நடைபெறும் அஸ்வமேதயாகத்திற்கு ‘ஹாய்யாக’க் கிளம்பியிருந்தார்கள்.

பஞ்சாமியும் அந்த கோஷ்டியில் இரண்டறக் கலந்திருந்தான். அவனுக்கு இது புத்தம் புதிய அனுபவம். இருந்தாலும் ஏதோ ஒரு அசட்டுத் துணிச்சலுடன் ஜன்னல் ஓரமாக உட்கார்ந்து கொண்டிருந்தான். ‘பளிச்’சென்று இரண்டு நூறு ரூபாய் நோட்டுகள் அவன் பையில் பிரகாசித்துக் கொண்டிருந்தன.

எதிர் ஸீட்டினின்றும் கிளம்பிய அத்தரின் வாசனை, பஞ்சாமியின் நாசியில் ஏறிக்கொண்டேயிருந்தது. பஞ்சாமியின் பார்வை தானுகவே அங்கே கவிந்தது. ‘பின் லே’ வேஷ்டியும், ‘ஸில்க்’ஜிப்பாவும் எதிரே இருந்தவரை ஒரு ‘ஷோக்கு’ப் பேர்வழி என்று பறை சாற்றிக் கொண்டிருந்தன. அடிக்கடி அவர் தம் கையிலுள்ள புத்தகத்தில் எதையோ துருவித் துருவி தேடிக் கொண்டிருந்தார். திடீரென்று ஒரு மந்தகாசம் அவர் முகத்தில் படர்ந்தது. கறுப்புக் கண்ணுடியை எடுத்து துடைத்து விட்டுக்கொண்டே, “ஏன் ஸார்! இந்த வருஷம் கூட ‘அணு குண்டு’ பிரமாதமாகத்தான் ஓடும் என்று நம்புகிறேன். உங்கள் அபிப் ராயம் என்ன?” என்ருர் பஞ்சாமியை நிமிர்ந்து பார்த்து.

இந்த எதிர் பாராத தாக்குதலினுல் திணறிப் போய்விட்டான் பஞ்சாமி!

இதற்குள் பின்னுலிருந்து “ஆமாம் ஸார், காலையில் பேப்பரில்கூடகொடுத் திருந்தான். ‘அணுகுண்டு’ பிரமாத மான ‘பாரத்தில்’ இருக்கிறதாம்” என்று குரல் கிளம்பியது.

பஞ்சாமி சட்டென்று திரும்பிப்பார்த் தான், புடலங்காய் போல் ஒல்லியான ஒரு பேர்வழி அவனுக்குப் பின்னுல் உட்கார்ந்து கொண்டிருந்தார்.

ஜிப்பாக்காரர், “அப்படியா! போன தடவை கூடப்பாருங்கள், இதே மாதிரி ‘கவர்னர்ஸ் கப்’ தினம் தான். இதே ‘அணுகுண்டின்’ மேல்தான் ‘பெட்’ பண்ணினேன். நம்பினுல் நம்புங்கள். சுளையாக ஐநூறு ரூபாய் அடித்தேன் ஸார்!” என்ருர் பெருமை கலந்த குரலில்.

பஞ்சாமி காதைத் தீட்டிக் கொண் டான்.

“குதிரை என்ருல் அது தான் ஸார் குதிரை! போன வருஷத்திற்கு முன் னுல் என்று நினைக்கிறேன். பகல்பூர் மகாராஜாவின் குதிரை இருக்கிறதே அதன் பேர் கூட......” தலையைச் சொறிந்து கொண்டார் பஞ்சாமிக்குப் பின்னுலிருந்தவர்.

“மகல்!” என்ருர் ஜிப்பாக்காரர்.

“ஆமாம் மகல்தான். அது ஓடி னுல் தரையிலேயே கால் படாது ஸார். அந்த மகலேயே இந்த ‘அணு குண்டு’ ‘ஷார்ட் ஹெட்டில்’ ஜெயித்து விட்டது என்ருல் பாருங்களேன்!” என்ருர் ஆச்சரியத்துடன்.

‘அணுகுண்டின்’ பிரலாபத்தைப் பற்றி அவர்கள் பேசிக் கொண்டே இருந்தார்கள். அதைக் கேட்கக் கேட்க, பஞ்சாமியின் மனம் பெரிதும் கலவரமடைந்து விட்டது! ‘சந்துரு கொடுத்த டிப்ஸில் இந்த ‘அணுகுண் டின்’ பெயரையே காணுமே?’ என்று அவன் அங்கலாய்த்துக் கொண்டி ருந்த சமயம், மின்சார ரயில் கையால்

குதிரைப் பந்தயக் கதைகளில் இது ஓர் புது ரகம்! ஆனுல்... இதை நம்பி யாரும் கிண்டிக்குப் புறப்பட்டால், விளைவுகளுக்கு நாங்கள் பொறுப்பல்ல!

இழுத்துப் பிடித்தது போல் சட்டென்று நின்றது.

கிண்டி ஸ்டேஷன் தான் அது.

எல்லோரும் 'திமி திமி' என்று இறங்கினர்கள். பையைக் கெட்டியாக பிடித்த வண்ணம் பஞ்சாமியும் கீழே இறங்கினன்.

* * *

பஞ்சாமிக்கு ஆங்கில மூலதனமுள்ள ஒரு கம்பெனியில் வேலை. மாதம் எண்பது ரூபாய் சம்பளத்தில் கீழ்த்தர குமாஸ்தாவாக ஓட்டிக்கொண்டிருந்தான். அந்த சொற்ப வரும்படியிலேயே சென்னையில் தனிக்குடித்தனம் வேறு போட்டிருந்தான். வீட்டு வாடகையே முழுசாக இருபது ரூபாய் விழுங்கியது. மனைவியையும் இரண்டு குழந்தைகளையும் வைத்துக் கொண்டு, மூச்சைப் பிடித்து குடும்பச் சக்கரத்தை ஒரு விதமாக உருட்டிக்கொண்டு வந்தான்.

அந்த வருஷம் பஞ்சாமி வேலை பார்த்து வந்த கம்பெனிக்குச் சக்கை லாபம். 'மானேஜிங் போர்டார்' சிப்பந்திகளுக் கெல்லாம் 'போனஸ்' வழங்கினர்கள். பஞ்சாமிக்கும் இரு நூறு ரூபாய் கிடைத்தது.

"மீனு! மீனு!" என்ற பஞ்சாமியின் உற்சாகக் குரலைக் கேட்டதும், அடுக்களையிலிருந்து ஓடிவந்தாள் மீனு. பஞ்சாமியின் மனதில் என்றுமில்லாத மகிழ்ச்சியைக் கண்டதும், "ஆபீஸில் ஏதாவது 'பிரமோஷன்' கிடைச்சுதா என்ன?" என்ருள்.

"பிரமோஷனு? உம்...அதெல்லாம் ஒன்றுமில்லை" என்று கூறிக் கொண்டே கோட்டைக் கழற்றினன் பஞ்சாமி. பிறகு ஒரு பர்ஸை எடுத்து மீனுவிடம் நீட்டிக்கொண்டே, "இந்தா இதை ஜாக்கிரதையாய் வை. உள்ளே போனஸ் பணம் இரு நூறு ரூபாய் இருக்கிறது" என்ருன்.

"போனஸ் பணமா!" மீனுவின் கண்கள் ஆச்சர்யத்தால் அகல விரிந்தன. கொஞ்சம் நிதானித்து, "ஆமாம் இந்தப் பணத்தை என்ன செய்யப் போகிறீர்கள்?" என்ருள் ஆவலுடன்.

"செலவு செய்யப் போகிறேன்!" என்ருன் பஞ்சாமி.

"போதுமே பரிகாசம்! என்ன செலவு செய்யப் போகிறீர்கள் என்று தான் கேட்கிறேன்!"

"வரும்போது தான் மைசூர் ஸில்க் எம்போரியத்தினுள் நுழைந்து விட்டு வந்தேன், நீ இரண்டு மாதத்திற்கு முன் கேட்டாயே புனு பார்டர் போட்ட புடவை, அதை விலை விசாரித்து, நல்ல நிறத்தில் பொறுக்கி எடுத்து வைத்து விட்டு வந்திருக்கிறேன்!"

"அப்படியே உங்களுக்கும் ஏதாவது துணி மணிகள் எடுத்துக் கொள்கிறதுதானே? குழந்தை கமலிகூட வெகு நாட்களாக 'பட்டுப் பாவாடை, பட்டுப் பாவாடை' என்று நச்சரித்து வருகிருள்..." மீனு பேசிக்கொண்டிருக்கும்போதே, "அப்பா!" என்று அழைத்துக்கொண்டே, பஞ்சாமியின் மூன்று வயதுப் பையன் பாலு தளிர் நடை போட்டுக்கொண்டு வந்தான்; அவன் கையில் வைத்திருந்த உறையைக் கண்டதும், "என்னடா அது?" என்ருன் பஞ்சாமி.

"ஸ்...சொல்ல மறந்து விட்டேன் பார்த்தீர்களா, காலையில் தான் தபால்காரன் கொடுத்து விட்டுப் போனுன். மேஜையின்மேல் வைத்தேன்" என்று சொல்லிக் கொண்டிருக்கும்போதே, பஞ்சாமி பாலுவிடமிருந்து வாங்கி உறையைக் கிழித்தான். உள்ளே ஒரு கடிதம் இருந்தது. அதைப் பிரித்துப் படித்ததுமே, பஞ்சாமியின் முகம் சுண்ணும்பைப் போல் வெளுத்து விட்டது!

"ஏன்? அப்படி என்ன எழுதியிருக்கிறது அந்தக் கடுதாசியில்?" என்ருள் மீனு, பஞ்சாமியின் அதிர்ச்சியைப் பார்த்து.

"என்னவா? சேட்டுப் பயல் நோட்டீஸ் அனுப்பியிருக்கிருன். வட்டியும் அசலுமாக இன்னும் ஒரு வாரத்திற்குள் இருநூறு ரூபாய் கட்டவேண்டுமாம். இல்லா விட்டால், நகைகள் கண்டிப்பாக ஏலத்தில் விடப்படும்" என்று அறிவித்திருக்கிருன்.

"ஐய்யய்யோ! முதலில் அந்த நகைகளை மீட்டு விடுங்கள்!" என்று அலறினள் மீனு.

இரண்டு வருஷத்திற்கு முன்னுல் பாலு காய்ச்சலாகப் படுத்து விட்டான். வைத்தியத்திற்குப் பணம்

இல்லாமல் பஞ்சாமி தவியாய்த் தவித்தான். கடைசியில் மீனுவின் கையிலிருந்த இரண்டு ஜதை வளையல்களை அடகு வைத்தான் பஞ்சாமி. அது தான் இப்போது எதிர்பாராமல் அவன் கழுத்தை நெரித்தது. சற்று நேரத்திற்கு முன் பஞ்சாமியிடம் இருந்த உற்சாகம், திடீரென்று அவனிடம் சொல்லிக் கொள்ளாமலே விடை பெற்றுக் கொண்டது. சோர்வுடன் சாய்வு நாற்காலியில் 'தொப்'பென்று சாய்ந்தான்.

மறுநாள், சுவாரஸ்யமில்லாமல் காரியாலய பைல்களை பஞ்சாமி புரட்டிக் கொண்டிருந்தான். அப்போது லேசாக ஒரு கரம் அவன் தோள் பட்டையைத் தொட்டது. நிமிர்ந்து பார்த்தான். 'காஷியர்' சந்துரு புன்முறுவலுடன் நின்று கொண்டிருந்தான்.

"என்னடா பஞ்சாமி, கப்பல் கவிழ்ந்தவனைப் போல் முகத்தைத் தொங்கப் போட்டுக் கொண்டிருக்கிறாயே; என்ன விஷயம்?" என்று சுவாதீனமாக விசாரித்துக்கொண்டே, அருகேயிருந்த நாற்காலியை 'பர்' ரென்று இழுத்துப் போட்டுக் கொண்டு பஞ்சாமியின் அருகிலேயே உட்கார்ந்து கொண்டான்.

பஞ்சாமியின் ஆப்த நண்பன் சந்துரு. போனஸ் பணத்தில் ஒரு நயா பைசா கூட உடம்பில் ஒட்டாமல் போனசைக் குறித்து சோகம் ததும்ப, பஞ்சாமி வர்ணித்துக் கொண்டிருந்தான். ஆனால் எல்லாவற்றையும் கேட்டுவிட்டுச் 'சந்துரு 'கலகல'வென்று நகைத்து விட்டான். சந்துருவின் இந்தச் சிரிப்பு பஞ்சாமிக்கு நெருப்பாக இருந்தது. "உனக்கு ஏனப்பா சிரிப்பு வராது? என்னைப்போல் ஏழைக் குமாஸ்தாவா என்ன நீ? பலாச்சுளையாக மாதம் முந்நூறு ரூபாய் வாங்கிக் கொள்கிறாய்! மேலும் ஒண்டிக் கட்டை..ஹும்" என்று குரோதத்துடன் அங்கலாய்த்துக் கொண்டான்.

"டேய் பஞ்சாமி! காரணமில்லாமல் நீ என் மேல் கோபித்துக் கொள்கிறாய். உண்மையில், நீ அவஸ்தைப் படுவதைப் பார்த்தால் எனக்கே பரிதாபமாகத் தான் இருக்கிறது. நினைத்தால், உன் கையிலுள்ள இருநூறு ரூபாயையும் ஒரே நிமிஷத்தில் இரண்டாயிரமாக மாற்றிவிடலாம், ஆனால், நீ என் பேச்சைக் கேட்பதாக இருந்தால் மட்டுமே அதை சொல்லுவேன்" என்று பூர்வ பீடிகையுடன் தொடர்ந்தா'ன் சந்துரு.

அப்படியும் ஒரு வழி இருக்கிறதா?" என்று கேட்பது போல சந்துருவைப் தான் பஞ்சாமி.

காரியாலயத்தில் சந்துருவை ஆகா கானுக்கு ஈடு காட்டிப் பேசுவார்கள். அஸ்வ சாஸ்திரத்தில் கரை கண்டவனைப்போல் பேசுவான் அவன். சந்துருவின் அந்த யோசனையைக் கேட்டதுமே, பஞ்சாமி நடுங்கிப் போய் விட்டான்! "டேய் குரங்கு தான் கெட்டதுமல்லாமல், வனமெல்லாம் கெடுத்ததாம். என்னிடமுள்ள இருநூற்றுக்கும் வெடி வைக்கப் பார்க்கிறாயா?" என்று கொஞ்சம் உரக்கப் பேசி நாடக பாணியில் கை கூப்பினான் பஞ்சாமி.

'உஷ்...முட்டாள் மாதிரிக்கத்தாதே! துணிந்தவனுக்குத் தானப்பா இது உலகம்! உன் நலனில் அக்கரை கொண்டு தான் சொல்லுகிறேன். என் பேச்சை நம்பு" என்று பஞ்சாமியை அடக்கிவிட்டு, தன்னுடைய அஸ்வ ஞானத்தை யெல்லாம் ஒவ்வொன்றாக அவிழ்த்துவிட ஆரம்பித்தான் சந்துரு.

முதலில் சந்துருவின் வார்த்தைகள் வேம்பாகத் தான் கசந்தன. ஆனால் கடைசியில் அதே வார்த்தைகள் கரும்பாக இனித்தன, பஞ்சாமிக்கு. மொத்தத்தில் சந்துரு பிரித்த ஆசைவலையில் பஞ்சாமி சிக்கிக் கொண்டான். சந்துரு உறுதியாகக் கொடுத்த 'டிப்ஸ்'களுடன் கிண்டியை நோக்கிக் கிளம்பி விட்டான் பஞ்சாமி!

குதிரைப் பந்தய மைதானத்தில் பஞ்சாமி நுழைந்ததும், நுழையாததுமாக இருக்கையிலேயே, 'ஹோ' என்ற ஆரவாரக் கூச்சல் வானைப் பிளந்தது. அப்போது தான் நான்காவது பந்தயம் முடிந்திருந்தது. பந்தய வெறியில் தான், அவர்கள் அப்படிக் கத்துகிறார்கள் என்பதை பஞ்சாமி நொடியில் புரிந்து கொண்டான். பிறகு, எதிரே வந்த ஒரு பெரியவரைப் பார்த்து "ஸார், இங்கே டிக்கட் எங்கே கொடுக்கிறார்கள்?" என்று பவ்யமாக விசாரித்தான். அவர் பஞ்சாமியை ஒரு கணம் உறுத்து நோக்கினார். பிறகு

தொண்டையைக்கனைத்துக்கொண்டே "அதோ, அந்தப் பக்கம் போ!" என்று கைத்தடியால் ஒரு திசையைச் சுட்டிக் காட்டினர். அவர் காட்டிய திசையில் நடந்தான் பஞ்சாமி.

டிக்கட் கொடுக்கும் ஜன்னலை அடைந்ததும், பஞ்சாமி ஒரு நூறு ரூபாய் நோட்டை நீட்டிக் கொண்டே, "ஹைதர் அலி ஒருவின் டிக்கட் கொடுங்கள்" என்ருன்.

ஜன்னலில் உட்கார்ந்து கொண்டிருந்த ஆங்கிலோ இந்தியப் பெண் பஞ்சாமியை ஒரு தினுசாகப் பார்த்தாள். "'ஹைதர் அலியா?' அப்படி ஒரு குதிரை கிடையாதே!" என்ருள் கீச்சுக் குரலில்.

பஞ்சாமி மனப்பாடம் செய்து வைத்திருந்த குதிரையின் பெயருக்குப் பதிலாக அதன் ஜாக்கியின் பெயரை உளறிக் கொட்டி விட்டான். அந்தத் தவறு அப்போதுதான் சடாரென்று அவனுக்குப் புரிந்தது. "ஸாரி, அலங்கோலம்" என்ருன்.

"நம்பரைச் சொல்லு' என்ருள் அவள் எரிச்சலுடன்.

"5வது ரேஸ், 6ம் நம்பர்!"

பஞ்சாமி டிக்கட்டை வாங்கிக் கொண்டான், பந்தய மைதானத்தை ஒரு முறை சுற்றி வந்தான். பிறகு காலரியின் உச்சிக்கு ஏறினன். ஒதுப்புறமான ஒரு இடத்தில் உட்க்கார்ந்து கொண்டான். முகத்தில் அரும்பியிருந்த வியர்வைத்துளிகளைக்குட்டையால் துடைத்து விட்டுக் கொண்டிருந்தான். அப்போது கூட்டத்தில் திடீரென்று சலசலப்பு ஏற்பட்டது. ஓடப்போகும் குதிரைகள் எல்லாம் 'படாக்கில்' ஒயிலாக வந்தன. உடனே பஞ்சாமி புருவத்தின் மேல் கையை வைத்து பந்தய மைதானத்தை ஒரு நோட்டம் விட்டான்.

நீலத்திலே வெளுப்புக் கோடு— ஆம், அது தான் "அலங்கோலம்," ஜாக்கி அதன் லகானைப் பிடித்துஇழுத்துக் கொண்டிருந்தான். அப்படியிருந்தும், தோலை உசுப்பித் திமிறிய வண்ணம் யந்திரப் பொம்மையைப் போல் அது விறைப்பாக நடந்து வந்தது. அதன் கம்பீரத்தையும், மயிலைப்போல் கழுத்தை அற்புதமாக நீட்டி நீட்டி அது நடை போடுவதையும் பார்த்து பஞ்சாமி அப்படியே சொக்கிப் போனன்!

கொஞ்ச நேரத்திற்குள் பந்தயம் ஆரம்பமாகிவிட்டது.

'பயலெட்' கொடியை வீசி ஆட்டினன். உடனே, குதிரைகள் எல்லாம் திடலிலிருந்து பிய்த்துக்கொண்டு கிளம்பின.

ஆவல் பொங்கும் கண்களால், பஞ்சாமி நீலத்தில் வெளுப்புக் கோட்டையே கவனித்துக் கொண்டிருந்தான். குதிரைகள் இரண்டாவது திருப்பத்தில் வந்து கொண்டிருற்கும் போதே, அபிமானிகள் தங்கள் தங்கள் குதிரைகளின் பெயர்களைச் சொல்லி உரக்க ஊளையிட ஆரம்பித்து விட்டார்கள்.

ஆனல் 'அலங்கோலம்' ஏழாவதாக வந்து கொண்டிருந்தது. அதைப் பார்த்ததும் பஞ்சாமி தூணுகிவிட்டான்!

பஞ்சாமிக்கு அதிர்ச்சி நீங்கவே ஐந்து நிமிஷம் பிடித்தது. மெல்ல சுதாரித்துக் கொண்டான். இழந்துவிட்ட நூறு ரூபாயை அடுத்த பந்தயத்தில் எப்படியும் ஜயித்துவிட வேண்டும் என்ற வைராக்கியத்துடன் டிக்கட் கொடுக்கும் ஜன்னலை நோக்கி மெல்ல நடக்க ஆரம்பித்தான்.

மீண்டும் முப்பது நிமிஷத்திற் கெல்லாம் அடுத்த பந்தயம் ஆரம்பமாகி விட்டது.

குதிரைகள் எல்லாம் பாய்ந்து பாய்ந்து ஓடிக்கொண்டிருந்தன. அவைகளின் மேலேயிருந்த ஒவ்வொரு ஜாக்கியும் ரப்பர் பொம்மைகளைப் போல் குதித்துக் கொண்டிருந்தார்கள். அதிலும் பஞ்சாமியின் குதிரை 'கள்ள நோட்டின் மேலேயிருந்த ஜாக்கிதான் 'ஸ்பிரிங்' பொம்மையைப்போல் ரொம்பவும் பிரமாதமாக குதித்துக் கொண்டிருந்தான்.

குதிரைகள் ஜெய ஸ்தம்பத்தை நெருங்குவதற்கு முன்பே, "கமான் கள்ள நோட்!" என்று பஞ்சாமி உற்சாகமாக கத்தினன்.

மின் வெட்டும் நேரத்தில், சுத்தமாக ஆறு 'லெங்த்' வித்தியாசத்தில் எல்லாக் குதிரைகளையும் முந்திக் சொண்டு 'கள்ள நோட்' தாவித் தாவி வந்து கொண்டிருந்தது.

பஞ்சாமி ஒரு நிமிஷம் ஆனந்தமாக கண்களை மூடினான், 'கள்ள நோட்டையும்' சந்துருவையும் ஒரு முறை மானசீகமாக ஆசிர்வதித்தான். பிறகு ராஜநடை போட்டுக்கொண்டு பணம் கொடுக்கும் ஜன்னலை நோக்கி விரைந்தான்.

“நீங்கள் அதிர்ஷ்டக்காரர் ஐயா!” ஜன்னல் ஆசாமி நீட்டிய ஒரு நோட்டுக் கத்தையை பஞ்சாமி 'லபக்'கென்று பிடுங்கிக் கொண்டான். பரபரப்புடன் எண்ணிப் பார்த்தான். சரியாக ஆயிரம் ரூபாய்!

பணத்தை ஜேபியில் திணித்துக் கொண்டு 'ஹாய்'யாக பந்தய மைதானத்தையே வட்டமிட்டுக் கொண்டிருந்தான். கடைசிப் பந்தயம் ஆரம்பிக்க இன்னும் கொஞ்ச நேரமே இருந்தது. அதற்கான எச்சரிக்கை அறிவிப்பும் வந்தது. பஞ்சாமியின் மனதில் மீண்டும் சபலம் தலை தூக்கியது!

உடனே டிக்கட் கொடுக்கும் ஜன்னலை நோக்கி விரைந்தான். உள்ளே இருந்த ஆங்கிலோ இந்தியப் பெண், பக்கத்திலிருந்த பெண் குமாஸ்தாவிடம் பலமாக சண்டை பிடித்துக் கொண்டிருந்தாள். பிறகு முகத்தில் எள்ளும் கொள்ளும் வெடிக்க, “என்ன வேண்டும்?” என்றாள் பஞ்சாமியைப் பார்த்து.

சந்துரு கொடுத்த குதிரையின் நம்பரைச் சொன்னான் பஞ்சாமி.

“இல்லை, - அது ஓடாது!” ஒரே விநாடியில் பஞ்சாமிக்கு அறிவித்து விட்டு, மீண்டும் பக்கத்திலிருப்பவளிடம் சண்டைக்குக் கிளம்பி விட்டாள்.

பஞ்சாமிக்கு ஒன்றும் புரியவில்லை. ஜன்னலை விட்டு அவன் நழுவ ஆரம்பித்தான். ஆனால் அதே சமயம், மின்சார ரயிலில், அவன் எதிரே உட்கார்ந்து கொண்டிருந்த ஜப்பாக்காரரின் முகம், அவன் மனக்கண் முன்னே மின்னலடித்தது. அவர் குறிப்பிட்ட அந்தக் குதிரையின் பெயர்...பஞ்சாமிக்கு 'குப்'பென்று உற்சாகம் பெருக்கெடுத்தோடியது.

“மாடம்!”

“என்ன!” சண்டையைப் பாதியிலே நிறுத்தி விட்டு-பெண் புலிபோல் சீறினாள்.

“6 ஆம் நம்பர் ஒரு வின் டிக்கட்”

'அணுக்குண்டின்' தலையிலே, பஞ்சாமி ஆயிரம் ரூபாயையும் அப்படியே பணயம் வைத்துவிட்டான். அவசர அவசரமாக டிக்கட்டை வாங்கி ஜேபியில் திணித்துக் கொண்டான். பந்தய மைதானத்தை நோக்கி ஒரே ஓட்டமாக விரைந்தான்.

கொஞ்ச நேரத்திற்கெல்லாம் கடைசிப் பந்தயம் ஆரம்பமாகிவிட்டது. மைதானத்தில் இருந்த ஆயிரக் கணக்கான கண்கள்...... ஓடும் குதிரைகளையே மொய்த்துக் கொண்டிருந்தன. விநாடிக்கு விநாடி கூட்டத்தின் உற்சாகம் கரை புரண்டு ஓடிக் கொண்டிருந்தது.

ஓடிக்கொண்டிருக்கும் அந்தக் குதிரைகளின் ஓட்டத்தைவிட, பஞ்சாமியின் இருதய ஓட்டம் தான் பிரமாதமாக மாக இருந்தது. அலைபாயும் மனத்துடன் உன்னிப்பாக 'அணுக் குண்டை'யேகவனித்துக்கொண்டிருந்தான். இரண்டாவது திருப்பத்தில் 'அணுக் குண்டு' ஐந்தாவதாக வந்து கொண்டிருந்தது.

"கமான் ராட்சதன்!"

"கமான் கொள்ளிவாய்!"

"கமான் கால் வாரி!"

இடி முழக்கமாக ஒவ்வொருவரும் கர்ஜித்தார்கள்.

பஞ்சாமியும் விடவில்லை! "கமான் அணுக்குண்டு!" என்று தொண்டை கிழிய கத்தினன்.

டம்பப்பையும் கையுமாக பஞ்சாமிக்கு பக்கத்தில் நின்று கொண்டிருந்த ஒரு நாரீமணி, பஞ்சாமியைப்பொசுக்கி விடுவதுபோல் பார்த்தாள். அவள் மட்டுமா? அவன் குரலிலே தொனித்த ஏக்கத்தைக்கண்டு எல்லோருமே பஞ்சாமியை விசித்திரமாகத் தான் பார்த்தார்கள்.

பஞ்சாமி இதையெல்லாம் லட்சியம் செய்யவில்லை. அவன் கவனமெல்லாம் அணுக்குண்டையே மையப்புள்ளியாகக் கொண்டு குவிந்திருந்தது.

ஆனல் என்ன ஏமாற்றம்! 'அணுக் குண்டு' பஞ்சாமியின் தலையில் ஒரு அணுக்குண்டையே வீசியெறிந்துவிட்டு, திடலுக்குள் மறைந்துவிட்டது.' ஆம், கடைசிக் குதிரையின் வாலைத் துரத்திக் கொண்டுவந்தது அது!

பூமி சுற்றுகிறது என்பதைப் பஞ்சாமி அப்போது நிதரிசனமாகக் கண்டான்!

அவன் முகத்திலே 'சில்'லென்று தண்ணீர்பட்டது. பஞ்சாமி அரைக் கண் விழித்துப் பார்த்தான். அவனைச் சுற்றிலும் ஒரு அநுதாபக் கூட்டம் கூடியிருந்தது.

"பாவம், பணம்போன அதிர்ச்சி ஸார்!"

"ஆமாம்! அதுதான் ஆசாமி அப்படியே சுற்றி விழுந்து விட்டார்."

"அப்பாவிகள் எல்லாம் இதிலே ஏன் ஸார் வந்து மாட்டிக் கொள்ள வெண்டும்?"

பஞ்சாமியைப் பற்றி கூட்டத்திலிருந்த ஒவ்வொருவரையும் விமர்சனம் செய்தது.

பஞ்சாமிக்கு இவையெல்லாம் ஏதோ சொப்பன உலகில் நடப்பது போலிருந்தது. கொஞ்சம் கொஞ்சமாக அவனுக்கு பிரஞ்ஞை திரும்பியது. நிலைமையைச் சட்டென்று ஊகித்தான். தனக்கு சோடா வாங்கி தந்தவரைப் பார்த்து, "ரொம்ப வந்தனம் ஸார்" என்று உளறிக் கொட்டிவிட்டு அந்த கும்பலிலிருந்து சட்டென்று கத்தரித்துக் கொண்டான்.

கொஞ்சம் அப்பால் நகர்ந்த பஞ்சாமி, ஜேபியில் கையை விட்டான். 'அணுக் குண்டின்' மேல் அவன் வாங்கிய டிக்கட் கையில் சிக்கியது. அந்த டிக்கட்டை ஒருமுறை வெறுப்புடன் பார்த்தான்.

என்ன? கண் கட்டு வித்தையா?

பஞ்சாமியின் கையில் 'அணுக் குண்டின்' டிக்கட்டையே காணவில்லை. அதற்குப் பதிலாக 'டபாரத்தின்' டிக்கட் இருந்தது. அது தான் கடைசிப் பந்தயத்தில் அதாவது சற்று நேரத்திற்கு முன்னல் முதலில் ஓடிவந்த குதிரை.

பஞ்சாமிக்குத் தலைகால் புரியவில்லை. பூரிப்புடன் எதிரே இருந்த 'டோட்டலி ஸேட்டரை'ப் பார்த்தான். 'டமாரத்தின்' மேல் பணம் கட்டியவர்களுக்கு, ஒவ்வொரு பத்து ரூபாய்க்கும் நூறு ரூபாய் ஈவு என்று 'இன்டிகேட்டர்' கொட்டாப்புளி போல் நாட்டியது. ஆயிரம் ரூபாய்க்குப் பஞ்சாமி மனத்திற்குள்ளாகவே கணக்குப் போட்டுப் பார்த்தான்! அவனுக்கு மெய் சிலிர்த்தது.

இப்போது பஞ்சாமி சாதாரண குமாஸ்தா அல்ல. அவன் ஒரு லட்சாதிபதி!

'அனுக்குண்டின்' டிக்கட் 'டமாரத்தின்' டிக்கட்டாக மாறிய அந்த அதிசயத்தைப் பற்றி பஞ்சாமி இரவெல்லாம் யோசித்தான். கடைசியில், அவனுக்கு 'திடீர்' என்று அதன் மர்மம் தானாகவே விளங்கிவிட்டது.

'அனுக்குண்டின்' மேல் பஞ்சாமி பணம் கட்டப்போன சமயம், உள்ளே இருந்த ஆங்கிலோ இந்தியப் பெண், யாருடனோ சச்சரவிட்டுக் கொண்டிருந்தாள். அந்த அவந்தரையில், பஞ்சாமிக்கு அவள் எதையோ கிழித்துக் கொடுத்திருக்கிறாள். அவனும் அதைக் கவனிக்காமலேயே பையில் திணித்துக்கொண்டு நேராகப் பந்தய மைதானத்திற்கு ஓடிவந்து விட்டிருக்கிறான். பின்னால் அது தான் டமாரத்தின் டிக்கட்டாக மாறி விட்டிருக்கிறது என்பதை நினைத்துப் பார்த்ததுமே, பஞ்சாமிக்கே சிரிப்பாக வந்தது.

* * *

அடுத்த நாள், 'டு விட்டில்' கம்பெனியின் எதிரே ஆட்டோ ரிக்ஷா ஒன்று 'பட பட'வென்று சப்தம் செய்தது. பஞ்சாமி கம்பீரமாக ஆட்டோவிலிருந்து கீழே இறங்கினான்.

உல்லாசத்துடன் அவன் காரியாலயத்திற்குள் நுழைய ஆரம்பிக்கையில், "ஸார், உங்களுக்கு விஷயம் தெரியுமோ?" என்று ப்யூன் முனுசாமி அவனை வாசற்படியிலேயே மடக்கினான்.

பஞ்சாமி விழித்தான்.

"காஷியர் சந்துரு தற்கொலை செய்து கொண்டார் ஸார்!"

"என்ன?"

"ஆமாம் ஸார்! ஆபீஸ் பணத்தில் மூவாயிரத்தைக் கையாடி விட்டிருக்கிறார் சார்! நேற்று ஏதோ ஒரு குதிரையின்மேல் அந்தப் பணத்தைக் கட்டினாராம். முதல் ரேஸிலேயே அது சுழித்துவிட்டது. கடிதம் எழுதி வைத்துவிட்டு, தூக்குப் போட்டுக் கொண்டார் ஸார்!" என்றான் பரபரப்பான குரலில்.

பஞ்சாமி ஸ்தம்பித்து விட்டான். அழுவதா சிரிப்பதா? என்று அவனுக்கே புரியவில்லை!

★

சரித்திரச் சித்திரச் சிறுகதைப் போட்டி

இந்த இதழில் வெளியாகியுள்ள '**சிதையாத சித்திரம்**' என்ற சிறுகதையின் ஆசிரியர், திரு. ஜெயார்சி. தியாகனுக்கு, (44-ஏ, ஏரிக்கரைத் தெரு, பழைய மாம்பலம், சென்னை-17) ரூ. 50/- அளிக்கப்படுகின்றது.

இரண்டாம் பரிசு பெற்றுள்ள திரு. எஸ். எம். அப்துல்காதரின் ("ஷேரலி", 36, காஜிமார் தெரு, முதல் சந்து, மதுரை) "**தீபம் அணைந்தது**" என்ற சிறுகதை, 'புதுமை' மார்ச் இதழில் பிரசுரமாகும்.

—**ஆசிரியர்.**

5. கதவு மூடியது; உள்ளம் திறந்தது!

["ஒரே வித நாகரீகத்தில் உள்ள ஒரு நபருக்கும், மற்றவருக்கும் உள்ள முக்கிய வேறுபாடுகள், வளர்ப்பிலே ஏற்படும் விசித்திரங்களினின்றே நிச்சயமாக எழுகின்றன, ஏனெனில் தாய், தந்தையரில் ஒருவரையோ அல்லது இருவரையோ இழந்தது, குழந்தைப் பருவத்தில் நோய்கள், பிற விபத்துகள், குறைபாடுகள் போன்ற விதியின் விளையாட்டுகளுக்கும் மேலாக, தனிப்பட்ட மாறுதல்கள் எதுவுமின்றி, நாகரீகக் கோட்பாடுகளை, பெற்றவர்கள் குழந்தைகளுக்கு ஊட்டுகிறார்கள் என்பது வெளிப்படையான உண்மை."

Pears Cyclopaedia-(64th Edition)
The Origin of Mind and Human Society.]

தாரா கற்சிலையாக அமர்ந்திருந்தாள். ஆனந்தரங்கம் சென்று நெடுநேரம் ஆகிவிட்டது.

நீண்ட நெடு மூச்சு ஒன்றை இழைய விட்டாள் தாரா. அவளது நீண்ட நயனங்களின் ஓரத்திலே பனித் துளிகள் போன்ற நீர்த்துளிகள் அரும்பின.

நினைவு அலைபாய்ந்தது. சலனம் ஏற்பட்டு விட்ட உள்ளம் தடுமாறியது.

'ஆனந்தரங்கமாம்... ஆனந்தரங்கம் பெயர் எப்படி விசித்திரமாக இருக்கிறதோ, அதேபோலத்தான் மனிதரும் இருக்கிறார்!' என்று அவள் மனம் பேசியது.

மீண்டும், மீண்டும் பேராசிரியர் வந்து சென்ற நிகழ்ச்சியை, அவளது கருத்து, செக்குமாடு போல, சுற்றிச் சுற்றி வந்தது.

அவரை அறையிலே அமரச் செய்து விட்டு உள்ளே சென்றவள், பத்து நிமிடங்களில் திரும்பி வந்தாள். மரியாதைக்காக எழுந்தவர்... எழுந்தவர்... உட்காராமல்... செயல் மறந்து நிலைமறந்து, நின்றபடியே, அவளைப் பார்த்தபடியே... இப்பொழுது நினைத்துப்பார்க்கும் பொழுது கூட தாராவின் மிருதுவான கன்னங்களின் மெல்லிய இரத்தக்குழாய்கள் துரித கதியில் நடைபோட்டன... கன்னம் செக்கர் வானமாகச் சிவந்தது.

'உட்காருங்கள்' என்று அவள் சொன்னபிறகுதான் அவர் நிலை உணர்ந்தார்.

'மன்னிக்கவேண்டும்' என்று அவரது உதடுகள் முணுமுணுத்தன. அவராகவே தனது செயலுக்கு வருந்துவார் போல் உட்கார்ந்த பொழுது, அவரது உருவத்திற்கு எதிர்த்தட்டில், மனத் தராசில் இன்னும் இரண்டு படிக்கற்களைப் போட்டுக் கொண்டாள் தாரா.



'பிறகு நடந்த நிகழ்ச்சிதான்... இப்பொழுது அதை

எண்ணிஎண்ணி
வருந்துவதால்
என்ன பயன்?

அந்த நல்ல மனிதரின் மனம் எவ்வளவு புண்பட்டதோ? என்ன இருந்தாலும் நான் அவ்வளவு கடுமை காட்டியிருக்கக் கூடாதுதான்!' இதை எண்ணுகையில் தாராவின் கண்களில், அவளது அறிவைக் கேட்காமலே, உணர்ச்சி ஓரிரண்டு

சொட்டு நீர்த்திவலைகளை ஆனந்தரங்கத்தின் துன்பத்திற்காகப் பரிந்துகொண்டு காணிக்கை ஆக்கியது!

'ஆனால்...அவரது கோரிக்கை, மனிதத்தன்மைக்குப் புறம்பான தாக அல்லவா இருந்தது? இரட்டைக் குழந்தைகளைப் பிரித்து...ஒரு செடியில் பூத்த இரண்டு மலர்களைப் பிரித்து...ஒன்றைக் குப்பைமேட்டிலும், மற்றதைக்கோடீசுவரனின் மாளிகையிலும் வளர்த்து... சே...சே...நாம் என்ன ஆண்டவனின் பிரதிநிதிகளா? இல்லை, விதியின் பிரதிநிதிகளா? அறியாக் குழந்தைகளின் வாழ்க்கையோடு விளையாட நாம் யார்? அந்தக் குழந்தைகளைக் கொடுமைக்காளாக்கி

ஆராய்ச்சி செய்வது அவ்வளவு அவசியமா? இந்தத் துடிப்பிலேதான் நான் ஆனந்தரங்கத்தை மிகவும் கடிந்து விட்டேன். அளவுக்கு மீறிய கடுமை காட்டி... கடைசியாக, "செல்லுங்கள் வெளியே!" என்று வேறு சொல்லி விட்டேனே!'

இதை நினைக்கையில், தாரா குலுங்கினாள்; விம்மினாள்.

'அன்புத்தாயாக, அநாதை நிலையத்துக் குழந்தைகளின் ஈன்றெடுக்காத ஆனால் அதற்கும் மேலான அன்புத் தாயாக நான் இருப்பதால்தான் பேராசிரியரின் கோரிக்கையைக் கேட்டது,

தன்வயம் இழந்து பேசிவிட்டேனு? காந்தம் போலக்கவர்ந்த அக்கண்க ளின் ஒளி, எனது வார்த்தைகளைக் கேட்டதும் எவ்வளவு மங்கிவிட்டது? நான் கொடுமைக்காரி...நான் கொடு மைக்காரி...“வெளியே செல்லுங்கள்” என்றல்லவா கூறிவிட்டேன்!'

துயரத்தின் எல்லையிலே தாரா நின் ருள். 'அம்மா' என்று கதறியது உள்ளம்.

'அம்மா...சோகத்தின் பிடியிலோ—இன்பத்தின் நிலையிலோ மனிதன் நிற்கையில் நெஞ்சிலிருந்து வெடித்து வரும் சொல்...இந்த 'அம்மா' என்ற ஒலியை நான் யாரிடம் சொல்லுவேன்... அம்மா என்று நான் யாரை அழைப் பது...ஐயோ...எனது பிறப்பின் இரகசி யம்தான் என்ன? எனது தாய் யார்? அநாதை ஆசிரமத்திலே வளர்த்த என்னை ஈன்றவள் யாரோ?'

துன்ப உணர்ச்சியிலே மனம் அலை பாய்கையிலே ஒன்றிலிருந்து மற்றதை யும் பற்றிக்கொண்டு வாதனைப்பட்டது தாராவின் இதயம்.

ஆனந்தரங்கத்தை வெளியேபோகக் கட்டளையிட்ட காட்சி அவள் மனக் கண்ணிலே இருந்து மறைந்தது. அவருக்குக் கதவை அடைத்து, உள் ளத்தைத் திறந்துவிட்டதால் ஏற்பட்ட நெகிழ்ச்சியும் உள்மனத்திற்குத்தள்ளப் பட்டது.

'அம்மா! அம்மா!' என்று தாராவின் மென்மையான நெஞ்சம் துவண்டது.

'அம்மா!' என்றழைத்தபடி உள்ளே மெதுவாக எட்டிப்பார்த்தாள், ஒரு சிறுமி. தாராவின் அன்பிற்குரிய குழந் தை-ராஜி மெதுவாக அவளை நோக்கித் தளர்நடை போட்டாள்.

அவளைப் பாய்ந்து சென்று வாரி எடுத்தாள் தாரா...

'என் கண்ணே! அன்பே... இன்னு மொருமுறை 'அம்மா' என்றழைக்க மாட்டாயா?...சொல்லு...'அம்மா'

தாரா, அக்குழந்தையை கண்ணீ ரால் நனைத்தாள்; முத்தங்களால் ராஜியின் கன்னங்களில் வழிந்த கண் ணீரைத் தானே உண்டாள்.

குழந்தைக்கு அம்மாவின் செய்கை விசித்திரமாகத்தான் முதலில் பட்டது. என்ருலும் தாராவின் பாசநெருப்பு அப்பிஞ்சு நெஞ்சத்தையும் எளிதில் பற்றிக்கொண்டுவிட்டது!

'அம்மா...அம்மா!' என்று கதறிய படித் தாராவின் கழுத்தைச் சுற்றித் தனது பிஞ்சுக் கரங்களை வளைத்தாள் ராஜி. 'உச்...உச்' என்று ஒலிகள் பிறந்தன!

இந்த விசித்திரக் காட்சியைக் கண்டு வாயிலிலேயே திகைத்து நின்ருர். ஆஸ்ரம நிர்வாகியும், ஊரிலேயே பெரிய புள்ளியுமான, ஸ்ரீமான் ஏகாம்பரம் செட்டியார்!

* * *

கதிரேசன் 'கட...கட' என்று சிரித் தார். 'மேல் அதிகாரியைப் பார்த்து அவ்வளவு துணிவோடு சிரிக்க அவர் எப்பொழுது கற்றுக்கொண்டார்!' என்று வியந்தாள் மாலதி.

மாடி அறையிலே, மகாதேவனின் தனி அறையிலே கதிரேசன் சிரித்த ஒலி, கீழே அவளது அறையிலே தெளிவாகக் கேட்கிறது என்ருல், மிகவும் துணிவான சிரிப்புத்தான் அது! 'பங்களாவே ஆடிவிடும்போல எதிரொலிக்கிறதே!' என்று எண்ணி னுள் அவள்.

“இன்றைக்குக் கதிரேசனின் மனப் போக்கே விசித்திரமாகத்தான் இருக் கிறது. அப்பாவைப் பார்க்க வந்தால் எவ்வளவு அடக்க ஒடுக்கமாக வரு வார், இந்த மனிதர்? அவர் முன்னி லையில், “எஸ்...சார்...எஸ்...சார்” போடுவதைத் தவிர வேறு எதுவுமே செய்யமாட்டாரே...அசட்டுச் சிரிப்பை வழியவிட்டு விரைப்பாக 'சல்யூட்' அடித்து நிற்பாரே... அவரா...இப்படி அட்டகாசமாகச் சிரிக்கிருர்! இன்று இங்கே நுழைந்ததிலிருந்தே விந்தை யாகத்தான் நடந்துகொண்டார்...முத லில் எனது அறையில் எட்டிப்பார்த் தது...“என்ன மிஸ் மாலதி...ரொம்ப 'பிசி'யாகப் படிக்கிற மாதிரி இருக் கிறது” என்று தடபுடலாகப் பேசி விட்டு, இரண்டு, இரண்டு படியாகத் தாண்டி மேலே விரைந்து போனுர்!'

மாலதியின் சிந்தனைச் சங்கிலியை அறுத்தது, திருவாளர் கதிரேசனின் அடுத்த 'அவுட்டுச்' சிரிப்பு...

'சே! என்ன பைத்தியக்காரத்தன மாகச் சிரிக்கிருர்! அப்பா இதை எப்படி அனுமதிக்கிருர்! சுத்த 'நான் சென்ஸ்'...நான் போய் இந்தப் பைத் தியக்காரனை வெளியே தள்ளுகிறேன்' என்று விரைந்தாள் மாலதி.

ஆனால் மாடிப்படியிலே மேலே செல்லச் செல்ல அவள்து வேகம் தடைப்பட்டது. மகாதேவன் நடுங்கிய குரலில் பேசிய வார்த்தைகள், அவளுக்குத் தெளிவில்லாமல் கேட்டன.

பூனையைப்போல் ஓசையில்லாமல், அடிமேல் அடிவைத்து முன்னேறி,மகாதேவனின் அறை வாயிலில் ஒதுங்கி நின்று உள்ளே பார்த்தாள் மாலதி.

அங்கே ஏதோ 'நாடக ஒத்திகை' நடப்பது போல இருந்ததே தவிர, இரண்டு போலீஸ் அதிகாரிகள் கலந்து ஆலோசிக்கும் காட்சியாக அவளுக்குத் தெரியவில்லை!

மகாதேவன், அறையின் ஓர் ஜன்னல் அருகில் கம்பிகளைப் பற்றியபடி நின்று கொண்டிருந்தார், கதிரேசனுக்கு முதுகைக் காட்டியபடி... சற்றுத் தொலைவிலே இருந்தாலும் அவரது உடம்பு இலேசாக ஆடுவது, மாலதிக்கு நன்றாகத் தெரிந்தது!

'ஏன்... அப்பா கதிரேசனுக்குப் பயப்படுகிறாரா? முதுகைக் காட்டி நிற்பதா, என் தந்தை?'—மாலதிக்கு உள்ளத்தில் வலி காண ஆரம்பித்தது.

அட்டகாசமாகக் கால் மேல் கால் போட்டு சோபாவில் சாய்ந்து கொண்டிருந்த தந்தையின் கீழதிகாரி கதிரேசன் அப்பொழுது அவள் கண்களுக்கு 'வில்லனா'கக்காட்சிஅளித்தார்!

'மிஸ்டர் மகாதேவன்! உங்களுக்கு நான் வேண்டிய அவகாசம் தருகிறேன். நன்றாகச் சிந்தியுங்கள்... கதிரேசன் தரம் குறைந்த தத்தாரிப் பயல்அல்ல... கௌரவமான அதிகாரிதான்...நாளை அவனும் உங்களைப் போல உயர்ந்த பதவிக்கு வர முடியும்! உங்களுக்கு அந்தஸ்தைப் பற்றிய சிந்தனை தேவையில்லை! ஆனால் நான் கூறுவதற்குச் சம்மதிக்காவிட்டாலோ பிறகு...பிறகு, மீண்டும் 'கட...கட' எனச் சிரித்தார் கதிரேசன்.

'பிறகு என்ன?' என்று ஆத்திரமாகத் திரும்பினார். மகாதேவன்.

'கண்ணாடிக்குப்பி கதை சொல்லும். தப்பு...தப்பு...சரித்திரமே படைக்கும்! சிரிப்பு தொடர்ந்தது.

'பா...வி...' மகாதேவனின் வார்த்தைகள் குழறின.

'நான் வருகிறேன்... மிஸ்டர் மகாதேவன்...நல்ல முடிவிற்கே வருவீர்கள் என்றே நம்புகிறேன்'!

கதிரேசன் எழுந்து, போலியாக ஓர் 'சல்யூட்' அடித்தார். மகாதேவன் முகம் சுளித்துக்கொண்டார்.

'சடா'ரென அடுத்த அறைப்பக்கம் மறைந்த மாலதியின் நெஞ்சத்தில், 'பட் பட்...தட்...தட்' என்று கதிரேசனின் பூட்ஸ் மாடிப்படிகளில் எழுப்பிய ஓசை சம்மட்டி அடிபோலத் தாக்கியது!

(தொடரும்)



அனுமான் பிராண்ட் சிகரி

— நமது நாட்டில் விளையும் சிகரி கிழங்குகளிலிருந்து தயார் செய்யப்படுகிறது. நூற்றுக்கு நூறு உத்திரவாதமுள்ளது. விபரங்களுக்கு எழுதுங்கள்.

தயாரிப்பவர்கள் :

சரஸ்வதி காபி டிரேடிங் கம்பெனி,
318/320, தெப்பம் மேல் பஜார்,
விருதுநகர்.

பாண்டிய நாட்டின்

வரலாற்றிலே 'இருண்ட காலம்' ஒன்று உண்டு!

அதைக் கடந்து, வீழ்ச்சியுற்ற தமிழகம்

மீண்டும் எழுச்சி பெற்ற சரித்திரம்,

சுவையானது! வீரம் நிறைந்தது!

அதைக் கருவாகக் கொண்டு

படைக்கப்படும்

சரித்திரத் தொடர் கதை,

விடி வெள்ளி!

பிரபல பேனா மன்னர்

வல்லிக்கண்ணன் எழுதுகிறார்!

'புதுமை' மார்ச் இதழில் ஆரம்பமாகிறது.

எற்றுக்கோ என் பிறப்பு?

திருவிடை மருதூர் சேஷாத்ரி

1

கையிலே தங்கப்பாற் குவளை, குவளையின் இடையிலே அவளுடைய மலர் போன்ற விரல்கள். அத் தங்கக் குவளை அவளுடைய விரல்களுடன் போட்டியிட்டுத் தோற்றது போன்று தோற்றமளித்தது. குவளையின் அடியிலே அவளுடைய புடவைத் தலைப்பு. அதன் அடியிலே அவளது இடது கை. பூங்கொடி அசைந்தாடுவது போல் அசைந்து வந்தாள் யசோதரை.

அவளுடைய கருவிழிகள் அஞ்சனம் தீட்டப்பெற்று அழகுற விளங்கின. கையிலும் கழுத்திலும் அணிகலன்கள்; அவள் உடம்பில் ஏறியதால் அதரங்களும் அழகு பெற்று விளங்கின. இரவின் விளக்கொளியிலே அவளழகு பன்மடங்கு பிரகாசித்தது.

அன்னமென நடந்து வந்தாள் அவள்.

வைத்தகண் வாங்காமல் அவளழகைப் பருகியவாறே மஞ்சத்தில் சயனித்திருந்தான் சித்தார்த்தன்.

அவள் அதரங்கள் தாம்பூலம் தரிக்கப்பெற்றதனால் சிவந்து, குவிந்த தாமரை மொக்குப் போன்று அழகாக இருந்தன.

மடக்கொடியென நடந்து அவனருகில் மஞ்சத்தில் அமர்ந்தாள் யசோதரை. தன் தளிர்க்கரங்களால் அவன் அதரங்களில் பால் குவளையை வைத்துப் பால் புகட்டினாள் அவனுக்கு.

அவன் பால் பருகுவதைக் கண்ணுற்ற அவள் அகம் மலர்ந்ததை முகம் எடுத்துக் காட்டியது. மலர்ந்த அம்முகத்தைப் பார்த்த வண்ணம் பாலைப் பருகிக் கொண்டிருந்தான், சித்தார்த்தன். அவன் பருகுவதையே மனக்களிப்புடன் பார்த்துக் கொண்டிருந்தாள் பேரழகி.

அவன் பருகி முடித்ததும் அருகிலிருந்த முக்காலியின்மேல் குவளையை வைத்தான்.

அவளது கைகளைப் பற்றினான் சித்தார்த்தன். அவளது கைகள் குவளையை எடுத்து வந்ததனால் சிவந்திருந்தன.

"யசோ, நீ இட்ட பணியைச்செய்ய வேலைக்காரர்கள் இருக்க, நீ ஏன் பாற்குவளையை ஏந்தி வந்தாய்?... கைகள் சிவந்து விட்டனவே..." என்றான் சித்தார்த்தன்.

"பிரபோ, கணவனுக்கு மனைவி செய்யக்கூடிய பணிகளில் இச்சிறு பணியைக் கூடவா நான் செய்யக் கூடாது?..."

"இம்மாதிரியே எல்லோரும் இருப்பார்களா, யசோ?..."

"இதில் தங்களுக்கு ஏன் ஐயம்?..."

"உன்னைப் போன்றே எல்லோரும் அழகாக இருப்பார்களா, யசோ?..."

"அவரவர்களுக்கு அவரவர்கள் மனைவிமார்கள் அழகு தான்..."

யசோதரைக்கு சற்று மனம் தொங்கிற்று. எப்போதும் 'மக்கள், மக்கள் என்றே பேசுகிறாரே இவர்' என்பது தான் அவள் தாங்கல்.

சித்தார்த்தன் எழுந்து முன் மாடத்திற்கு நகர்ந்தான். அவனைப் பின் பற்றினாள் யசோதரை.

உலகம் அழகு நிலவிலே குளித்துக் கொண்டிருந்தது.

"யசோ, இந்நிலவைப் பார்த்தாயா? எவ்வளவு தண்மையாகஇருக்கிறது......"

யசோதரையின் மனம் மலர்ச்சி பெற்றது.

"ஆம், பிரபோ! நீல வானத்திலே நீலப்பட்டுப் பாதையிலே, விண் மீன்கள் ஒளிர, முழுமதி பவனி வருவதே

பஞ்சணை உறுத்தியது; பால் கசந்தது; விரகத்தின் வேதனையாலோ? அல்ல...அல்ல...விவேகம் விடிவெள்ளியாக முளைத்ததால்!

இனிமையான காட்சி தான் பிரபோ...''

''உம்... முழுமதி என்ன? உன் மதிமுகம் போதுமே'' என்றான் சித்தார்த்தன்.

யசோதரையின் கன்னங்களிலே, செவ்வரி படர்ந்தது. நாணத்தினால் தலை குனிந்தாள்.

அன்புடன் அவள் கைகளைப் பற்றி, அருகில் இருத்தி, அவள் தலையை வருடினான். அவனுடைய மனம் இன்பத்தினால் பூரித்து நின்றது.

''யசோ, நம்மைப்போல எல்லா மக்களும் இந்நிலவை அனுபவிப்பார்களா?...''

"ஆம், பிரபோ, மக்களுக்காகவே தான் இந்நிலவு காய்கிறது..."

"உன்னைப் போலவே எல்லோரும் நகைகள் அணிந்து கொண்டிருப்பார்களா?..."

"ஆம்..."

யசோதரையின் மனம் துணுக்குற்றது. சுத்தோதனரின் எச்சரிக்கை அவள் மனத்தில் தோன்றி நின்றது. வாழ்க்கை உல்லாசமானது. அதுவே எல்லோரும் அனுபவிப்பது. நிரந்தரமானது; அதுவே மனித ஜன்மா எடுத்ததன் பலன் என்ற எண்ணங்களையே சித்தார்த்தன் மனத்தில் உண்டாக்கவேண்டும். எக்காரணத்தை முன்னிட்டும் துன்பமான விஷயங்களை அவனிடம் சொல்லக்கூடாது.

"யசோ, இவ்வரண்மனைக்கு வெளியே எப்படி இருக்கும்?..."

"இவ்வரண்மனையைப் போலவே தான் வெளியிலே இருக்கும்..."

"மக்கள் எல்லோரும் அரண்மனைகளிலே வாழ்வார்களா?..."

"இல்லை, சிறு, சிறு அழகான வீடுகளில் வசிப்பார்கள்..."

"ஏன்?..."

"இவ்வளவு பெரிய அரண்மனை அவர்களுக்குத் தேவையில்லை..."

"இவ்வளவு வசதிகளும் அவர்களுக்கு இராது. அப்படித்தானே..."

"இல்லை, இல்லை, அவரவர்களுக்குரிய வசதிகளை அவரவர்கள் அனுபவிப்பார்கள்..."

"எனவே அவற்றையெல்லாம் பார்க்க வேண்டுமென்று ஆவலாக இருக்கிறது .. யசோ..."

"ஏன், இவ்வரண்மனை, நான், ஒன்றுமே உங்களுக்குப் பிடிக்கவில்லையா?..."

"அன்று... ஏன் நான் வெளியுலகைப் பார்க்கக் கூடாதா?..."

இதற்குப் பதிலாக ஆழ்ந்த பெருமூச்சுதான் யசோதரையிடமிருந்து கிடைத்தது.

'சித்தார்த்தன் வெளியுலகைப் பார்க்கக்கூடாது. உலகத் துன்பங்களை அனுபவிக்கக்கூடாது' என்ற காரணங்களினாலேயே சுத்தோதனர் அவனுக்கென எல்லா வசதிகளும், இன்பங்களும் நிறைந்த இவ்வழகிய அரண்மனையை நிருமாணித்து, அழகி யசோதரையையும் கொண்டு சேர்த்தார். ஆனால், சித்தார்த்தன் என்னவோ மக்கள், வெளி உலகம் என்று எண்ணிக் கொண்டிருந்தான்.

'மக்கள் எப்படி வாழ்கிறார்கள்? வசதிகள் நிறைந்துள்ளனவா? எல்லோருக்கும் என்னைப்போல் பல்லக்கும் ஆட்படைகளும் உண்டா? ரதமும் சன்னவும் உண்டா?...'

இம்மாதிரி எண்ணங்கள் அவன் மனதை ஊடுருவித் துளைத்துக் கொண்டிருந்தன.

இந்நகரைச் சுற்றிப் பார்க்கவேண்டும். இந்நகரிலுள்ள மக்களைப் பார்க்கவேண்டும். நகரின் அழகைக் காணவேண்டும். மக்கள் வாழ்வதைக் காணவேண்டும். ஆனால், வெளியிலே செல்ல தந்தையின் அனுமதி வேண்டுமே என்று கலங்கினன் சித்தார்த்தன். என்னவோ இன்று அவ்வாவல் அதிகமாக இருந்தது அவனுக்கு.

சித்தார்த்தன் பிறக்கும்போது ஒரு மகான் கூறியிருந்தார். 'இவன் உலகை உய்விக்கும் உத்தமனவான். வாழ்க்கையைத் துறந்து மகானகி நிற்பான்' என்று. மன்னன் சுத்தோதனருக்கு தன் மகன் வாழ்க்கையைத் துறந்து செல்வதிலே விருப்பமில்லை. மாருக அவன் வாழ்க்கையிலே ஊன்றி தனக்குப் பின் ஒரு பேரரசனாக விளங்கவேண்டும் என்று கருதினார். வாழ்க்கையில் துன்பம் என்று அவன் கருதினால்தான் அவன் வாழ்வைத் துறக்கப் போகிறான். வாழ்க்கை இன்பம் நிறைந்தது என்று அவனை உணரச்செய்தால்...? அதற்காகத் தான் சிறைவாசம் போன்ற சுகபோகம் நிறைந்த அரண்மனை வாழ்க்கை சித்தார்த்தனுக்கு. குறிப்பிட்ட சில இடங்களுக்கு மாத்திரம் அவன் அனுமதிக்கப்பட்டானேயொழிய மக்களோடு பழகவோ, பார்க்கவோ அனுமதி கிடையாது. அக்குறிப்பிட்ட சில இடங்களிலும் சில காத தூரம் வரை மக்கள் யாரும் வரக்கூடாது. அவன் கண்களில் மக்கள் படும்போது 'உலகம் இன்பம் நிறைந்தது' என்று அவன் எண்ணும்படியாக இருக்கவேண்டும்.

இப்படியெல்லாம் சித்தார்த்தன் கண் காணிக்கப்பட்டான்.

ஆனால்,—

சித்தார்த்தனின் மனம், "மக்கள், வாழ்க்கை" என்று துடித்துக்கொண்டிருந்தது. எவ்வளவுக்கெவ்வளவு ஒன்றை மூடிவைக்கிறோமோ அவ்வளவுக்கவ்வளவு தான் அதில் ஆவல் அதிகமாகிறது. இதற்கு முற்றும் விலக்கல்ல சித்தார்த்தன்.

அவன் மனம் வெளியுலகைக் காண ஆசைப்பட்டது. ஆசை அளவோடு இருந்தது இந்நாள் வரை. இன்று கரை புரண்டுவிட்டது.

"என்ன யோசனையில் ஆழ்ந்து விட்டீர்கள்" என்றாள் யசோதரை அவன் தோளைப் பற்றியவாறு.

திரும்பிப் பார்த்தான் சித்தார்த்தன். தண் மதியின் ஒளியிலே தந்தப் பதுமையென ஒளிர்ந்தாள் அவள். ஆசையுடன் அவளைப் பற்றினான்.

2

அன்புடன் மகனின் தலையை வருடியவாரே உட்கார்ந்திருந்தான் மன்னர் சுத்தோதனன்.

"அப்பா, உலகம் இன்பம் நிறைந்தது அல்லவா?"

"ஆம், குழந்தாய்..."

"மக்களின் வாழ்க்கை இன்பம் நிறைந்தது அல்லவா?..."

"ஆம்..."

"நம்மைப்போல மக்களும் வாழ்கிறார்கள் அல்லவா?"

"........"

"என்ன..."

"அவரவர்களுக்குரிய வசதிகளோடு வாழ்கிறார்கள்..."

'நல்லது, என்னை ஏன் நகரைச் சுற்றிப்பார்க்க அனுமதிக்கமாட்டேனென்கிறீர்கள். நான் இன்னும் குழந்தையா?..."

"பொறு...காலம் வரும்..."

"எப்போது?..."

"இன்றே நான் நகரைப் பார்க்க வேண்டும்...ஏற்பாடு செய்யுங்கள்..."

அழுத்தமாகக் கூறினான் சித்தார்த்தன்.

மௌனம் சாதித்தான் மன்னவன்.

"தங்களுக்குப் பிறகு நான் தானே அரசன்?"

"ஆம் குழந்தாய்.."

"மக்களுடன் தொடர்பிருந்தால் தானே நல்லாட்சி அமையும்?..."

"ஆம்..."

"மக்களுடன் தொடர்பு கொள்ள அனுமதிக்கமாட்டேனென்கிறீர்களே..."

பெருமூச்சு ஒன்று சுத்தோதனரின் உள்ளத்தினின்றும் புறப்பட்டது.

"நல்லது. நாளை நகர்வலத்திற்கான ஏற்பாடுகள் நடைபெறும்..." என்றான் மன்னவன்.

சித்தார்த்தனின் அகம் மலர்ந்து உடல் துள்ளிற்று.

3

வீதியின் இரு மருங்கிலும் ஆடவரும், பெண்டிரும் விதம் விதமாக தங்களை அலங்கரித்துக்கொண்டு தங்கள் இளவரசனைக் காண குழுமி நின்றிருந்தனர். நகரம் பலவிதமாக அலங்கரிக்கப் பெற்றிருந்தது. பலர் மேல் மாடத்தில் நின்று மலர்களை வாரி இரைத்தனர். மக்களின் ஆரவாரம் அவர்கள் முகத்திலே பொங்கி நின்ற மகிழ்ச்சி, அவர்களின் தோற்றம் எல்லாவற்றையும் கூர்ந்து கவனித்துக் கொண்டே வந்தான் சித்தார்த்தன்.

பலரும் பலவித வண்ண ஆடைகளுடன் காட்சியளித்தனர்.

'நம்மைப் போன்றே எல்லோரும் சுகமாக வாழ்க்கை நடத்துகிறார்கள்' என்று நினைத்தான் சித்தார்த்தன்.

அப்படி நினைக்கவேண்டுமென்று தானே சுத்தோதனர் இப்படி ஏற்பாடு செய்திருந்தார்.

அருகில் அமர்ந்திருக்கும் தன் மனைவி யசோதரையின் மலர் முகத்தை பலர் முகத்தோடு ஒப்பிட்டுக் கொண்டே வந்தான்.

இரதம் ஊர்ந்து சென்று கொண்டிருந்தது.

'யசோதரையைப் போல் அழகாக எல்லோரும் இல்லையே, ஏன்?' என்று எண்ணமிட்டது அவன் மனம்.

'யசோதரை அணிந்துள்ள அணிகள் யாருமே அணியவில்லையே, ஏன்? சிலர் அணிகள் இல்லாமலேயே இருக்கின்றனரே ஏன்?...'

"யசோ, எல்லோரும் என்னைப் போல் அணிகள் அணிந்திருப்பார்கள்

என்று சொன்னுயே, இதோ பார் இவர்கள் ஏன் அணிகலன்கள் பூண வில்லை?...'' என வினவினுன் சித்த்தார்தன்.

"அவர்கள் இன்று எண்ணெய் தேய்த்துக் குளித்திருக்கிருர்கள் எல்லாவற்றையும் கழற்றி உள்ளே வைத்திருப்பார்கள்..."

"ஓ, அதுவும் அப்படியா!..."

கூட்டம், மக்கள். மலர்மாரி எல்லாவற்றையும் அனுபவித்தவாறே களிப்புடன் கம்பீரமாக இரதத்தில் சென்று கொண்டிருந்தான் சித்தார்த்தன்.

"அதோ, அங்கே என்ன சலசலப்பு?..."

நோயாளிகள், பலஹீனர்கள், வயதானவர்கள், அங்கஹீனர்கள் யாரும் சித்தார்த்தனின் கணகளில் படும்படி வரக்கூடாது. இதற்கென பாராக்காரர்கள் தெரு வீதிகளில் நிறுத்தி ஏற்பாடு செய்திருந்தார் சுத்தோதனர். ஆனால், அதையும் மீறி ஒரு கிழவன் கந்தல் ஆடையுடனும், பரட்டைத்தலையுடனும் கூட்டத்தில் முட்டித் தள்ளிக் கொண்டு இளவரசனைக் காண முயற்சித்தான். பாராக்காரர்களும், மக்களும் தடுக்க அவன் முண்ட அங்கே சல சலப்பு ஏற்பட்டது.

சித்தார்த்தனின் கூரிய கண்களுக்கு அவனது நரைத்த தலையும், சுருக்கம் விழுந்த கன்னங்களும், கந்தல் ஆடையும் தப்பவில்லை.

"என்ன, அங்கே?..." என்றுகேட்டான் இளவரசன்.

"ஒன்றுமில்லை..." என்று பதில் கிடைத்தது.

"எல்லோரும் பகட்டுடன் நன்ருக இருக்கும்போது அவன் மாத்திரம் ஏன் ஒட்டி, உலர்ந்து கந்தலுடன் காட்சியளிக்கிருன்?... அவனை ஏன் பலரும் கெட்டித் தள்ளுகிருர்கள்?..."

பிறகு அவன் எதையுமே ரசிக்க வில்லை, சிந்தனையில் ஆழ்ந்தவாறே இருந்தான்.

4

படுக்கையிலே புரண்டு, புரண்டு படுத்தான் சித்தார்த்தன். உறக்கம் வரவில்லை, திரும்பத் திரும்ப அவன் கண்ட காட்சிகள் அவன் மனக் கண் முன்னே வந்து நின்றன.

குழுமி நின்ற மக்கள், அவர்களின் மகிழ்ச்சி, மலர்மாரி, அவர்களது தோற்றம் எல்லாம் அவன் மனக் கண்ணில் தோன்றின.

எல்லோரையும் முண்டி நின்ற கிழவனின் தோற்றம் யாவற்றினும் முன்னதாக நின்றது. நரைத்த அவனது பரட்டைத்தலை, ஒட்டி உலர்ந்த கன்னங்கள், கந்தல் ஆடை இவையாவும் அவன் மனக்கண்ணில் காட்சியளித்தன.

அருகில் பார்த்தான். யசோதரை ஆழ்ந்த துயிலில் இருந்தாள். துயிலும் போது அவளழகு அற்புதமாக இருந்தது. மெதுவாக மஞ்சத்தினின்றும் எழுந்தான்.

அன்றும் நிலவு காய்ந்து கொண்டிருந்தது.

தண்ணென அவன் உடலைத் தாக்கிற்று.

அண்ணுந்து பார்த்தான்; நிலவின் ஒளியில் வானம் மிளிர்ந்தது.

ஏதோ ஒரு நூதன உணர்ச்சி அவனுள்ளத்தில் பரவிற்று, சிந்தனை தீவிரமாயிற்று. மாடத்தை விட்டிறங்கி சுற்றிலும் அமைந்திருந்த பூங்காவிற்கு வந்தான்.

இலைகளும், செடிகளும் மோகன நிலவில் இறங்கி நிற்பதுபோல் இருந்தது. எங்கும் பரந்து நின்ற அமைதி அவ்விரவிற்கு அழகூட்டியது. யாரோ இருவரின் நகையொலி கேட்டது.

"இந்நேரத்தில் இவ்விடத்தில் யாராக இருக்கும்?..."

ஒரு விசித்திரமான ஆவல் அவனுள்ளத்திலே எழுந்தது. மறைந்து நின்று அவர்களைக் கவனித்தான். அவர்கள் ரதசாரதி சன்னுவும், அவனது மனைவியும் என்று தோன்றிற்று.

"அவர்களும் நம்மைப்போல் எல்லா சுகங்களையும் அனுபவிக்கிருர்கள்'' என்று நினைத்தான் சித்தார்த்தன்.

நரைத்த பரட்டைத்தலையும், ஒட்டி உலர்ந்த உடலும் அவன் நினைவிற்கு வந்தன.

அதற்குள் சன்னுவின் மனைவி வீட்டிற்கு விரைந்தாள். சன்னு மாத்திரம் உட்கார்ந்திருந்தான். அவன் முன் விரைந்து தோன்றினுன் சித்தார்த்தன்.

சன்னு சற்று பயந்துவிட்டான். எனினும் சமாளித்துக் கொண்டான்;

"இளவரசே, இது என்ன இந்நேரத்தில்?..." என்றுன் அன்பு தோய்ந்த குலிரல்.

"அவனையே பார்த்துக் கொண்டிருந்தான் சித்தார்த்தன். சன்னுவின் தலை இன்னும் நரைக்கவில்லை. ஆனல், அந்நரைத்த தலை?..."

"சன்னு, உன் மயிர் கருப்பாக இருக்கிறது இல்லையா?..."

"ஆம், அரசே..."

"ஏன்? அவனுக்கு மாத்திரம் தலை வெளுப்பாக இருந்ததே..."

"அவன் கிழவன்..."

"கிழவனு, அப்படி யென்ருல்?..."

"மூப்படைந்து விட்டான்..."

"எல்லோரும் மூப்படைவார்களா?..."

"ஆம், அரசே..."

"உனக்குக் கூட மூப்பு வருமா?..."

"ஆம்..."

"எனக்கு?..."

"எல்லோருக்குமே..."

"உடல் தளர்ந்து விடுமா?..."

"உடல் தளரும், பற்கள் உதிரும், சுருக்கம் விழும்..."

"அது இல்லாமல் இருக்க முடியாதா?..."

"எல்லோரும் அதை அனுபவித்துத் தானுக வேண்டும்?..."

"எல்லோரும் கந்தல் அணிந்து கொள்ளத்தான் வேண்டுமா?..."

"இல்லை, ஏழைகள் தான் கந்தல் அணிந்து கொள்வார்கள்..."

"அவன் ஏழையா?..."

"ஆமாம்..."

"அப்படி யென்ருல்..."

"பொருள் இல்லை..."

"பொருள் எதற்கு?..."

"சுகமாக வாழ..."

"அப்படி யென்ருல் அவன் சுகமாக வாழவில்லையா?..."

நாக்கைக் கடித்துக் கொண்டான் சன்னு. தவறிப்போய் என்னென்னவோ சொல்லி விட்டோமே என்று துணுக்குற்ருன் அவன். அதற்குள் அவன் மனைவி வந்து விட்டாள்.

"அவனுக்கு ஏன் பொருளில்லை?..." தொடர்ந்தான் சித்தார்த்தன்.

"அவன் பிறப்பு அப்படி..."

சிந்தித்தவாறே இளவரசன் நகர்ந்தான். அவனைச் சிந்தனை ஆட்கொண்டு விட்டது. சிந்தித்தவாறே மேன் மாடத்திற்கு வந்தான். சுற்றிலும் நிலவி நின்ற அமைதி அவனது சிந்தனையைத் தூண்டிற்று. மாடத்தின் குட்டைச் சுவரிலே அமர்ந்து நிலவைப் பார்த்தவாறே ஆழ்ந்து யோசித்துக் கொண்டிருந்தான்.

'அவன் கிழவன். கந்தல் அணிந்திருக்கிருன். அவனுக்குப் பொருளில்லை. அவன் சுகமாக வாழவில்லை. அவன் உடல் தளர்ந்திருக்கிறது. அவன் ஏழை.

ஏன்?

நான் எத்தனையோ சுகங்களை அனுபவிக்கிறேன். பணி செய்ய ஆட்கள் இருக்கிருர்கள். ஏராளமாகப் பொருள் இருக்கிறது. நான் ஏழை இல்லை, இது ஏன்?

'நான் ஏன் ஏழையாகப் பிறக்கவில்லை? அவன் ஏன் ஏழையாகப் பிறந்தான்?

'இதற்கெல்லாம் ஏதோ ஒரு காரணம் இருக்கிறது, அது என்ன?'

கிழவனின் தோற்றம் மனக்கண் முன் தோன்றிற்று.

நிலவையும், நீலவானத்தையும் பார்த்தான்.

'நான் இங்கே பிறந்தேன ஏன்?...'

'நான் பிறந்தேன் ஏன்?...'

மறுபடியும் சிந்தனை அலைகள் அவனைத்தூக்கிச் சென்றன. எல்லாவற்றையும் விடுத்து அவன் பிறக்க வேண்டிய காரணத்தை ஆராய முற்பட்டு விட்டான் சித்தார்த்தன்.

திரும்பத் திரும்ப அக்கிழவனின் தோற்றம் அவன் மனக்கண்முன் வந்து நின்றது.

கிழவனின் கண்கள் அவனுடன் பேசின. அந்தக் கண்கள் அவனுள்ளத்திலே ஆழப் பதிந்தன. என்னவோ அவனுள்ளத்திலே வேதனை தோன்றிற்று. கிழவனின் கண்களில் தோன்றிய சோகம் அவனை ஆட்கொண்டது.

"ஏன் இந்த வேதனை?..."

சோகம் இன்னதென்று தெரியாக அவன் சோகத்தை அனுபவித்தான்.

ஆனால், அதுதான் சோகம் என்பது அவனுக்குத் தெரியாது.

"மனதில் ஏன் இந்த உபாதை?..."

சிந்திக்க, சிந்திக்க சூன்யமே தோன்றிற்று. விடை கிடைக்கவில்லை.

5

என்னவோ கனவு கண்டு விழித்துக்கொண்டாள் யசோதரை, அருகில் கணவனைக் காணவில்லை.

"எங்கே சென்று விட்டார்?..."

பர பரப்புடன் அங்கு மிங்கும் தேடினாள். மேன் மாடத்திற்கு வந்தாள். அங்கே குட்டைச் சுவரிலே ஆழ்ந்த சிந்தனையிலே துயின்று கொண்டிருந்த சித்தார்த்தனைக் கண்டாள்.

பதறினாள் பேதை. அருகிற் சென்று "பிரபோ..." என்றழைத்தாள். பதிலில்லை.

"அரசே..." என்று கூப்பிட்டாள், விடையில்லை. துடித்தாள் எழிலரசி.

அவன் முகத்தைத் தன்பால் திருப்பினாள். அம்முகத்திலே என்றும் தவழும் சாந்தம் இல்லை. மலர்ச்சி இல்லை. சோகம் கப்பியிருந்தது. ஏற்கனவே துடிக்கும் அவளுடைய உள்ளத்திலே வேகமாக மோதிற்று...

திருப்பிய முகத்திலே உணர்வில்லை.

"அன்பரே..." என்றாள் கதருத நிலையாக.

"இல்லை, எதற்குத் தான் பிறந்தேன். இதன் காரணத்தை ஆராய்ந்தே திருவேன். அதற்கே பிறந்தேன்..." என்று முணு முணுத்தான் சித்தார்த்தன்.

திகைத்து நின்றாள் அவ்வழகு மடந்தை.

★

போன்: 55142

லோட்டஸ் சேமியா

இது விஞ்ஞான ரீதியில் சுத்தமாகச் செய்யப்பட்டது.

யாவரும் இதை உபயோகியுங்கள்!

கிடைக்குமிடம்:

லோட்டஸ் சேமியா கம்பெனி

81, G. A. ரோட்,

மதருஸ்-21.

உலகப் பிரசித்திப் பெற்ற

டாடா - மெர்ஸிடிஸ் - பென்ஸ்

டீஸல் டிரக் - பஸ் சேஸிஸ்

உலகத்தின் முதலாவது டீஸல்

இன்ஜின்

ஜெர்மனி தேசத்தின் டெய்ம்லர்
பென்ஸ் தயாரிப்பு



மாடல் LP 312/48—5 டன்

"புல் பார்வார்ட்" கண்ட்ரோல் சேஸிஸ் 190" W. B.
பஸ் சொந்தக்காரர்களுக்கும் ஸ்டேட் டிரான்ஸ்போர்ட்டுக்கும்
உகந்தது.

எல்லா மேக்குகளுக்கும் மாற்றி அமைக்க
தனி டீஸல் இன்ஜின்களும் கிடைக்கும்.
மதுரை, ராமனாதபுரம், திருநெல்வேலி ஜில்லாக்களுக்கு
அதிகாரம்பெற்ற டீலர்ஸ்:

பாண்டியன்

ஆட்டோமோபைல்ஸ் பிரைவேட் லிமிடெட்,

5, ஸ்காட் ரோடு : : மதுரை.

தாரம் தந்த தாலி

குமரி அனந்தன் எம்.ஏ.

கடித உறையிலே மலேயா முத்திரை இருந்தது. இவ்வளவு நாட்களும் கடிதமே எழுதாத அவள்தான் எழுதியிருப்பாளோ? உறையைக் கிழித்தான் சுகுமார். உள்ளே மஞ்சள் நிறமான திருமண அழைப்பிதழ் இருந்தது.

திருமண அழைப்பிதழ்

அன்புடையீர்,

1958—12—19 வெள்ளிக்கிழமை காலை மணி *9*-க்கு மேல் *10*-க்குள்
எனது மகள்
செல்வி: **கமலத்திற்கும்**
கோலாலம்பூர் வருமான வரி அலுவலகத்தைச் சேர்ந்த திரு. அ. திருக்குமரன்
அவர்களின் ஒரே மகன்
செல்வன். **மாணிக்கம்** M. A., க்கும்
கோலாலம்பூர், நார்கார்டோ வீதியில் உள்ள மணமகன் வீட்டில் வைத்து திருமணம் செய்ய நிச்சயித்திருப்பதால், தங்கள் உற்றார் உறவினரோடு வந்து மணமக்களை வாழ்த்துமாறு கேட்டுக்கொள்கிறேன்.

அவ்வண்ணமே விரும்பும்,
அ. திருக்குமரன்,
கோலாலம்பூர்.

இங்ஙனம்,
இ. ஆறுமுகசாமி,
கோலாலம்பூர்.

ஒரு முறைக்கு இரு முறை அழைப்பைப் படித்தான். ஆமாம்; அதே கமலாதான். இது அவள் திருமணத்திற்கு அச்சிட்டுப் பிறருக்கும் அனுப்பப்பட்ட இரண்டாவது அழைப்பிதழ். முதல் அழைப்பிலே மணமகனாக சுகுமார் பெயர் பொறித்திருந்தது. அவன் தான் மணமகனாக இருந்தான்; மன்றல் அழைப்பிலே மட்டுமல்ல; மணமேடையிலுந்தான். கமலாவிற்கு இது இரண்டாவது மணம்............ அழைப்பை உறையிலே வைத்தான். மறக்க முடியாத அவன் திருமண நாளை – அவனுக்கும் கமலாவிற்கும் நடந்த திருமணத்தை – நோக்கி ஓடியது மனம்.

* * *

பந்தலிட்டு, வாழை நட்டு, மேளம் கொட்டி, குழலிசைத்து திருமணத்தை நடத்திவிட்டார்கள் காலையிலே. தாலி கட்டியபோது அவன் கை நடுங்கிய நடுக்கம்! கருத்திலே ஒரு பெண்ணை வைத்து, தாலியை இன்னொரு பெண்ணின் கழுத்திலே கட்டினான். அவன் உள்ளம் நாடிய காதலியை ஒதுக்கிவிட்டு, உற்றாரும் பெற்றாரும் வேறு பெண்ணை அவனுக்கு மனைவி ஆக்கிவிட்டனர்.

காதல் கொண்ட உள்ளங்களைப் பிரிப்பதிலேதான் சமூகம் எத்தனை ஆர்வம் காட்டுகிறது? அதற்குத் துணையாக ஏற்றத்தாழ்வு, சாதிமதம் என்ற ஆயுதங்கள்தான் எத்தனை!

அவன் காதலித்த சுகுணா எந்த விதத்திலும் குறைந்தவளல்ல. அழகி; பண்புடையவள்; படித்தவள். மேலும் உறவுப் பெண். சிறு வயதிலிருந்தே சுகுமார் சுகுணாவோடு அன்போடு

**முதலிரவு முழுமையாகவில்லை; ஏன்?...அங்கே தாரமில்லை...
அவள் தந்த தாலிதான் கதை கூறியது!**

பழகி வந்தான். அன்பு முற்றிக் காதல் கனிந்தது. கல்லால் அடித்து கனியைச் சிதைப்பது போல், அவன் காதல் கனியைச் சிதைத்துவிட்டார் அவனுடைய தந்தை.

சமூகத்தையோ பெற்றோர்களையோ மட்டும் குறை கூறுவதில் என்ன பயன்? தடைகளை எதிர்த்து வெற்றி காணமுடியாத கோழையாக இருந்ததினால்தானே சுகுண அமரவேண்டிய இடத்தில் கமலா இருந்தாள்? இது அவன் குறைதானே?

"ஐயாயிரம் ரூபாயும் பெண்ணும்" என்றார் சுகுமாரின் தந்தை.

"பெண் மட்டுந்தான்! காலணா என்றால் கொடுக்க இயலாது! என் மகள் அழகிற்கும் படிப்பிற்கும் ஆயிரம் பேர் காத்துக்கிடக்கிறார்கள். விருப்பமிருந்தால் பெண் எடுங்கள்" என்றார் சுகுணவின் தந்தை.

பெற்றோர்களின் பிடிவாதம் காதலர்களின் வாழ்விலே இடியாக வீழ்ந்தது.

சுகுமாரின் மறுப்பும் வாதங்களும் தந்தையின் பிடிவாதத்தைத் தளர்த்தவில்லை. அவன் கண்ணீர் தாயின் கண்ணையும், கருத்தையும் கலங்க வைத்தது. ஆனால் தந்தையின் கல் மனதைக் கரைக்கச் சக்தியற்றதாகி விட்டது. சுகுமார் சுகுணவை மணந்தால் தூக்கிட்டு இறந்துவிடுவேன் என்றார் அவன் தந்தை. சுகுமார் பயந்துவிட்டான்; பணிந்துவிட்டான். வெற்றிப் புன்னகையோடு கமலாவையும் சீராக ஆறுயிரம் ரூபாயையும் கொண்டு வந்தார் தந்தை.

இப்பொழுது அவனால் காதலையும் தள்ளமுடியவில்லை; எல்லோர் வாழ்விலும் கரும்பான முதல் நாள்; அவனுக்கு வேம்பாக — எட்டியாக இருந்தது.

பாவம், சுகுண! அழுதுகொண்டிருப்பாள். ஒரு வேளை அழுவதற்கே சக்தியற்று மயக்கமுற்றுக் கிடப்பாள். நேருக்கு நேராகப் பேசியபோதும், உள்ளத்திலே ஊறிய உணர்ச்சி ஊற்றைக் காதல் கடிதங்களாக வரைந்த போதும் அவளைக் கைவிடமாட்டேன்" என்று ஆயிரம் சத்தியங்கள் செய்திருந்தானே பாவி! இன்று கைவிட்டுவிட்டான்; துரோகியாகி விட்டான். சுகுணவின் கண்ணீர் அவன் வாழ்வையே சுட்டுவிட்டதா?

மணமுடித்த மனைவி கமலாவோடு மனம் ஒன்றி வாழ்க்கை நடத்த முடியாது. சுகுண இதயம் வெம்பிக் கிடக்கிறாள். ஐயோ! எல்லோருடைய வாழ்வும் துன்பமாகிவிட்டதே!

இரவு வெகு நேரம் ஆகிவிட்டது. இப்பொழுது கமலா வருவாள். எத்தனை இன்பக் கனவுகளைத் தீட்டியிருக்கும் அந்த இளம் உள்ளம்! அவன் உள்ளம் மாசு படிந்தது என்பதை அவள் அறிவாளா? கணவனுடைய உள்ளத்திலே அவள் இடம் பெறவில்லை; இனியும் இடம் பெற முடியாது என்பது தெரியுமா அந்த அபலைக்கு!

மகளை நல்ல இடத்திலே நல்ல கணவனுக்குக் கொடுத்து விட்டோம் என்ற திருப்தியோடு நாளை கோலாலம்பூர் செல்கிறார்கள் அவள் பெற்றோர்கள். தன்னையே நம்பி நிற்கும் கமலாவின் வாழ்வு துன்பச் சூறாவளியில் சிக்கி விட்டதே? அவன் இன்னொரு பெண்ணைக் காதலிக்கிறான் என்ற செய்தி அவளுக்குத் தெரிந்தால் அவள் உள்ளம் வேதனையால் வெடித்துச் சிதறிவிடுமே?

காதலை அறிவு கொண்டு பிரிக்கப் பார்த்தான். ஆனால் மனம் காதலைத் தழுவிப் பிடித்து இறுக அணைத்தது!

அறைக் கதவு திறக்கும் ஒலி கேட்டது. கமலாவாகத்தான் இருக்கும். எதிர்நோக்கும் இன்பத்தை இதயத்தே புதைத்து நாணி கோணி வருவாள் அவன் அருகில் இப்பொழுது. திரும்ப நினைத்தான். ஆனால் முகமெல்லாம் வியர்த்துக் கொட்டியது. அகத்திலே புயலிருக்கும் பொழுது முகத்திலே, பேச்சிலே தென்றலை வரவழைக்க முடியுமா? வானத்தைப் பார்த்தான். நிலா இல்லை. நிலாவை உடைத்து யாரோ சிதறவிட்டதைப் போல் வானமெங்கும் வெள்ளிகள் சிதறிக் கிடந்தன.

திரும்பினான். அவன் உள்ளம் வேதனைப் பாம்பாகி உடற்கூண்டிற்குள்ளே நெளிந்து கொண்டிருந்தது. கட்டிலைச் சுற்றிக் கட்டியிருந்த மாலைகளெல்லாம் பாம்புகளைப் போல் தொங்கிக் கொண்டிருந்தன.

கமலா வந்தாளே...? அவளைக் காணவில்லை. கண்களை அங்கும் இங்கும் திருப்பினான். எங்கும் திருப்

பினான். கமலா அங்கு இல்லை. ஒரு வேளை காற்றால் கதவு திறந்திருக்குமோ?

அறையின் நடுவே பழத்தட்டிருந்த முக்காலியிலே ஏதோ மின்னிக் கொண்டிருந்தது. விரைந்து சென்று பார்த்தான். தாலி...!

ஆம்; காலையில் கமலாவின் கழுத்தில் கட்டினனே அதே தாலி! அதன் கீழே கடிதம் ஒன்றிருந்தது.

பெருமை சான்றீர்,

மங்களகரமான தாலியைக் கண்டதும் உங்களுக்குச் சினம் பொங்கி வரும். மன்னியுங்கள். பொறுமையோடு படியுங்கள்.

வாழ்க்கையில் நாம் எதையோ நினைக்க, முடிவு எப்படியோ அமைந்து விடுகிறது. இன்பத்தை எதிர் நோக்கிச் செல்லும் மனம் எப்பொழுதும் தவறாமல் அதைச் சென்றடைந்து விடும் என்று கூறமுடியவில்லை. என் மனத்தகத்தே எழும் கூக்குரலை அடக்கி, இக் கடிதத்தை எழுதுகிறேன்.

என் பெற்றோர்கள் உங்களை ஏமாற்றிவிட்டார்கள். நமது மணத்திற்கு முன்பே உண்மையைக் கூறி திருமணத்தை நிறுத்திவிடத் துடித்தேன். ஆயினும் நானும் வாழவேண்டும் என்ற ஆசை என்னைப் பேசாமடைந்தையாக்கிவிட்டது; நீங்கள் நல்லவர். என்காரணமாக உங்கள் வாழ்வு பாழாவதை நான் விரும்பவில்லை. உங்களையும் துன்பக் கடலில் ஆழ்த்தி, நானும் வேதனையோடு சாக விரும்பவில்லை.

கோலாலம்பூரில் இருந்த என் பெற்றோர்கள் அங்கே வரன் தேடாமல் இங்கே வரக் காரணமென்ன? என் காலில் ஒரு கட்டு இருப்பதை நீங்கள் பார்த்திருப்பீர்கள். கப்பலில் வரும் பொழுது காப்பிப் பாத்திரம் விழுந்து விட்டதால் ஏற்பட்டு விட்ட புண் என்று என் பெற்றோர்கள் உங்களுக்கு விளக்கம் கூறியிருப்பார்கள்! ஆனல் உண்மை அதுவல்ல. என் காலில் ஏற்பட்டிருப்பது குஷ்டம் — ஆம்; தொழுநோய்! மூடி மறைத்து வைப்பது என்ருவது வெளியாகி உங்களைச் சோகக் குழியிலே புதைத்து விடும். அப்பொழுது நான் மட்டும் வாழ முடியுமா?

யாரும் கழற்றத் துணியாத மங்கல அணியை நான் கழற்றி உங்களிடம் சேர்த்துவிட்டேன். நீங்கள் என் நினைவை — அதோடு தொடர்பு கொண்ட இந்த நாளை — மறந்து விடுங்கள்.

என் தந்தை சீராகக் கொடுத்த ஆறுயிரம் ரூபாயையும் எங்கள் தவறுக்குப் பிராயச்சித்தமாகக் கருதுங்கள். நான் சென்னைக்கு என் பெற்றோர்களிடம் இப்பொழுதே போகிறேன். திருமணத்திற்கு வந்திருக்கும் என் தோழியின் காரிலேயே செல்லப்போகிறேன். என்னைத் தேடவேண்டாம்,

ஒரே ஒரு வேண்டுகோள். தங்களுக்குப் பிடித்தமான ஒரு ஏழைப் பெண்ணைத் தேடுங்கள். இந்த ஆறுயிரம் ரூபாயையும் அவள் கொடுத்ததாக எண்ணிக்கொள்ளுங்கள். அவளை மனைவியாக்க இதே தாலியைப் பயன் படுத்துங்கள்.

உங்களுக்குத் துன்பத்தைக்கொடுத்து விட்ட என்னை மன்னியுங்கள்; வருகிறேன் அண்ணு.

கமலா

சுகுமார் அந்தத் தெய்வத்திடம் நன்றி கூற விடெங்கும் தேடி ஓடினன். அவள் போய் விட்டாள். செய்தி அறிந்த அவன் தந்தை, நல்ல காலம் தப்பினேம் என்று பெருமூச்சுவிட்டார். சுகுணுவின் தந்தையின் காலைப்பிடித்துக் கெஞ்சாக் குறையாகக் கெஞ்சி சுகுணவை மருமகளாக்கினர்.

* * *

"அப்படி என்ன சிந்தனை! பையனுக்கு என்ன பெயர் வைக்கலாமென்ற ஆலோசனையா?" என்று கேட்டுக்கொண்டே குழந்தையோடு அங்கு வந்தாள் அவன் காதல் மனைவி சுகுணு.

"கமலாவிற்குக் கல்யாணமாம். அழைப்பு அனுப்பியிருக்கிருள்"

"என்ன? கமலாவிற்கா? அழைப்பு எங்கே?

அழைப்பு இருந்த உறையைச் சுட்டிக் காட்டினன் அவன். சிந்தனை செய்தது மனம். "எத்தகைய நல்ல தியாக உள்ளத்திலும் பருவம் ஆசையைத் தூண்டி உண்மையை மறைத்து விடத்தான் செய்கிறது. அன்று பெருநோய் காரணமாக என் வாழ்வைக் கெடுக்க வேண்டாம் என்று நினைத்தவள் இன்று மாறிவிட்டாளே? பாவம் ...மாணிக்கம்..."

"கடிதத்திலே என்ன எழுதியிருக்கிருள்"

"கடிதமா ?"

"ஏன் இதோ இருக்கிறதே! நீங்கள் பார்க்கவில்லையா? சிறிதாக மடித்து வைத்திருக்கிருள்!"

அவன் கடிதத்தைப் பிரித்தான். இருவரும் படித்தார்கள்.

அன்புள்ள அண்ணு,

திருமண அழைப்பிதழ் படித்திருப்பீர்கள். உங்களுக்கும் சுகுணுவிற்கும் குழந்தை பிறந்திருக்கும் நற்செய்தியை என் தோழியொருத்தி துப்பறிந்து எனக்கு எழுதியிருந்தாள். குழந்தைக்கு என் வாழ்த்து.

தங்கள் மனம் விரும்பிய காதல் மனைவியோடும் குழந்தையோடும் இருக்கின்ற இந்த நல்ல நிலையில் உண்மையை எழுதலாம் என்று நினைக்கிறேன்.

என் காலில் ஏற்பட்டிருந்த புண் காப்பிப் பாத்திரம் விழுந்ததால் ஏற்பட்டதுதான், குஷ்டமல்ல!

நமது மண நாளன்று மாலையில் உங்கள் புத்தகங்களைப் புரட்டிக் கொண்டிருந்தேன். அகநானூறைக் கண்டதும் எடுத்துப் பிரித்தேன். அதன் உள்ளே—நீங்கள் நினைவு மறதியாக வைத்திருக்க வேண்டும் — ஒரு கடிதம் இருந்தது. பிறர் கடிதத்தை படிக்கும் வழக்கம் என்னிடம் இல்லை. ஆயினும் "அன்புள்ள அத்தான்" என்று அக் கடிதம் ஆரம்பமானதால் என்னல் அதைப் படிக்காமல் இருக்கமுடியவில்லை.

அக்கடிதம் உங்கள் காதலி — இப்பொழுது மனைவி — சுகுணு எழுதியது. இதயத்தோடு இதயமாக இருவரும் காதலிக்கிறீர்கள் என்பதைப் புரிந்து கொண்டேன். மேலும் பெண் சீராக ரூபாய் ஐயாயிரம் கொடுக்க மறுத்ததால்தான் உங்கள் இருவருக்கும் நடக்க வேண்டிய திருமணம் தடைப் பட்டது என்பதும் கடிதத்திலிருந்து தெரிந்தது.

வேருெரு பெண்ணைக் காதலிக்கும் உங்களோடு நான் வாழ்ந்தால், அது வாழ்க்கையாகவே இருக்காது. எந்தப் பெண்ணும் ஒப்பமாட்டாள். அன்றியும் உங்கள் காதலுக்கு நான் தடையாக ஏன் இருக்கவேண்டும்?

சுகுணு, உங்கள் என்-வாழ்வு, பாழ்படாமல் இருக்க ஏதாவது வழி தேடினேன். தங்கள் தந்தை கேட்ட ஐயாயிரத்துக்கு என் தந்தை ஆருயிரம் கொடுத்துவிட்டாரா. நீங்கள் கேட்ட சுகுணுதானே இல்லை...?

உங்கள் காதலைக் காட்டி நான் விலகுவதென்றல் அது உங்களை எனக்காக வேதனைப்படச் செய்யும். உங்கள் தந்தையும் வெறுப்பார்.

குஷ்டரோகமுள்ள பெண்ணோடு வாழ்க்கை நடத்த வேண்டியிருந்த நிலை நல்லகாலமாக மாறிவிட்டது என்ற எண்ணம் உங்கள் எல்லோருக்கும் உண்டாகச் செய்தேன். உங்கள் காதல் ஈடேறவும் வழியாகிறதல்லவா? எல்லாம் நல்லபடியாக நடந்துவிட்டதிலே எனக்குப் பெரும் ஆறுதல்.

என் திருமணத்திற்கு நீங்கள் இருவரும் குழந்தையும் வரவேண்டும். உங்கள் வாழ்த்து இதய ஆழத்திலிருந்து தூய்மையாக வரும். அது எங்கள் வாழ்வை வளமாக்கும். மறக்காமல் வாருங்கள்.

அன்புள்ள,
கமலா.

வானவில் பாலம்

இயற்கை உலகில் எங்கெல்லாமோ, பாலங்களையும், வளைவுகளையும் செதுக்கி இருக்கிறது. ஆனல், அமெரிக்க ஐக்கிய நாட்டில், உட்டா மாகாணத்தில் உள்ள "வானவில் பாலம்" தான், இயற்கையின் மகத்தான பாலம். 309 அடி உயரமும், 278 அடி அகலமுமுள்ளது இப்பாலம்!

போன் : 203 தந்தி : 'TRANSPORT''

சண்முகம் டிரான்ஸ்போர்ட்

பஸ் & லாரி சர்வீஸ்

அருப்புக்கோட்டை.



எங்களுடைய லாரிகள் கீழ்க்கண்ட ஊர்களுக்குத் தினசரி போய் வந்து கொண்டிருக்கின்றன.

1. அருப்புக்கோட்டை To ராஜபாளையம்
2. அருப்புக்கோட்டை To தூத்துக்குடி
3. விருதுநகர் To பெருநாழி
4. விருதுநகர் To கடலாடி (Via) முதுகுளத்தூர்
5. மதுரை To சாயல்குடி
6. மதுரை To அருப்புக்கோட்டை

பொது ஜனங்களும், வியாபாரிகளும் எங்களை ஆதரிக்கும்படி பணிவுடன் கேட்டுக் கொள்கிறோம்.

பிராஞ்சு: மதுரை

போன் : 512 தந்தி : "TRANSPORT"

வருவாளா அவள்?

புனலன்

நிலவு தூங்க நினைவைக் கிள்ளும்
நெஞ்சில் கனவில் வருவளோ...?

புலருங் காலைப் பொழுதில் கவிதை
புனைய போதை தருவளோ...?

மலையின் அணைய கலச முலையை
மயங்கிச் சாயத் தருவளோ...?

அலையின் அணைய நினைவுத் திரள்கள்
அமுத • வெறியைத் தருவதோ...?

இளமை கிளற நினைவு துள்ள
இனிய கனவில் வருவளோ...?

குளிருங் காலை குமைப்பு மூட்டிக்
கொஞ்சி முத்தம் தருவளோ...?

நெளியும் மனதில் நினைவு கோடி
நெளிய அருகில் வருவளோ...?

களியி லாழும் கவிதைத் தொடர்கள்
காம வெறியைத் தருவதோ...?

இதயம் நணையும் கவிதை புனைய
இளமை கிளற வருவளோ...?

கதைகள் சொல்லி கவிதை பாடி
கலச மதுவைத் தருவளோ...?

இதழ்கள் மின்ன விழிகள் பேச
இதயக் கூண்டுக் கிளியினுள்

மதுவை வார்த்து மயங்கும் எண்ண
மனசின் அரங்கில் வருவளோ...?

நீடித்து உழைக்கும்

பாத்திரங்கள்

எங்களிடத்தில் அலுமினியம், கண்ணாடி சாமான்கள், பீங்கான், எனாமல் தினுசுகள், விளக்குகள், ஊறுகாய் ஜாடி, புட்டி, கார்க்கு, எவர்சில்வர் பாத்திரங்கள் மற்றும் பலவித மான சாமான்களும் மொத்தமாகவும், சில்லரையாகவும் கிடைக்கும்.

சு. சந்தோஷ நாடார் & சன்

1/4, ஈவினிங் பஜார், பி. டி. மதருஸ்.



S. SANTHOSA NADAR & SON

1/4. EVENING BAZAR .... PT. MADRAS.

BAROOL

கிளை ஆபீஸ் : 23, நைனியப்ப நாய்க்கன் தெரு, மதருஸ்—3.

7, ஹைரோடு, திருநெல்வேலி ஜங்ஷன்.

காம்பிலிதேவன்

சீகம்பட்டி ராஜகோபாலன்

"ஜெபுன்னிஸா! நீ அவசரப் பட்டு விட்டாய்!... உன் கோரிக்கைக்கு இணங்கமுடியாதவனாக இருக்கிறேன். என்னை மன்னித்துவிடு!"

உறுதியின் முத்திரை பதித்த அவன் கூற்று ஜெபுன்னிஸாவின் உள்ளத்தை உலுக்கியது. அஞ்சனம் தீட்டப் பெற்ற அவளின் அழகிய விழிகள் கண்ணீருக்குக் கட்டியங் கூறின. நெஞ்சின் அடிவாரத்தில் பொங்கி வரும் துயர வெள்ளத்தை அடக்கிக் கொண்டு அவள் கேட்டாள்.

"அரசே! சாகரின் அந்தப்புரத்திலேயே அடைபட்டுக் கிடந்தபோது என் மனதில் எந்த விதமான எண்ணங்களும் இடம் பெற்றிருக்கவில்லை; காதல் என்பதே என்னவென்று புரியாத நிலையில் அறியாத பெண்ணாய் நான் இருந்தேன். உருவிழந்து கிடந்த என் உள்ளத்து உணர்ச்சிகள் தங்கள் திருவுருவைக் கண்டவுடன் புத்துணர்வு பெற்றன... மனதிற்கு இசைந்தவரிடம் உள்ளத்தைப் பறி கொடுத்தது தவறு, இறைவா?..."

"தவறு என்று நான் கூறவில்லையே... ஆனால்... நான் ஏற்கனவே மணமானவன் என்று தெரியாதா, உனக்கு?..."

"தெரியும்!"

"தெரிந்திருந்துமா என்னை அடைய விரும்புகிறாய்!... பல வகையிலும் உன்னில் வேறுபட்ட ஒருவனுடன் சிம்மதி நிறைந்த நல்வாழ்வு பெற முடியும் என்று எண்ணுகிறாயா?..."

"அரசகுலத்தில் பிறந்தவர்கள் எத்தனை முறை வேண்டுமானாலும் திருமணம் செய்துகொள்ளலாம் என்று எங்கள் வேத நியதிகள் சொல்கின்றன... உங்கள் மதக் கோட்பாடுகளும் அதற்கு வழிதருகின்றன... மன்னவா! என் இதய பீடத்தில் ஏறி அரசுபுரியும் நீங்களன்றி என்னால் வாழவே முடியாது... அரசி என்ற உரிமை எனக்கு வேண்டாம்! பணிப் பெண்ணாகவேனும் உங்கள் அருகிருக்க அனுமதி தாருங்கள்!..."

"இருவேறு துருவங்களில் நின்று கொண்டு நாம் இணைந்து வாழ்வதென்பது இயலாத காரியம்! காவியங்களிலும் இதிகாச இலக்கியங்களிலும் சாத்தியமான செயல்கள் - நடைமுறைக்கு ஒவ்வாதன... ஜெபுன்னிஸா! எந்த விதமான பிரதிபலனும் எதிர் நோக்காமலே உங்கள் குடும்பத்திற்கு அடைக்கலம் தந்தேன். ஆதரவு தேடி, — அன்பை நாடி வந்தவர்களிடமே மதம் விட்டுப் பெண் கொண்டான் காம்பிலிதேவன் என்று உலகம் என்னைப் பழிக்கும்!... உன் அழகுக்கு ஏற்ற மணவாளனாகக் குலவழி பொருந்திக் குணம் நிறைந்த அரசகுமாரன் ஒருவனை உனக்கு மணம் செய்து வைக்கிறேன்... என்னை மறந்துவிடு!..." என்று தீர்மானமான குரலிற் கூறிவிட்டு பதிலை எதிர் நோக்காமலே வேகமாக நடந்து சென்றுவிட்டான் காம்பிலிதேவன்.

அழகும் அமைப்பும் கொண்ட அந்த அரண்மனைப்பூங்காவிலுள்ள செண்பக மரத்தடியிலேயே திகைத்து நின்றாள் ஜெபுன்னிஸா. காம்பிலிதேவன் கூறிய வார்த்தைகள் பல கோணங்களிலிருந்தும் அவள் உள்ளத்தை மிகவும் வாட்டின. ஏமாற்றமும் துயரமும் அவளது இதயத்தைத் துளைத்துச் சென்று தாக்கியதைத் தாங்கமாட்டாமல் அந்தப் பேதை மடவன்னம் விழிநீர் பெருக்கி விம்மி அழுதாள்.

காம்பிலிதேவன் களத்திலே தோற்றது உண்மைதான்; ஆனால் வரலாற்றிலே அவனுக்கு ஓர் இடம் கிடைத்துவிட்டது!

2

மாலை நேரம். ஹொசதுர்க்கம் கோட்டையின் வடபுற வாயிலை அடுத்திருந்த ஆயுதசாலையில் போர்க்கருவிகளின் கூர்மையைப் பரிசிலனை செய்து கொண்டிருந்தான் காம்பிலிதேவன். அவ்வமயம் அமைச்சர் சிங்கயதாசர் மிகுந்த பரபரப்போடு உள்ளே வந்தார்.

"அமைச்சரே!... தாங்கள் வருகிற வேகத்தைப் பார்த்தால் இங்குள்ள ஆயுதங்களை யெல்லாம் ஒருகை பார்த்துவிடுவீர்கள் போலிருக்கிறதே!"

சிரிப்புடன் கலந்து ஒலிபரப்பிய அரசனுடைய வார்த்தைகளை எண்ணி ரசித்து மகிழக்கூடிய நிலையில் இல்லை அமைச்சர்.

"அரசே! நான் எதிர்பார்த்தது நடந்து விட்டது... அன்று எவ்வளவோ எடுத்துக் கூறினேன். எதையும் லட்சியம் பண்ணுமல் அவர்களுக்கு அடைக்கலம் அளித்தீர்கள்! அதன் விளைவு..."

"கும்மடம் கோட்டை பறிபோயிற்று, அவ்வளவுதானே! கும்மடத்தில் இருமுறை தோற்றுப் பின்வாங்கி ஓடிய மாலிக் சாதா ,கோட்டையில் போதிய படைபலம் இல்லாத சமயத்தில் முற்றுகையிட்டுக் கைப் பற்றிக்கொண்டான் ... இன்னும் சில நாட்களில் அந்தக் கோழை படும்பாட்டைப் பாருங்கள்!" சொற்களின் வேகம் பற்களில் நர்த்தனமாடியது ; சிவந்த விழிகள் அடர்த்தெழும் சினத்திற்கு ஆரத்தி எடுத்தன.

"மன்னவா! நான் கூறவந்த செய்தி வேறு. முகம்மது துக்ளக்கின் யானைப் படைகளோடு மாலிக்சாதா பெரும் படை திரட்டிக் கொண்டு வருகிறுனம். இன்று இரவுக்குள்ளாகக் கோட்டையைச் சூழ்ந்து விடுவார்கள்...வடதிசை ஒற்றர் தலைவன் இப்பொழுதுதான் வந்து சேதி சொன்னுன்..."

"என்ன!..." அஞ்சாத நெஞ்சம் கொண்ட காம்பிலித்தேவனைக் கலங்க வைத்து விட்டது அமைச்சர் கூறிய செய்தி. சிறிது நேரம் சிந்தை தடுமாறி நின்றவன் மறுகணமே தன்னைச் சமாளித்துக் கொண்டான். இறுதிவரை போராடி அறுதிகாண உறுதிபூண்டது அவனது உரம் பாய்ந்த மறநெஞ்சம். "அமைச்சரே! கோட்டை வாயில்கள் அனைத்தும் மூடப்பட்டும் போர் முரசுகள் முழங்கட்டும்; காம்பிலியின் படைகள் திரளட்டும் ... அரிமாவின் வலிமறந்து அரணுக்கு வந்து இன்னல் விளைவிக்க முயலும் அந்த வஞ்சக நரி மாலிக் சாதாவுக்குச் சரியான பாடம் கற்பிக்கிறேன்!..."

"நன்ருக ஆய்ந்து தெளிவது நல்லது வேந்தே! மாற்ருர் படை வலிமை கடல் போன்றது... தற்போது எதிர்த்து நிற்பது ஆபத்தாக முடியும்!..."

"அதற்காக அவனிடம் சரணடைந்து விட சொல்கிறீரா?..."

"இல்லை அரசே!... பகாவுதீன் கார்ஷப்பிற்காகத்தானே இந்தப் படையெடுப்பு...கார்ஷிப்பிற்குத் தாங்கள்.." அமைச்சர் முடிக்குமுன்னர் சீறி விழுந்தான் காம்பிலித்தேவன்.

"புரிகிறது அமைச்சரே, உமது பீடிகையின் நோக்கம்... கார்ஷப்பை துக்ளக்கிடம் ஒப்புவித்துவிடவேண்டும்; அடைக்கலம் அளித்து ஆதரிக்கலாகாது... அதுதானே நீர் கூற வருவது! என் உயிர் உள்ளவரையிலும் அண்டி வந்தவரைக் காட்டிக் கொடுத்து துரோகம் புரியமாட்டேன்... அவர்களைக் காப்பது என் கடமை...நீர் போகலாம்! கோட்டைப் பாதுகாப்புக்கான ஏற்பாடுகள் விரைவில் நடக்கட்டும்!..." மன்னவன் ஆணைக்கு மறுப்பேதும் கூறமுடியாத வராகச் சிரம் தாழ்த்தி வணங்கிவிட்டு வெளியேறினர் அமைச்சர் சிங்கயதாசர். ஹொசதுர்க்கத்தின் காவலன் ஆழ்ந்த சிந்தனை வயப்பட்டான். பலவித எண்ணங்களுக்கு மத்தியில் ஜெபுன்னிஸாவின் கோரிக்கையும் அவனைச் சுற்றி வந்தது.

3

கி. பி. ஆயிரத்து முந்நூற்று இருபத்தைந்தாம் ஆண்டு. டில்லியில் அரியாசன உரிமை பெற்ற முகம்மது துக்ளக்கிற்குத் திறை செலுத்த மறுத்துத் தனியரசு நிறுவினன் காம்பிலியின் அரசன் காம்பிலிதேவன். அதே நேரம் சாகர் மாகாண ஆட்சித் தலைவனுன பகாவுதீன் கார்ஷப்பும்

துக்ளக்கின் ஆட்சியை எதிர்த்துக் கிளர்ச்சி செய்தான். கார்ஷப்பிற்குக் காம்பிலிதேவனின் துணையும் ஆதரவும் கிடைத்தது. டில்லி அரசனின் கோபம் கார்ஷப்பின் மீது திரும்பியது. அவனை அடியோடு ஒழித்து விட்டுப் பின்னர் காம்பிலிதேவனைக் கவனிக்கலாம் என்ற எண்ணமுடன் ஒரு பெரும்படையை குஜராத்தின் தலைவன் மாலிக் சாதாவின் தலைமையின் கீழ் அனுப்பிவைத்தான் முகம்மது துக்ளக்.

மாலிக் சாதாவுடன் தேவகிரியின் நாயகனான மஜீர் அபுரிஜாவும் சேர்ந்து கொண்டான். 1326-ல் கோதாவரி ஆற்றங்கரையில் நிகழ்ந்த உக்கிரமான போரில் கார்ஷப் படுதோல்வி அடைந்தான். உயிர் பிழைத்தால் போதுமென்று மனைவி மக்களுடன் தப்பியோடிவிட்டான். தப்பி ஓடிய கார்ஷப்பை எப்படியாவது பிடித்து வருமாறு முகம்மது துக்ளக் ஆணை பிறப்பித்தான்.

நாடெங்கும் ஒற்றர்களும் படை வீரர்களும் வலை வீசித் தேடினர். இறுதியில், பகாவுதீன் கார்ஷப்பும் அவன் குடும்பத்தினரும் காம்பிலி தேவனின் ஆதரவில் ஹொாசதுர்க்கம் கோட்டையில் இருப்பதாக தெரிய வந்தது. உடனே அவர்களைத் தன் வசம் ஒப்புவிக்க வேண்டுமெனவும், தவறினால் ஹொாசதுர்க்கம் கோட்டையும் காம்பிலி அரசும் சின்னாபின்னமாக்கப்படும் என்றும் எச்சரிக்கை விடுத்தான் முகம்மது துக்ளக். காம்பிலிதேவன் துக்ளக்கின் எச்சரிக்கையைக் காலடியில் போட்டு மிதித்து விட்டான். சினங் கொண்ட துக்ளக் மாலிக் சாதாவின் கீழ் படையனுப்பிக் காம்பிலிதேவனுக்குரிய கும்மடம்கோட்டையை மும்முறை முற்றுகையிட்டுக் கடைசியில் கைப்பற்றினான். ஹொாசதுர்க்கம் கோட்டையை நோக்கியும் பெரும்படை திரண்டு வந்தது.

வளமும் வலிமையும் மிக்க காம்பிலி அரசின் மீது மாலிக் சாதாவுக்கு நெடு நாட்களாகவே கண். காம்பிலி தேவனின் அகந்தையை அடக்கிச் சிறைப்பிடித்து அவனைச் சித்திரவதைக்குள்ளாக்கி அவமானப்படுத்தலாம் என்று எக்காளமிட்டு வந்தான் அவன்.

அத்துடன் பகாவுதீன் கார்ஷப்பை ராஜத் துரோகம் புரிந்த குற்றத்திற்காகத் துக்ளக்கிடம் ஒப்புவித்துவிட்டு அவனது அழகிய குமாரி ஜெபுன்னிஸாவைத் தனக்கு சொந்தமாக்கிக் கொள்ளலாம் என்ற எண்ணமும் அவனுக்கு இருந்தது. முன்பு அவளை மணக்க விரும்பினான் அவன். ஜெபுன்னிஸா மறுத்துவிட்டாள். வஞ்சகமும் கொடூரமும் இணைந்த கல் நெஞ்சன் மாலிக் சாதாவுக்கு மகளைப் பலியிட விரும்பவில்லை பகாவுதீன். கிட்டாதாயின் வெட்டென மறக்க விழையவில்லை மாலிக் சாதா. மாறாக எப்பாடுபட்டேனும் எழிலரசி ஜெபுன்னிஸாவைத் தனக்கு உரியவளாக்கிக் கொள்ள முனைந்தான். வானிலே வட்டமிட்டவண்ணம் வையத்து மண்ணில் இரைதேடும் சிறுகுஞ்சினைக் கவ்விச் செல்லக் குறிவைக்கும் வல்லூருகக் காத்திருந்தான் அவன்.

ஹொாசதுர்க்கம் கோட்டைக்கு வந்த பிறகு ஜெபுன்னிஸாவின் உள்ளப் போக்கில் மாறுதல் ஏற்பட்டது. காம்பிலி தேவனுடைய கம்பீரமான தோற்றம் அவள் நெஞ்சில் நிழலாடியது. மதக் கோட்பாடுகள் உண்டு பண்ணிய ஆழமான அகழியையும் கடந்து சென்று அவன் இதயக் கோட்டையைக் கைப்பற்ற விரும்பினாள் ஜெபுன்னிஸா. ஆனால் காம்பிலி தேவன் நிலை...?

"பகாவுதீன்! இனி யோசிக்க நேரமில்லை... எதிரியின் படைகள் கோட்டையைச் சுற்றி வளைந்து கொண்டன! தாங்கள் உடனே புறப்படவேண்டும்... ரகசிய வழியாக துவார சமுத்திரம் சென்றுவிடுங்கள்! மூன்றாம் பல்லாளனுக்குக் கடிதம் எழுதியிருக்கிறேன். எந்த விதமான குறையும் உங்களுக்கு நேராது. அணித்தலைவன் உடன் வருவான்..."

"மன்னிக்கவேண்டும், காம்பிலி தேவரே!... தங்களை இந்நிலையில் விட்டுச் செல்ல முடியாது... இருவரும் சேர்ந்தே போரிடுவோம்... வெற்றியோ, தோல்வியோ— இருவருக்கும் ஆவது ஆகட்டும்!..."

"வேண்டாம் நண்பரே!... எதிர்பாராத விதமாக ஏதேனும் நிகழ்ந்து விட்டால் மாளாத அவப்பெயர் எனக்கு

வரும்! அணுகி வந்தவரைப் பாது காக்கத் திறமற்றவன்—விவேகமில்லா தவன் என்று சமூகம் என்னைத் தூற்றும்...ஒன்று நீங்கள் உடனே வெளியேறி எனது வேண்டுகோளின்படி பாதுகாப்புடன் துவார சமுத்திரம் போகவேண்டும்... மறுத்தால் இங்கேயே என்னுயிரை மாய்த்துக் கொள்வேன்!...'' என்று கூறிய காம்பிலிதேவன் உடைவாளை உருவினன்.

''நில்லுங்கள்!'' மெல்லிய குரல் இசைபரப்ப அங்கே வந்தாள் ஜெபுன்னிஸா. ''அப்பா!... நம்மால் இவர் ஏன் மாளவேண்டும்? போர்க்களத்தில் எத்தனையோ வீரப் பிரதாபங்களைக் காட்ட வேண்டிய தீரர் நம் கண்ணெதிரே உயிர் துறப்பதை விரும்பவில்லை—பழி நேர்வதையும் விரும்பவில்லை என்று சொல்லுங்கள்...துவார சமுத்திரம் செல்கிறோம் என்று சொல்லுங்கள் அப்பா!...''

மகளின் கூற்றுக்குத் தந்தையிடம் மதிப்புக் கிட்டியது. ''அருமை நண்பரே! எங்களால் தங்களுக்கு எவ்வளவு துயரம்... இத்தனை காலமும் ஆதரவு அளித்து இதன்மேலும் பாதுகாப்பு அளிக்க ஏற்பாடு செய்யும் தங்கள் பேரன்புக்கு என்ன கைம்மாறு செய்யப்போகிறேன்? இனி எத்தனை பிறவி எடுத்தாலும் தங்கள் பெருமிதப் பண்பை என்றென்றும் மறக்கமாட்டேன்!...''

''மனிதன் மனிதனுக்குச் செய்ய வேண்டியதைத் தானே செய்தேன்... ஹொய்சளர் எனக்கு முன்பு பகைவரானாலும் மூன்றாம் பல்லாளன் எனக்கு மிகவும் வேண்டியவனாகி விட்டான். எனது உற்ற நண்பனை ஹொய்சள மன்னன் தங்களுக்கு எவ்வித குறையும் வைக்கமாட்டான்! எல்லாம் வல்ல இறைவனுக்கு விருப்பமிருந்தால் நம்மை மறுபடியும் சேர்த்து வைப்பார்...சரி, புறப்படுங்கள். நேரமாகிறது...''

பிரிவதற்கு முன்னால் நண்பர்கள் இருவரும் கட்டித் தழுவிக் கொண்டு கண்ணீர் உகுத்தனர்.

4

இரண்டு நாட்கள் ஹொசதுர்க்கம் கோட்டையை முற்றுகையிட்டுக் கொண்டிருந்த பெரும்படை அரணைத் தாக்குவதற்காக எந்தவிதமான முயற்சிகளும் எடுத்துக் கொண்டதாகத் தெரியவில்லை. கோட்டை தாக்கப்படும் என்பதை எதிர்பார்த்திருந்த காம்பிலிதேவனுக்கு தாக்குதல் ஏதும் நடைபெறாமல் போனது வியப்பை அளித்தது. அதே சமயம் மற்றொரு அபாயத்தையும் அவன் உணர்ந்திருந்தான். இரண்டு நாள் கடுமையான முற்றுகையினால் கோட்டைக்குள்ளிருந்து யாரும் வெளியில் செல்லவோ உள்ளே வரவோ முடியவில்லை. உணவுப் பொருள்கள் வெகுவாகக் குறைந்து விட்டன. அதோடு ஏற்பாட்டின்படி ரகசிய வழியாக உணவுப் பண்டங்கள் வந்து சேராதது அவனுக்கு மிகவும் கலவரத்தை உண்டு பண்ணியது. சிக்கல் நிறைந்த சிந்தனை வலைகளுக்கு ஊடே அகப்பட்டுத் தவித்துக் கொண்டிருந்த காம்பிலி தேவனுக்கு முன்பாக கோட்டைத் தளபதி வந்து வணங்கி நின்றான்.

''அரசே! கோட்டையின் ரகசிய வழி எதிரிகளுக்குத் தெரிந்துவிட்டது. வழியை அடைத்து விட்டனர்...'' ரகசிய வழி மூடப்பட்டதைக் கேட்டுத் திடுக்கிட்டான் காம்பிலிதேவன். அப்படியானால் ... வேறு வழி? ... கோட்டைக்குள்ளேயே அடைபட்டு உணவின்றி மடிந்து போக வேண்டுமா?... காம்பிலிதேவன் ஒரு முடிவுக்கு வந்தான்.

''தளபதியாரே! கோட்டையிலிருந்து வெளியேற வழியில்லை! நாலாபுறமும் படைகள் சூழ்ந்து கொண்டிருக்கின்றன. கோழைகளைப் போல் கோட்டைக்குள் இருந்து மாள்வதைக் காட்டிலும் போரிட்டு மடிவதுமேல்!... படைகள் தயாராகட்டும்...துணிவுடன் களத்தில் இறங்குவோம்! உடனே சென்று ஆகவேண்டியதைக் கவனியுங்கள்!''

தளபதி சிறிது தூரம் சென்ற பிறகு மறுபடியும் அவனை அழைத்தான் காம்பிலி தேவன.

"அரண்மனைக்கு முன்புறமுள்ள மைதானத்தில் பெருந்தீ வளர்ப்பதற்கு ஏற்பாடு செய்யுங்கள். நான் சென்று பூஜையை முடித்துக்கொண்டு பெண்களையெல்லாம் வரச் செய்கிறேன்!..." என்று காம்பிலி தேவன் கூறியபோது தளபதியின் முகம் சொல்லொணு வேதனையைக் காட்டிற்று.

"அரசே!...கொஞ்சம் யோசித்து.."

"இதில் யோசனைக்கு என்ன வழி இருக்கிறது. தளபதியாரே!...எதிரிகள் கையில் காம்பிலியின் அரண்மனை மகளிர் சிக்கி மானத்தை இழப்பதைக் காட்டிலும் அக்கினி பகவானிடம் அடைக்கலம் புகுந்து கொள்வது ஆயிரம் மடங்கு மேலானதல்லவா!..." காம்பிலி தேவனின் குரலில் தொனித்த உறுதியும் எதற்கும் துணிந்துவிட்ட நெஞ்சின் வீரமுத்திரையும் தளபதியை பிரமிக்கச் செய்தன. காவலன் இட்ட கட்டளையை நிறைவேற்றச் சென்றுன் கோட்டைத் தளபதி.

மூண்டெழுந்த நெருப்பின் செந்நாக்குகள் காம்பிலி தேவன் முகத்தில் பிரதிபலித்த வேதனைக்கும் துயரத்துக்கும் முலாம் பூசிக்கொண்டிருந்தன. அரசபோக வாழ்வு நடத்திய அழகு மங்கையரின் தங்கம் பொங்கும் எழிலனைத்தையும் விழுங்கி ஏப்பமிட்டு விட்ட பெருமையில் விண்ணை எட்டிப் பிடிக்கத் தீப்பிழம்புகள் முயற்சி செய்துகொண்டிருந்தன. அக்கினித் தேவனுக்கு முன்னல் வாளுயர்த்திச் சூளுரைத்த காம்பிலி தேவன் கோட்டைக் கதவுகளைத் திறந்து விடுமாறு உத்தரவிட்டான்.

கோட்டைக் கதவுகள் திறக்கப்பட்டதும் எதிரியின் படைகள் மடை திறந்த வெள்ளமென நாலாபுறமிருந்தும் ஆரவாரத்துடன் உள்ளே நுழைந்தன. 'போர்க் குறிக்காயமே புகழ்க்குறிக்காய்'மெனக் காம்பிலி வீரர்கள் உயிரைத் திரணமாக மதித்து வீரப்போர் புரிந்தனர். துக்ளக்கின் பெரும்படை காம்பிலியின் வீரத்துக்கு ஈடுகொடுக்க முடியாமல் கொஞ்சம் கொஞ்சமாகப் பின் வாங்கத் தொடங்கியது. எதிர்த்தவரை எமனுலகிற்கு அனுப்பி வைத்துக் கொண்டிருந்த வீரத்தலைவன் காம்பிலி தேவனுடன் இறுதியாகப் போர் செய்த வீரனொருவன் காம்பிலி மன்னனுடைய வாள் வீச்சுக்குப் பலியாகாமல் போக்குக் காட்டிக் கொண்டே பின்வாங்கிச் சென்றுன்.

சுற்றிலும் யாரும் இல்லாத ஒதுக்குப் புறமான இடத்திற்கு வந்த அந்த வீரன், "அரசே! என்னைத் தெரியவில்லையா..." என்று கேட்ட வண்ணம் குறுந்தாடி மீசையை எடுத்து விட்டு வாளைக் கீழே வைத்து வணங்கினன்.

"யார்?...அணித்தலைவனு!... இதென்ன வேஷம்!..."

"அரசே! மூன்றும் பல்லாளர் நம்பிக்கைத் துரோகம் செய்துவிட்டார். பகாவுதீன் மன்னரையும் அவர் குடும்பத்தையும் மாலிக் சாதாவிடம் ஒப்புவித்து விட்டார்!..." என்று அணித்தலைவன் கூறியதைக் கேட்டதும் தூக்கி வாரிப்போட்டது காம்பிலி தேவனுக்கு.அணித்தலைவன் தொடர்ந்தான்:

"கார்ஷப் மன்னரையும் குடும்பத்தினரையும் டில்லிக்கு அனுப்பிவிட்ட மாலிக் சாதா, அவர் குமாரி ஜெபுன்னிஸாவைத் தன்னுடனே அழைத்துக் கொண்டு வந்துவிட்டான்!..."

"அப்படியானல் ஜெபுன்னிஸா..."

"இங்கே தான் இருக்கிருள், பிரபோ!...மாலிக் சாதாவின்கூடாரத்தில் இருக்கிருள்...தங்களிடம் முன்பே செய்தியைக் கூறமுடியவில்லை. எப்படியோ ரகசிய வழியைத் தெரிந்து கொண்டு அடைத்து விட்டனர். ஆகவே நான் இந்த வேடம் பூண்டு எதிரிப்படைகளுடன் சேர்ந்து உள்ளே வரவேண்டியதாகிவிட்டது! கார்ஷப் குமாரியின் நிலை மிகவும் பரிதாபமாக இருக்கிறது, அரசே!...கேற்று மாலிக் சாதா அந்தப் பெண்ணைப் படுத்திய பாட்டை நினைத்தால்..."

"அவளைக் காப்பாற்ற வேண்டியது என் கடமை!...உனது உடைகளை எனக்குக் கொடு...நான் மாலிக்கின் கூடாரம் வரை செல்கிறேன்...நீ சென்று நமது வீரர்களுக்குத் துணையாக நில்!..."

உடைகள் உடல் மாறின, மாலிக் சாதாவின் கூடாரம் இருக்குமிடத்தைத் தெரிந்துகொண்டு விரைந்தான் காம்பிலி தேவன்.

5

“ஹூம்! பைத்தியக்காரி ...வீணாக வலியவரும் செல்வத்தையும் சுகபோக வாழ்வையும் ஏன் உதறித் தள்ளுகிறாய்?...இனிமேல் என்னை விட்டால் உனக்கு வேறு யார் ஆதரவு? .உன் தகப்பன் இந்நேரம் டில்லிக் கோட்டை வாயிலில் தூக்கிலே தொங்கிக் கொண்டிருப்பான்...!”

“அட, பாதகா !... உன் இதயம் என்ன கல்லா?... பிற உயிர்களோடு கொடூரமாக விளையாடுவதில் என்ன மகிழ்ச்சி காண்கிறாய் நீ?...”.

“என்ன மகிழ்ச்சியா?... நீ கிடைத்தாயல்லவா! அதுவே எனக்குப் பேரின்பம்! ...”

“வஞ்சகனே...வீண் மனக் கோட்டை கட்டாதே! வாழ்வை இழப்பேனே தவிரக் கொடிய சித்தம் படைத்த உனக்கு நான் பலியாகமாட்டேன்!”

“ஆகா! அதையுந்தான் பார்ப்போமே!...” அவன் கரங்கள் அவளின் மலருடலுக்கு அருகில் வெறி கொண்டு நெருங்கின. அஞ்சி நடுங்கி ஒதுங்கி ஓடினாள் அவள். இறுதியில் அவள்தான் தோற்றாள்.

“என்னிடமிருந்து நீ தப்பவே முடியாது......” மிருகத்தனமான அவன் அணைப்பில் சிக்கி அவதியுற்றாள் ஜெபுன்னிஸா.

“மாலிக் சாதா! விடு அவளை!” சிம்மத்தின் சீற்ற மிகு கர்ஜனையை நினைவூட்டி ஒலித்த குரலைக் கேட்டுத் துணுக்குற்றுத் திரும்பிப் பார்த்தான் மாலிக் சாதா. எதிரே பொய் தாடியைக் கழற்றி எறிந்துவிட்டுக் கனல் பறக்கும் கண்களோடு நின்றான், காம்பிலி தேவன்.

“உனது வீரர்கள் அங்கே உயிருக்குப் போராடிக் கொண்டிருக்க இங்கே லீலை புரியும் நீயும் ஒரு தலைவனா !...” காரி உமிழ்ந்தான் காம்பிலி தேவன்.

மலைப்பாம்பின் பிடிக்குள் அகப்பட்ட மானைப் போல மருண்டு நின்ற ஜெபுன்னிஸாவின் சேல் விழிகள் காம்பிலி தேவனைக் கண்டதும் மகிழ்ச்சியால் ஒளி வீசின.

“அவளை விட்டு விடு !...அவள் என் அடைக்கலப் பொருள் !...”

“நீ பாதுகாத்த சிறப்புத்தான் தெரிகிறதே ! ... இரவோடு இரவாக

வேற்றிடத்திற்கு அனுப்புகிறேன் என்று கூறிக் கார்ஷப்பைக் கழுமரத்திற்கு அனுப்பி விட்டாய்! ... இப்போது உனது முடிவை நீயே தேடிக் கொள்ள இங்கே வந்திருக்கிறாய்!... யாரங்கே?..."

கொடுமையும் உன்னோடு ஒழியட்டும்!...உனது வீரர்களுக்கு எனது வாள் பதிலுரைக்கும்!" என்று மொழிந்த காம்பிலி தேவன் நீட்டிய வாளோடு மாலிக் சாதாவின் மேல் பாய்ந்தான்.

"என் மீதே பழியைச் சுமத்துகிறாயா?...மாலிக் சாதா! வீரர்கள் வருவதற்குள் உன்னை இந்த உலகத்தைவிட்டே அனுப்பி வைக்கப் போகிறேன்...சூதும் வஞ்சனையும்

ஆனால்... ... எப்போதும் வஞ்சகத்திற்கு வாழ்வு தேடித்தந்து மகிழ்ச்சி காணும் இயற்கையுடன் தோழமை பூண்ட விதி அந்த நேரம் அங்கே நின்று சிரித்தது: கண்ணிமைப்பதற்

குள்ளாக மாலிக் சாதா சடுதியில் விலகித் தன்னைக் காத்துக் கொள்ளவே, அவன் உயிரைக் குடிக்க வேண்டிய கட்கம் ஜெபுன்னிஸாவின் மார்பில் பாய்ந்துவிட்டது. துடித்துக் கீழே விழுந்து ரத்த வெள்ளத்தில் மிதந்த ஜெபுன்னிஸாவைக் கண்டு அலறினன் காம்பிலி தேவன்.

"அன்பரே! ...... கவலை வேண்டாம், எனக்கு விடுதலை கிடைத்து விட்டது...இந்த மரணம் எனக்கு மன நிறைவையும் மகிழ்ச்சியையும் கொடுக்கிறது!..." உடலைவிட்டுப் பிரிந்து சென்ற உயிரோடு ஒட்டிக்கொண்டு உதிர்ந்த மொழிகள் காம்பிலி தேவனின் இதயத்தை உருக்கின.

கண்ணீர் வடித்த காம்பிலி தேவனைக்கண்டு மாலிக் சாதா வாளாயிருக்கவில்லை. அவனுடைய உடைவாள் காம்பிலி தேவனின் கழுத்தில் ஆழப்பதிந்து உடலை இரு கூறுகளாக்கிப் பசியைத் தீர்த்துக் கொண்டது. அப்போது கூடாரத்திற்குள் நுழைந்த மாலிக் சாதாவின் வீரர்கள் வெட்டுண்டு விழ்ந்து கிடந்த காம்பிலி தேவனைப் பார்த்துவிட்டு வெற்றி முழக்கம் செய்தனர்.

அன்று விருதுகளுடன் பரிசு வரிசைகள் பலவும் பெற்ற சிறப்போடு பீடு நடை போட்டான் மாலிக் சாதா... வீரப் பண்புக்கு இலக்கணமாக விளங்கிய காம்பிலி தேவனின் விழுமிய மாண்பினை இன்று தென்னாட்டு வரலாறு பொன்னேட்டில் ஏந்திப்பெருமை கொள்கிறது!

★

ஏழைகளிடத்தில் எனக்கு மிகவும் வெறுப்பு. இயற்கை ஏழையைப் படைத்துத் தன்னுடைய இந்த அழகிய உலகின் களிப்பை ஏன் கெடுத்து விடுகிறது என்பது எனக்குத் தெரிவதே இல்லை. நகரங்களின் குறுகிய இருண்ட சந்துகளிலே ஏழைகளின் தோற்றத்தைக் கண்டு வேண்டுமானாலும் எப்படியேனும் பொறுத்துக் கொள்வேன். ஆனால் இயற்கை தன் முழு அழகோடு அனைவரது உள்ளத்தையும் கவர்ந்துள்ள அழகுச் செல்வம் போன்ற இடங்களிலே, ஏழ்மையினால் வாடிப்போன முகங்களைக் காண்பது உண்மையிலேயே வெறுக்கத் தக்கதாக இருக்கிறது. எனக்கு உரிமை கொடுக்கப்பட்டால் இந்நாட்டிலிருந்து ஏழ்மையை வெளியேற்ற முடியாவிட்டாலும் ஏழைகளைக் கட்டாயம் விரட்டி விடுவேன். இயற்கையின் எந்தப் படைப்பும் பொருளற்றதாக இருக்காது என்று சொல்கிறார்கள். ஏழைகளைப் படைத்ததில் என்ன பொருளிருக்கிறது என்பதை எனக்கு யார் விளக்குவார்கள்?

வழக்கப்படி ஒரு நாள் மாலை நான் காற்று வாங்க மோட்டாரை எடுத்துக் கொண்டு வெளியே கிளம்பினேன். நகரத்தின் எல்லையைக் கடந்த உடனே கண்களைக் களிப்பிக்கும் காட்சி விரிந்து பரந்து கிடந்தது. எதிரில் மேற்கு வானம் பொன்னைவிட அழகாகத் தோன்றியது. அந்தப் பொன்னாடையின் கீழே சிறு நீலநிற மலையின் நீலக் கரை இழைக்கப்பட்டிருந்தது. சாலையின் இருபுறமும் பசுமையான பயிர்கள் அசைந்தாடிக் கொண்டிருந்தன. நடுநடுவே மலையருவி தன் பெருக்கத்தால் அவ்வழகைப் பன்மடங்காக்கிக் கொண்டிருந்தது.

இந்த அழகின் இருப்பிடத்தில்—மலையின் அடிவாரத்தில்—ஒரு சிறு கிராமம் இருந்தது. அந்தக் கிராமத்தை நான் பலமுறை பார்த்திருக்கிறேன். அதன் அசுத்தமும் துர்நாற்றமும் என்னை எப்போதும் அங்கே செல்ல வேண்டாமென்று தடுக்கும். ஆனால் இயற்கை மங்கையின் அந்தக் கண்கவர் அழகின் எதிரே இந்தத் தடை நிலைக்காது. பெரும்பாலும் என் காரின் 'ஸ்டியரிங்' அப்பக்கமே திரும்பும். அன்று மாலையும் அந்தப் பக்கம் தான் நான் 'பறந்து' சென்று கொண்டிருந்தேன்.

பாதையின் ஒவ்வொரு அடியும் எனக்குப் பழக்கமானது. பாதையில் பார்வையைச் செலுத்தாது நான் இங்குமங்குமுள்ள அழகைப் பருகுவதில் ஆழ்ந்திருந்தேன். ஒரு போது வயல்களுக் கிடையே தனியாக நின்றிருக்கும் ஆலமரத்தைப் பார்ப்பேன். வேறொரு போது இங்கிருந்து அங்கே ஓடும் வாய்க்காலின் வளைவுசுழிவுகளைக் கணக்கிடுவேன். சாலையின் அருகிலுள்ள ஏதாவது ஒரு மரத்தினின்று சிலபோது, குயிலின் இன்னிசை கேட்டால் காரின் வேகத்தைக் குறைத்துச் சிறிது நேரம் செவிக்கினிய அந்த இசையைக் கேட்க முயற்சி செய்வேன். அந்த இன்பமான சாலையில் நானும் என் காரும் மட்டுமே இருந்தோம். இருபுறமும் தொலைவில் ஆங்காங்கே வயல்களில் உழவர்கள் தங்கள் கால் நடைகளை யோட்டிக் கொண்டு வீடு திரும்பிக் கொண்டிருந்தனர்.

நான் வேகமாக வண்டியை ஓட்டிக் கொண்டிருந்தேன். வலப்புறம் பச்சையுடை அணிந்திருந்த குன்று ஒன்று இருந்தது. அதன் முகட்டில் இரண்டு-

இந்தி மூலம் :
கோபால நேவடியா

ஏழை

தமிழாக்கம் :
அல்லி

காரிலே போனவனிடம் பணம் இருந்தது; கால்நடையாகப் போனவனிடம் பணமில்லை என்றாலும், பண்பாட்டிற்குப் பஞ்சமில்லை! இதிலே யார் ஏழை?

மூன்று முயல்கள் உட்கார்ந்து புல்லை மேய்ந்து கொண்டிருந்தன. காரின் ஒலியைக் கேட்ட அவை திடுக்கிட்டு, மறுகணம் அங்கிருந்து ஓடிவிட்டன. நான் அவற்றின் ஓட்டத்தில் என் நாட்டத்தைச் செலுத்தினேன்.

குன்றைச் சுற்றிக் கொண்டு சாலை செல்கிறது. இதன் திருப்பத்தை நான் நன்கறிவேன். சாலையில் பார்வையைச் செலுத்தாமலே நான் வண்டியை ஓட்டிக் கொண்டிருந்தேன். திருப்பத்தின் இறுதியில், குன்றினின்று இறங்கி வரும் ஊற்றின் மீது ஒரு பாலம் அமைக்கப்பட்டிருந்தது. நான் ஊதுகுழலை ஒலிக்கச் செய்தேன்; பதிலுக்கு ஓசை ஒன்றும் கேட்கவில்லை; சாலையில் தடையொன்றுமில்லையென எண்ணிக் கொண்டேன். அந்த அசட்டையினால் என் பாட்டில் வண்டியை ஓட்டிக் கொண்டிருந்தேன். பாலம் எதிரே வந்து விட்டது. என் பார்வை அருவியில் பதிந்திருந்தது. ஆனால் ஓரக் கண்ணால் எனக்கும் பாலத்திற்கும் இடையே ஒரு கிராமத்தான் நடந்து செல்வதைப் பார்த்து விட்டேன். மறுபடியும் ஊதுகுழலை ஓசைப் படுத்தினேன். ஆனால் அந்தக் கிழவனே நடுச்சாலையினின்று நகராமலே தன் சிந்தனையில் ஆழ்ந்தவாறு சென்று கொண்டிருந்தான்.

நினைத்தால் வண்டியை நிறுத்தக் கூடிய அளவுக்கு இடைவெளி இருந்தது. ஆனால் நான் எதற்கு நிறுத்த வேண்டும்? சாலை வண்டிகளுக்காக அமைக்கப்பட்டிருக்கிறது. இத்தகைய பொறுக்கிகளுக்காக அல்ல. போலீஸ் அச்சத்தினால் வண்டியின் வேகத்தைக் குறைத்தது உண்மை. ஆனால் கிழவனுக்குத் தண்டனை வழங்கும் பொருட்டு நான் மெதுவாக இடப்பக்க 'மட்காடி'னால் அவனை மோதினேன்.

கிழவனால் அந்த மோதுதலைத் தாங்க இயலுமா? அவன் தலையில் ஒரு கூடை இருந்தது. அக்கூடையில் ஐந்தாறு பழங்கள் இருந்தன. வண்டி இடித்தவுடன் பழங்கள் நாலாபுறமும் சிதறின. கூடையும் அத்துடன் அழுக்கடைந்த சிவப்புக் கந்தையினால் சுற்றப்பட்ட ஒரு சிறு முடிச்சும் எழும்பிக் கீழே தண்ணீரில் விழுந்தன. அந்தக் கிழவன் அங்கேயே தரையில உருண்டான்.

புன் சிரிப்புடனும், போக்கிரிகளைத் தண்டிப்பதில் எனக்குள்ள திறமையைப் பற்றி எண்ணி மகிழ்ந்து கொண்டும் நான் மேலே சென்றேன்.

எதிரே உள்ள அந்தக் குன்றை அடுத்து ஒரு அழகிய ஏரி உள்ளது. எப்போதும் அதுவரை நான் சென்று வருவது வழக்கம், ஏரிக்கரையில் தூய மணல் வெளி இருக்கிறது. சில போது நான் அங்கே உலாவுவேன்; உலவும் விருப்பம் இல்லாவிடில் ஏரிக்கரையில் வண்டியை நிறுத்திக் கொண்டு ஏரியின் சிற்றலைகளை நோக்கிக்கொண்டிருப்பேன்.

அன்று அந்த கிழவனை தண்டித்த வேடிக்கை மனத்தில் ஒரு சுமையை ஏற்றி விட்டது. அதன் பின் உலவுவதேது? ஏரியின் அலைகளைப் பார்த்துக் கொண்டேயிருக்கையில், மோதுண்டு அக்கிழவன் வீழ்ந்த காட்சி கண்முன்னே தோன்றும். ஏரியின் இதே எழிலைக் கண்டு நான் எத்துணை முறை மன மகிழ்ந்திருக்கிறேன்! ஆனால் இப்போதோ என் மனம் சோர்வுற்றது. திரும்புகையில் என் விருப்பமின்றியே என் கால் வண்டியை நிறுத்தும் கருவியின் மீது சென்றது.

வண்டி நின்றது. நான் வலப்புறம் நோக்கினேன். கிழவன் அங்கேயே ஒரு கல்லினருகில் படுத்தவாறு முனகிக் கொண்டிருந்தான். வண்டி வந்ததைத் கண்டு ஒருவாறு எழுந்து உட்கார்ந்தான். 'கிழவன் வசைமாரிப் பொழியப் போகிறான்' என நினைத்தேன் நான். ஆனால் அவன் இரு கைகளையும் கூப்பியபடி இறைஞ்சும் குரலில் 'ஐயா!' என்றழைத்தான். கிழவன் நட்ட ஈடாக பிச்சை கேட்கிறான் போலும்!' என்றெண்ணினேன். ஏனோ இன்றைய நிகழ்ச்சி என் மனத்திற்குப் பெரும் சுமையாகி விட்டது. கிழவனுக்கு ஏதேனும் கொடுத்து அச்சுமையை இறக்கிக் கொள்ள விரும்பினேன். வண்டியினின்று இறங்கி அவனருகில் சென்றேன்.

கிழவன் இறைந்து கிடந்த ஆப்பிள்களைப் பொருக்கி வைத்திருந்

தான். நல்ல பெரிய பழங்களாக இருந்தன. நான் அருகில் சென்றதும் அவற்றை என் முன் நீட்டி, "ஐயா! உங்கள் வழியை மறித்து உங்களுக்கு மிகுந்த தொல்லை கொடுத்துவிட்டேன். அதற்குத் தகுந்த தண்டனையும் கிடைத்தது. இப்பொழுது தயவு செய்து என்னுடைய இந்தப் பரிசை ஏற்றுக் கொள்ளுங்கள். மிகவும் உயர்ந்த பழங்கள்; சாப்பிட்டுவிட்டு இந்த கிழவனை நினைத்துக் கொள்ளுங்கள்'' என்றான். நான் அவனைப் பார்த்தபடி நின்றுவிட்டேன். அவன் கண்கள் நிறைந்திருந்தன; இருப்பினும் அவன் சிரிக்க முயன்றுகொண்டிருந்தான். எனக்குச் சினம் பொங்கியது. கிழவன் என்னை கேலி செய்கிறான் போலும்! என்ன துடுக்குத்தனம்! சினம் கொண்ட நான் பழம் வைத்திருந்த அவன் கையை ஓங்கி உதைத்தேன். பழங்கள் தொலைவில் சென்று விழுந்தன. கிழவன் தன்னை மறந்து கூக்குரலிட்டான். பிறகு அமைதியாக இருந்துவிட்டான். மறு சொல் சொல்லாமல் நான் திரும்ப வந்து விட்டேன்.

மனச்சுமையைக் குறைப்பதற்கு மாறாக அதனை இன்னும் பெருக்கிக் கொண்டு நான திரும்பினேன். வீட்டை அடைந்த போது மாலை உணவு உட்கொள்ளும் நேரமாகி விட்டது. மேசையின் முன் உட்கார்ந்தபடி அனைவரும் என் வருகைக்குக் காத்திருந்தனர். எனக்குச் சாப்பிடத் தோன்றவேயில்லை. இருந்தபோதிலும் வீட்டாருக்கு என் உளநிலை தெரியாமலிருப்பதற்காக, விரைவாகக் கைகால் கழுவிக்கொண்டு மேஜையின் முன்னால் வந்தமர்ந்தேன்.

மேசையின் நடுவில் ஒரு தட்டில் வழக்கப்படி பழுத்த நல்ல பழங்கள் வைக்கப்பட்டிருந்தன. மற்ற பழங்களுக்கு நடுவில் ஒரு பெரிய தட்டில் ஆப்பிள் பழங்கள் வைக்கப்பட்டிருந்தன. ஆம்; அந்த கிழவன் கையிலிருந்து நான் உதறித் தள்ளிய பழங்களைப் போலவே அவை இருந்தன. சாப்பிட இருந்த கொஞ்ச நஞ்ச விருப்பமும் போய் விட்டதெனக்கு. எல்லாரும் வேடிக்கையாகப் பேசிக்கொண்டிருந்தனர். நான் மட்டும் அவர்கள் பேச்சில் கலந்துகொள்ளவில்லை.

என் தமையனார் எதிரே அமர்ந்து குழந்தைகளிடம் பேசிக்கொண்டிருந்தார்— "என்ன, அந்தக் கிழவனைப் பற்றிச் சொல்லட்டுமா?'' மூன்று குழந்தைகளும் ஒரே குரலில் அவர் கூற்றை வரவேற்றனர். அண்ணா சொல்லத் தொடங்கினார்.

"இன்று பகலில் நான் கிருஷ்ணன் மாமாவை புகைவண்டி நிலையத்தில் கொண்டுவிடச் சென்றேனல்லவா? அங்கிருந்து திரும்பி நடந்தே வந்தேன். கடைத்தெருவுக்கு அப்பாலுள்ள தெருவில் நான் வந்துகொண்டிருந்த போது ஒரு கிழவன் கூடை நிறைய இந்தப் பழங்களை நிரப்பிக் கொண்டு வந்து கொண்டிருந்தான். என்னைக் கண்டதும் கூடையை இறக்கி விட்டுக் கைகளைக் கூப்பிக்கொண்டு, 'ஐயா! மிகவும் நல்ல பழங்கள், கட்டுமேயிட்டால் வீட்டுக்கு எடுத்து வருகிறேன்' என்றான் முதலில், 'வேண்டியதில்லை' என்று சொல்லி விட்டேன். ஆனால் அவனுடைய வருத்தமான முகத்தைப் பார்த்தபோது அவனிடத்தில் இரக்கம் ஏற்பட்டது. 'எங்கே, பார்க்கலாம் பழங்களை' என்றேன். அவன் மிகவும் ஊக்கத்துடன் கூடையிலிருந்து இரண்டு பெரிய பழங்களைப் பொறுக்கி யெடுத்து என்முன் நீட்டினான். சுசீல்! இந்தப் பழத்தை இப்போது தின்றுபார்த்தால், அப்போது என் வாயில் ஏன் நீர் ஊறியது என்பதை நீ அறியலாம்...''

நான் சிறிது சிறிதாக உணவைச் சாப்பிட்டுக் கொண்டிருந்தேன். நன்றாக மென்று விழுங்கிய போதிலும் தண்ணீரின் துணையின்றி உணவு தொண்டைக்குக் கீழே இறங்கவேயில்லை.

"...... வீட்டில் வேண்டிய அளவுக்குப் பழங்கள் இருப்பது எனக்குத் தெரியும். ஆனால் அந்தப் பழங்களைப் பார்த்ததும் ஏற்பட்ட ஆவலினாலும், குறிப்பாக அந்தக் கிழவனின் முகத்தில் தோன்றிய ஏக்கத்தைக் கண்டும் அந்தப் பழங்களின் விலையைக் கேட்டேன். கிழவன் 'டசன் இரண்டு ரூபாய்' என்றான். கடைத்

தெருவில் இவற்றின் விலை 'டசன்' ஒன்றரை ரூபாய் தான். இருப்பினும் நான் அவன் கூறிய விலைக்கு உடன்பட்டேன். அவன் என்னைப் பார்த்தபடியே நின்று விட்டான். 'இன்னும் அதிகமாகச் சொல்லி யிருக்கலாமே' என்று எண்ணிக் கொண்டான் போலிருக்கிறது. அவனிடம் ஒன்றரை 'டசன்' பழங்கள் இருந்தன. ஒரு 'டசன்' பழங்களை வாங்கிக்கொண்டு சட்டைப் பையில் கையை விட்டால், எல்லாம் நோட்டுக்களாகவே இருந்தன. அவன் கையில் நோட்டைக் கொடுத்துவிட்டு மீதிச் சில்லறை வாங்கிக் கொள்ளாமலே நடந்தேன். கிழவன் எட்டணாவைக் கொடுக்கப் பின்னாலேயே ஓடி வந்தபோது, 'வேண்டாம்; அதையும் நீயே வைத்துக் கொள்' என்றேன். அவன் இதற்கு எப்படி நன்றி செலுத்துவது என்று தெரியாமல் திகைத்தான். கூடையிலிருந்து இன்னும் இரண்டு பழங்களை எடுத்து வந்து, 'ஐயா! தயவு செய்து இதையும் எடுத்துப் போங்கள்' என்று என் கையில் தந்தான். அவனது முகத்தில் நன்றியுணர்ச்சி ஒளி விட்டது. மகிழ்ச்சியினால் அவனுக்குப் பைத்தியம் பிடித்துவிடும் போலிருந்தது......"

என் தலை சுழன்றது. மனம் ஒரு நிலையில் இல்லை; நான் ரொட்டித் துண்டைக் கறியில் தோய்க்கப் போனேன்; என் கையோ தண்ணீர்க் குவளையை நோக்கிச் சென்றது. இதைக்கண்டு அனைவரும் சிரித்தனர். நான் நாணத்தால்குன்றிப் போனேன்.

"......கிழவன் தந்த இரண்டு பழங்களை எடுத்துக் கொண்ட போது அவன் மிகவும் மகிழ்ந்தான்: பழங்களை எடுத்துக் கொண்ட பின் நான் அவனிடம், 'இதோ பார் தாத்தா! மீதியிருக்கும் பழங்களை நீ விற்கக்கூடாது. வீட்டுக்குப் போய் உன் குழந்தைகளுக்குக் கொடுக்க வேண்டும். பாவம், அவர்களுக்கு இத்தகைய பழங்களைச் சாப்பிடும் வாய்ப்பு எப்போது கிடைக்கப் போகிறது! இன்று வீட்டுக்குப் போன பிறகு இந்தப் பழங்களை அவர்களுக்கே கொடுக்க வேண்டும்' என்றேன். அவன் என்னை தன் உயிர்க்குரிய ஒருவரைப் பார்ப்பது போலப் பார்த்தான். கை கூப்பியபடி, 'ஐயா நீங்கள் தெய்வம்! உங்கள் கருணையால் இன்று என் பையனுக்கு இந்தப் பழம் சாப்பிடக் கிடைக்கிறது. களிப்போடு சாப்பிடுவான். ஐயா! எப்போதும் இந்தப் பழங்களை அவனுக்குச் சாப்பிடக் கொடுத்தால் குடும்பத்தின் நிலை என்னாவது?' என்றான்.. கிழவனின் பேச்சில் உண்மையான மனவேதனை மறைந்திருந்தது......"

இங்கே என் மனத்திலும் வேதனை நிறைந்திருந்தது.

"......'பணத்தை என்ன செய்வாய்' என்று நான் அவனைக் கேட்டேன். போகும்போது கடைத் தெருவில் கொஞ்சம் அரிசியும் வெல்லமும் வாங்கிச் சென்று, குழந்தைக்கு 'இனிப்பு' வழங்குவானாம். சுசீல்! அன்றொரு நாள் என்னுடன் குதிரைப் பந்தயத்திற்கு வந்த போது, உன் குதிரைக்கு நூற்றிருபத்து மூன்று ரூபாய் கிடைத்ததே, நினைவிருக்கிறதா? அப்போது நீ அடைந்த மகிழ்ச்சியை விட அதிகமான மகிழ்ச்சி, அந்த ஒரு ரூபாயைப் பெற்றுக்கொண்டு அவன் அடைந்தான்..."

'வேறுபாடு இதுதான் · சுசீலை எந்த வழிப்பறிக் கொள்ளைக் காரனும் மடக்கவில்லை: ஆனால் அந்தக் கிழவனை...' இவ்வாறு நான் மனத்துள் சொல்லிக் கொண்டேன்.

"......சுசீல்! இப்போது நீ அம்மாவின் அருகில் உட்கார்ந்து கொண்டு இந்தப் பழங்களைப் பார்த்துக்கொண்டு இருக்கிறாய், இதே வேளையில் அந்தக் கிழவனின் பையனும் குடிசைக்கு வெளியே நிலவு ஒளியில் உட்கார்ந்தபடிப் பழங்களைச் சுவைத்துக் கொண்டிருப்பான்; வெல்லம் கலந்த அரிசியை எதிர் பார்த்துக் கொண்டிருப்பான்,"

"கட்டாயம்" என்றேன் நான் மெல்ல. அண்ணாவின் பார்வை என் பக்கம் திரும்பியது. நான் அவரைக் கேலி செய்வதாக எண்ணி விட்டார்: அவருக்கு என் இயல்பு நன்றாகத்தெரியும். "அந்தக் கிழவனுக்கு நான் ஒரு ரூபாய் கொடுத்தது தவறென்றும், இதனால் அவன் குறுக்கு வழியில் போகத் தொடங்கி விடுவானென்றும் நீ நினைக்கலாம். ஆனால் நான் ஒரு

ரூபாய் கொடுத்ததற்காக அவன் எவ்வளவு களிப்படைந்திருப்பான், எத்தனை நாட்கள் இதை நினைவில் வைத்திருப்பான் எனபது உனக்குத் தெரியுமா ?'' என்றார்.

மற்ற நாட்களாயிருந்தால் அவர் பேச்சுக்குத் தக்க விடை கொடுத்திருப்பேன். ஆனால் அன்று என் வாய் அடைத்திருந்தது. ஒன்றும் பேசாமல் எழுந்து என் அறைக்குச் சென்றேன்; படுக்கையில் விழுந்தேன். அண்ணா, 'அவர் பேச்சு எனக்குப் பிடிக்கவில்லை' யென எண்ணியிருப்பார். சாப்பாட்டுக்குப் பின் 'பிரிட்ஜ்' ஆட்டம் நடந்த போது நான் அதில் கலந்து கொள்ளவில்லை. இவ்வளவு சிறிய பேச்சுக்கு இத்தனை சீற்றம் கொள்வானேன் என என் வீட்டார் வியந்திருப்பர்.

நான் அறையில் படுத்தபடிக் கூரையை நோக்கிக் கொண்டிருந்தேன். என்னென்னவோ எண்ணங்கள் என் மூளையைச் சுற்றி வட்ட மிட்டன. அன்றிரவு தூக்கம் பிடிக்காது பல நினைவுகளில் உழன்றிருந்தேன்.

காலையில் நான் மிகவும் சோர்வுற்றிருந்தேன். நாள்தோறும் காலையில் தேநீர் குடித்ததும் அண்ணாவுடன் உலவப் போவது என் வழக்கம். அன்று நான் வீட்டிலேயே இருக்க விரும்பினேன். தேநீர் கூட என்னறைக்கே கொண்டு வந்து விடும்படி வேலைக்காரனிடம் கூறினேன். இதைக் கேட்டதும் அண்ணா என் அறைக்கு வந்தார். நான் கண்ணாடி முன் நின்றுகொண்டு தலை சீவிக் கொண்டிருந்தேன். மனவருத்தத்தை முகக் குறிப்பால் மக்கள் எவ்வாறு அறிந்து கொள்கிறார்கள் என்பதையும் அப்போது தெரிந்து கொண்டேன்.

அறைக்குள் நுழைந்ததுமே, "அட, நேற்றிரவு நடந்த சிறிய நிகழ்ச்சிக்காக நீ இவ்வளவு சினம் கொண்டு விட்டாயா? சீக்கிரம் தேநீர் குடித்து விட்டுவா; அதிக தொலைவு உலவ உனக்கு விருப்பமில்லா விட்டால் சிறிது தூரமாவது போய் வருவோம்'' என்றார் அண்ணா.

நான் சாக்குப் போக்குக் கூறினால் அவர் கேள்விகளுக்கு விடை தர வேண்டியிருக்கும். விருப்பமின்றியே தேநீர் அருந்தி விட்டு அண்ணாவுடன் உலவி வர வெளியே கிளம்பினேன். நாங்கள் இருவரும் வீட்டுக்கு வெளியே வந்ததும், வாசலில் நின்று கொண்டிருந்த ஒரு கிழவன் அண்ணாவைக் கண்டு கை கூப்பினான். தலை தூக்கி அவன் ஏதோ சொல்ல முயன்ற போது அவனது பார்வை திடீரென என் மீது பட்டது. ஒன்றும் பேசாமலே ஏதோ கொடுவிலங்கைக் கண்டு விட்டது போன்ற அச்சத்துடன், நான்கடி பின்வாங்கினான். கிழவனின் அச்சத்தைக் கண்டு என் தமையனார் வியந்தார். அவரால் இதன் பொருளை அறிந்து கொள்ள இயலவில்லை. "என்ன தாத்தா, இவ்வளவு அதிகாலையிலே இங்கே எங்கே வந்தாய்?'' என்று அவனைக் கேட்டார்.

"ஐயா! உங்களுக்காகச் சில புதிய பழங்களைத் தோப்பிலிருந்து பறித்து வந்தேன்'' என்று விடையளித்தான் கிழவன்.

என்னை நோக்கி, "தம்பி! இந்தக் கிழவன் தான் நேற்று எனக்குப் பழங்கள் கொடுத்தான்'' என்றார் அண்ணா.

"ஐயோ! இந்தக் கிழவனைத் தான் நான் கீழே தள்ளிக் காயப்படுத்தினேன்!'' நான் மனத்துள் சொல்லிக் கொண்டேன்.

நான் பேசாமலிருந்ததாலும், அண்ணாவின் பேச்சாலும் கிழவனுக்குச் சிறிது துணிவு பிறந்தது. கூடையினின்று சில பழங்களை எடுத்து அண்ணாவிடம் கொடுக்க வந்த போது அவர் பார்வை அவன் கால்களிலிருந்த கட்டுகளின் மேல் பட்டது. அவர் கேட்டார். "என்ன தாத்தா, கால்களிலே என்ன கட்டு? நேற்று ஒன்றுமில்லையே?''

அவன் பணிவான குரலில், "ஐயா, நேற்று உங்களிடம் பணம் வாங்கிக் கொண்டு, அந்த மகிழ்ச்சியில் கண்ணை மூடிக் கொண்டு போய்க் கொண்டிருந்தேன். கிராமத்திற்குப் போகும் வழியில், வாய்க்காலின் மேல் ஒரு பாலம் இருக்கிறது. அங்கே கால் சறுக்கி விழுந்து விட்டேன்; இலேசாக அடிபட்டது'' என்றான்.

கிழவனைக் கண்ட போதே என் உள்ளத்துள் புயல் எழுந்தது. அவன்

பேச்சைக் கேட்டபோதோ என் உள நிலை சொல்ல முடியாததாகிவிட்டது. என்னையுமறியாமலே கூவினேன். 'இல்லை! கிழவன் பொய் சொல்கிறான்! உண்மையை மறைக்கிறான்! அவன் கால் சறுக்கி விழவில்லை!'' நான் அவனுடன் வீண் வம்பு செய்கிறேன் என்று எண்ணிவிட்டார் அண்ணா. என்னைத் தடுத்து, "ஒரு ஏழைக் கிழவன் மீது ஏன் வீண்பழி சுமத்துகிறாய்? பொய் சொல்லி அவனுக்கு என்ன கிடைத்துவிடப் போகிறது?'' என்றார்.

"கேளுங்களேன். நேற்று மாலை நான் காரில் போய்க் கொண்டிருந்த போது வேண்டுமென்றே இவனை 'மட்காடி'னால் இடித்துத் தள்ளினேன். அதனால் ஏற்பட்ட காயந்தான் இது'' என்று கூறினேன். கிழவன் வாயடைத்து நின்றான். அண்ணா வியப்பினால் என்ன கூறுவதென்றறியாது விழித்தார். நானே தன் குற்றத்தை ஒப்புக்கொண்ட பெருமையை எண்ணி மகிழ்ந்திருந்தேன்.

இயற்கை இவ்வுலகில் ஏழையை ஏன் பிறப்பித்தது என்ற உண்மையை அன்று நான் அறிந்து கொண்டேன்.

★

நடுங்குவது நல்லதுதான்!

குளிர் அதிகமாக இருக்கையில் நடுங்குவது நல்லது என்று வைத்தியர்கள் கருதுகிறார்கள். தன்னிச்சையற்ற அவ்வித நடுக்கம் முட்டாள்தனமாகத் தோன்றினாலும் கூட, உடம்பின் தசைகள் சூடு உண்டாக்குவதை அவை குறிக்கும். உண்மையிலேயே அத்தகைய சுறுசுறுப்பான நடுக்கத்தால், மனித உடல் சாதாரண சமயங்களை விட ஐந்து மடங்கு உஷ்ணத்தைப் பிறப்பிக்கிறதாம்!

தந்தி: குமரன் டெலிபோன்: { மில் 93 / ஆபீஸ் 588

குமரன் மில்ஸ் லிமிடெட்,

பூளைமேடு P.O. கோயமுத்தூர்.

நிறுவப்பட்டுள்ள கதிர்கள் ... 19,044

மேற்கொள்ளப்பட்டுள்ள விஸ்தரிப்பு ... 5,900

நாங்கள் உயர்தரமான 20s 36s 40s 60s 80s நிர். பருத்தி நூலும்,
20s நிர். ஸ்டேபிள் பைபர் நூலும் தயார் செய்கிறோம்.

எங்கள் நூலை
சென்னை ஆந்திர மாகாணங்களில்
மிகுதியாக உபயோகப்படுத்துகிறார்கள்.

Sri G. V. RAMASWAMY NAIDU &
Sri G. V. MUTHUSWAMY NAIDU
Committee of Directors.

197699

For Complete Range of Cotton Spinning Plant

TEXTOOL

CARDING ENGINES
RING SPINNING FRAMES
DRAWING FRAMES
REELING MACHINES
FLY FRAMES
BUNDLING PRESS

TEXTOOL DIESEL ENGINES

For Agricultural purposes

ENQUIRIES SOLICITED:

TEXTOOL COMPANY LIMITED

Post Box No. 221, Coimbatore (South India)

Telephone: 409 & 1409 *Telegrams: "TEXTOOLCO"*

மக்கள் விரும்பும்

ராமகிருஷ்ண

பீடிகள்

P.R. ஆறுமுகநாடார் & சன்ஸ்

முக்கூடல், திருநெல்வேலி ஜில்லா.



இந்தியா ஸிமெண்ட்ஸ் லிமிடெட் மதராஸ்-1.

தொழிற்சாலை : சங்கர்நகர், திருநெல்வேலி ஜில்லா

Regd. No. 6928 PUTHUMAI

தந்தி: 'ஜுவல்லர்ஸ்' போன் : 49

பவுன், தங்கம், வெள்ளி,

வைர நகைகளுக்கு

எல். கே. எஸ். ஜுவல்லர்ஸ்

திருச்சிராப்பள்ளி.

கிளைகள் : சென்னை, காயல்பட்டணம்,
யாழ்ப்பாணம் & கொழும்பு.

Edited and Published by K. T. Kosalram and Printed by J. Nadarajan, Manager, Mohan Ram Press, at 202, J. J. Khan Road, Madras-14.